இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 40 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 01 – திங்கள்கிழமை 18 செப்டம்பர் 2023 – சென்னை 16+4 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 40: Thiruvalluvar Year - 2054 - Purattasi 01 - Monday 18 September 2023 - Chennai 16+4 Pages ₹ 5.00



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (17.9.2023) வேலூர் மாநகர், பள்ளிகொண்டாவில் நடைபெற்ற "தி.மு.க. முப்பெரும் விழா"வில், பெரியார் விருதினை கி. சத்தியசீலன் அவர்களுக்கும், அண்ணா விருதினை க. சுந்தரம் அவர்களுக்கும், கலைஞர் விருதினை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருதினை திருமதி மலிகா கதிரவன் அவர்களுக்கும், பேராசிரியர் விருதினை ந. இராமசாமி அவர்களுக்கும் வழங்கிச் சிறப்பித்தார்கள். இவ்விழாவில், கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் முனைவர் க.பொன்முடி, ஆ.ராசா எம்.பி., அந்தியூர் செல்வராஜ் எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், துணை அமைப்புச் செயலாளர்கள் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., ஆஸ்டின், , வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ., வேலூர் மாநகரக் கழகச் செயலாளர் ப.கார்த்திகேயன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## ஒன்றியத்தில் நமது கூட்டணி ஆட்சி அமையுமானால் தமிழ்நாட்டிற்கு மேலும் வளம் சேர்க்க;

# முடியுமா? முடியாதா?

## வேலூரில் வெற்றிகரமாக நடைபெற்ற முப்பெரும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடுத்த வினா!

**வேலூர், செப். 18 -**

**"ஒன்றியத்தில் நமது கூட்டணி ஆட்சி அமையுமானால் தமிழ்நாட்டிற்கு மேலும் வளம் சேர்க்க முடியுமா? முடியாதா?" என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வேலூரில் லட்சக்கணக்கானோர் திரண்ட முப்பெரும் விழாவில் உரையாற்றும் போது வினா தொடுத்தார்.**

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (17-09-2023) வேலூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் விருதுகளை வழங்கி, ஆற்றிய உரை வருமாறு :-

இந்தியாவின் முதல் விடுதலைப் போர் நடப்பதற்கு 50 ஆண்டுக்கு முன்பே, இங்கு நம்முடைய பொதுச்செயலாளரும், பொருளாளரும் குறிப்பிட்டதைப்போல, விடுதலைக் கனல் தெறித்த ஊர் இந்த வேலூர். இந்தியாவின் முதல் விடுதலைப் போராட்டம் என்று 1857இல் நடந்த சிப்பாய்க் கலகத்தைச் சொல்வார்கள். ஆனால், 1806ஆம் ஆண்டு, ஜூலை 10ஆம் நாள் வேலூர் கோட்டையில் நிகழ்ந்த புரட்சியின் தொடக்கம்தான் இந்தியர்கள் இனியும் அடிமையாக வாழத் தயாராக இல்லை என்பதை பிரிட்டிஷ் ஆட்சிக்கு உணர்த்தியது. அத்தகைய வீரம் விளைந்த ஊரில் இந்த ஆண்டுக்கான கழக முப்பெரும் விழா நடைபெறுகிறது.

**வேலூர் மாவட்டத்துக்கு கலைஞர் அரசின் அடுக்கடுக்கான திட்டங்கள்!**

இங்கு சிப்பாய்க் கலகத்தின் நினைவுத் தூணைக் கலைஞர் நிறுவினார். வேலூர் நகராட்சியை மாநகராட்சி ஆக்கினார். திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துக்கு மிகப் பெரிய கட்டடம் கட்டித் தந்ததும், வேலூர் மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டு வந்ததும் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்! அத்தகைய தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் வேலூரில் முப்பெரும் விழாவை நடத்துவது மிகமிக பொருத்தமானது.

அதிலும் குறிப்பாக, நம்முடைய பொதுச் செயலாளர் அருமை அண்ணன் துரைமுருகன் அவர்களின் சொந்த மாவட்டம் இந்த வேலூர்! காந்தி இருக்கிறார். ஜெகத்ரட்சகன் இருக்கிறார். அவர்களுக்கும் அந்த உரிமை உண்டு. அதேபோல பல முன்னோடிகளும் அந்த உரிமையைக் கொண்டாட முடியும். ஆனால் அதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தது போல அண்ணன் துரைமுருகன் அவர்கள் இந்த மாவட்டத்தோடு எவ்வாறு ஒன்றி, பிணைந்து, இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை எல்லோரும் அறிவார்கள். அவரே மேடைகளில் சொல்வார்... என்னைக் கால்சட்டைப் பையனாக பார்த்தேன்... இன்று தலைவராகப் பார்க்கிறேன் என்று சொல்வார். அப்படிப்பட்ட நான் இப்போது கழகத் தலைவராவும் அவர் கழகத்தின் பொதுச் செயலாளராவும் இருப்பது பெருமைக்குரியது. இருவருமே தலைவர் கலைஞரால் வளர்க்கப்பட்டவர்கள் வார்ப்பிக்கப்பட்டவர்கள் என்பதுதான் எங்களுக்குக் கிடைத்த பெருமை!





**எனக்கு அறிவுத் துணை, அருமைத் துணை அண்ணன் துரைமுருகன் அவர்கள்!**

தலைவர் கலைஞர் அவர்களும் இனமானப் பேராசிரியர் அவர்களும் அடுத்தடுத்து நம்மை விட்டுப் பிரிந்த நேரத்தில் இருவருமாக இருந்து எனக்கு அறிவுத் துணையாகவும் அருமைத் துணையாகவும் ஆலோசனைகளை வழங்கிக் கொண்டு இருக்கக் கூடியவர்தான் அண்ணன் துரைமுருகன் அவர்கள். அனுபவத்தைவிட சிறந்த பாடப்புத்தகம் வேறு எதுவும் இருக்க முடியாது. அப்படிப்பட்ட அனுபவப் பாடத்தை அவர் எனக்கு தொடர்ந்து வழங்கிக்கொண்டு வருகிறார். மிக முக்கியமான பிரச்சினை எதுவாக இருந்தாலும் பழைய செய்தி அல்லது பழைய நிகழ்ச்சியை அவர் நினைவூட்டி வழிநடத்துவார். அப்படிப்பட்ட கழகப் பொதுச்செயலாளரின் மாவட்டத்தில் இந்த ஆண்டுக்கான முப்பெரும் விழா மாநாடுபோல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த மாபெரும் விழாவை சீரோடும் சிறப்போடும் எழுச்சியோடும் பிரம்மா ண்டமாகவும் ஏற்பாடு செய்திருக்கும் வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் நம்முடைய அருமை நண்பர் நந்தகுமார் அவர்களையும் - அவருக்குத் துணை நின்றிருக்கும் மாவட்டக் கழக நிர்வாகிகளையும் நான் மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். நந்தகுமார் சுறுசுறுப்பாகவும், துறுதுறு என்றும் பணியாற்றுபவர். சிரித்த முகத்தோடு சீரிய பணிகளை ஆற்றக் கூடியவர்.

> **"இன்றைக்கு தமிழ்நாட்டின் வளர்ச்சி தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சி தமிழினத்தின் வளர்ச்சி பலருக்கும் பொறாமை ஏற்படுத்தும் வளர்ச்சியாக இருக்கிறது. தமிழ்நாடு என்ற மாநிலத்தை அதற்கான உரிமைகளைச் சிதைப்பது மூலமாக, நம்முடைய மாநில மக்களின் வாழ்க்கையை அழிக்கப் பார்க்கிறார்கள். அதைத்தான் பட்டவர்த்தனமாக பாரதீய ஜனதா கட்சி செய்துகொண்டு வருகிறது."**

அதேபோல நம்முடைய மாநகரச் செயலாளர் கார்த்திகேயன் இல்லாமல் இங்கு மட்டுமில்லை, எங்கேயும் நாம் மாநாடு நடத்த முடியாது. அந்தளவுக்கு அவரது ஒலிபெருக்கிதான் கழகத்தின் குரலை கம்பீரமாகக் கொண்டு சேர்த்துக்கொண்டு இருக்கிறது. வேலூர் இரட்டையர்களாக இருந்து இருவண்ணக் கொடியைக் கட்டிக் காத்துக் கொண்டு வருகிற நந்தகுமார் கார்த்திகேயன் ஆகிய இருவருக்கும் உங்கள் அனைவரின் சார்பில் கழகத் தலைவர் பொறுப்பை நான் ஏற்றிருக்கின்ற காரணத்தால் என்னுடைய நன்றியை, வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் காஞ்சி தந்த வள்ளுவன் பேரறிஞர் அண்ணா ஆகியோர் பிறந்த நாளையும் தமிழினத்தின் விடிவெள்ளியாக உதித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க நாளையும் இணைத்து முப்பெரும் விழாவாகக் கொண்டாட வேண்டும் என்று 1985 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அறிவித்தார். அன்று முதல் இன்று வரை தொடர்ந்து நாம் இந்த விழாவை ஒவ்வொரு ஆண்டும் நடத்திக்கொண்டு வருகிறோம்.

இந்த ஆண்டுக்கு இன்னும் இரண்டு கூடுதல் சிறப்புகள் இருக்கிறது. நம்மையெல்லாம் ஆளாக்கிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். அதேபோல இந்த மாபெரும் இயக்கத்தின் பவளவிழா இன்றிலிருந்து தொடங்குகிறது.

**கொட்டும் மழையில் பிறந்த கழகம், அதே இளமை, வேகத்தோடு விளங்குகிறது!**

"நான் சாமானியன் - மிகமிகச் சாமானியன். எனக்கடுத்த தளநாயகர்கள் எத்தனை பேர் வேண்டும்? இதோ எண்ணிக் கொள்!" என்று சொல்லி தனது தம்பிமார்கள் பட்டாளத்துக்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் சூட்டினார் பேரறிஞர் அண்ணா அவர்கள். கொட்டும் மழையில் பிறந்ததால் என்னவோ, உடனே வளர்ந்தது கழகம். இன்று ஆலமரமாக வளர்ந்திருக்கும் கழகத்தின் பவளவிழாவை வரும் ஓராண்டுக்கு நாம் கொண்டாடப்போகிறோம். அந்த வகையில் பார்த்தால், இது ஐம்பெரும் விழா என்று சொல்லத்தக்க வகையில் சிறப்பாக இன்றைக்கு நடந்துக்கொண்டு இருக்கிறது.

ஒரு அரசியல் இயக்கம் 75 ஆண்டு காலம் நின்று நிலைத்திருப்பது சாதாரணமானது இல்லை. பெரிய பெரிய தலைவர்கள் உருவாக்கிய இயக்கமெல்லாம் அவர்கள் மறைந்தபோது அவர்களோடு சேர்ந்து மறைந்த எத்தனையோ வரலாறுகளை நாம் படித்திருக்கிறோம். ஆனால், தோன்றிய காலத்தில் எப்படி இருந்ததோ அதே இளமையோடு அதே வேகத்தோடு அதே விவேகத்தோடு அதே உழைப்போடு அதே உணர்வோடு இன்று வரை இந்த 75ஆவது ஆண்டிலும் கழகம் செழிப்போடு இருக்கக் காரணம் - எதிரே அமர்ந்திருக்கும் நீங்களும், தமிழ்நாடெங்கும் இருக்கும் கோடிக்கணக்கான கழகத் தொண்டர்களும்தான்! இந்த வேலூர் கோட்டை முதல் குமரிக் கடல் வரைக்கும் இந்தக் கழகத்தைக் கட்டி ஆள்பவர்கள் தொண்டர்கள்தான்.

**கழகத்தின் அடித்தளம்; கோடிக்கணக்கான உடன் பிறப்புகள்!**

உங்கள் எல்லோரையும் 'தம்பி' என்று அழைத்தார் பேரறிஞர் அண்ணா. 'உடன்பிறப்பே' என்று அழைத்தார் கலைஞர். நான் உங்களில் ஒருவன். நான் வேறு நீங்கள் வேறு இல்லை. உங்களால் உருவாக்கப்பட்டவன் நான். தொண்டர்களால் தலைவனாவும் தொண்டர்களால் முதலமைச்சராவும் ஆக்கப்பட்டவன் நான். கழகத்தின் எந்தப் பொறுப்புக்கும் ஆசைப்படாமல் அதிகாரத்தின் எந்தப் பதவியையும் அனுபவிக்காமல் கருப்புச் சிவப்புக் கொடியைப் பிடித்திருந்தால் போதும் கருப்பு சிவப்பு வேட்டியைக் கட்டியிருந்தால் போதும் என்ற உணர்வோடு உயிர் வாழும் தொண்டர்கள் இருக்கும் திசை நோக்கி நான் வணங்குகிறேன்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## வேலூர் கோட்டை முதல் குமரிக்கடல் வரை கழகத்தைக் கட்டி ஆள்பவர்கள் தொண்டர்கள்தான்!

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கட்கிழமை 18-09-2023

# பழனிசாமியின் கதறலும் பதறலும்

**'மகளிருக்கு ஆயிரம் ரூபாய் ஏன் தரவில்லை?' என்று இதுவரை கேள்வி எழுப்பி வந்தார் பழனிசாமி. கொடுக்கத் தொடங்கியதும், 'எதற்காகக் கொடுக்கிறீர்கள்? தேர்தலுக்காக கொடுக்கிறீர்களா?' என்று கதறுகிறார். பதறுகிறார். கண்டிக்கிறார். குட்டிக்கரண அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்.**

**ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் அவர்களது வங்கிக் கணக்கில் விழுந்துவிட்டதே... அவர்கள் அனைவரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை வணங்கத் தொடங்கி விட்டார்களே என்பது தான் பழனிசாமியின் கதறல் அறிக்கைக்குக் காரணம்.**

ஆயிரம் ரூபாய் கொடுத்ததை நாக்கில் தேன் தடவுவதாகவும், இதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும், வாங்காதவர்களுக்கு பட்டைநாமம் போட்டுவிட்டதாகவும், நாடாளுமன்றத் தேர்தலுக்காகத் தான் தருவதாகவும், இதன் மூலமாக மகளிர் வாக்குகளை பெற நினைப்பதாகவும், தி.மு.க.வின் பகல் கனவு பலிக்காது என்றும், இது ஏமாற்று வேலையாகும் என்றும், எல்லாரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்ற முடியாது என்றும் பழனிசாமி அறிக்கை சொல்கிறது. பழனிசாமி எவ்வளவு பதற்றத்தில் இருக்கிறார் என்பதை இதன் மூலமாக அறியலாம்.

**'ஆயிரம் ரூபாய் ஏன் தரவில்லை?' என்று கேட்டுக் கொண்டிருந்தவர் இவர் தான். வாக்குறுதி என்னாச்சு? என்று கேட்டவர் இவர் தான். 'பொய்யான வாக்குறுதியைக் கொடுத்து ஆட்சிக்கு வந்துவிட்டீர்கள்' என்று சொன்னதும் இவர் தான். இப்போது ஆயிரம் ரூபாய் கொடுக்கத் தொடங்கியதும், முதல் ஆளாக பழனிசாமி தான் வரவேற்று அறிக்கை கொடுத்திருக்க வேண்டும். அந்த பெருந்தன்மையை பழனிசாமியிடம் எதிர்பார்க்க முடியாது. 'உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்துவிட்டு' வந்த வரலாறு அவருடையது. அதை அவரிடம் இருந்து எதிர்பார்க்க முடியாது. சும்மா இருந்திருக்கக் கூடாதா? அறிக்கை என்ற பெயரால் இப்படியா வயிற்றெரிச்சலைக் கொட்டுவது?**

'ஐயகோ! கோடிக்கணக்கான மகளிர் கூட்டத்தை மொத்தமாக ஈர்த்து விட்டதே' என்ற பொறாமையும் வஞ்சகமும் தான் அவரது அறிக்கையில் வெளிப்படுகிறதே தவிர வேறல்ல.

**'எல்லோருக்கும் கொடுப்பதாகச் சொன்னீர்களே?' என்கிறார் பழனிசாமி. அனைவர்க்கும் வீடு என்றால், வீடு இல்லாதவர்க்கு வீடு என்றே பொருள். அனைவர்க்கும் வேலை என்றால், வேலை இல்லாதவர்க்கு வேலை என்றே பொருள். ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது அவசியமானவர்கள் அனைவருக்கும் என்பதே பொருள்.**

இந்த திட்டத்தில் இணைவதற்காக ஒரு கோடியே 63 லட்சம் பேர் தான் விண்ணப்பம் செய்து கொண்டார்கள். அதில் 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் கிடைக்காதவர்கள், மறுபடியும் விண்ணப்பிக்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

'இந்த திட்டத்தின் பயன் கிடைக்காதவர்கள், கோரிக்கைகள் ஏன் ஏற்கப்படவில்லை என்ற காரணத்தை தெரிவித்து அவர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்படும். அதன்பிறகு அவர்கள் மறுபடியும் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது' என்று முதலமைச்சர் அவர்களே அறிவித்துள்ளார்கள். எனவே, முதல் கட்டமாக வாய்ப்பை பெற இயலாதவர்கள், அடுத்து விண்ணப்பிக்க வாய்ப்பு தரப்பட்டுள்ளது. எனவே, அவர்களுக்காக பேசுவதைப் போல பழனிசாமி நடிக்கத் தேவையில்லை.

**'28 மாதமாக ஏன் தரவில்லை' என்று கேட்கிறார் பழனிசாமி. அதற்கான உண்மையான காரணம் அவருக்கே தெரியும். அரசின் நிதிநிலைமையை அதல பாதாளத்துக்குள் தள்ளிவிட்டுப் போனவரே பழனிசாமி தான்.அவரது ஆட்சி கால நிதிநிலைமையை வெள்ளை அறிக்கையாகவே தி.மு.க. அரசு வெளியிட்டதே. மறந்து போய்விட்டதா பழனிசாமிக்கு?**

★ 2011-12 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதார நிலைமை உச்சநிலையில் இருந்தது. அது கடந்த 2011-21 கால அ.தி.மு.க.வின் பத்தாண்டு காலத்தில் மந்த நிலைமையை அடைந்துள்ளது.

★ அதிலும் குறிப்பாக 2013-14 ஆண்டில் இருந்து தமிழ்நாடு அரசின் நிதி நிலைமை மிக மோசமான நிலையை அடைந்து வருகிறது.

★ 2006-13 காலக்கட்டத்தில் ஏழு ஆண்டுகளில் 5 ஆண்டுகள் தமிழ்நாடு அரசு உபரி வருவாயை அடைந்திருந்தது. 2013 முதல் பற்றாக்குறை தொடர்ந்து வருகிறது.

★ 2017-19 காலக்கட்டத்தில் இந்தியாவிலேயே அதிகளவு வருவாய் பற்றாக்குறை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு ஆக்கப்பட்டு விட்டது.

★ 2016- 21 அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிதிப்பற்றாக்குறையில் வருவாய் பற்றாக்குறை விகிதம் என்பது 52.48 சதவிகிதம் ஆகும். இது முந்தைய ஆட்சியில் 2011 ஆம் ஆண்டில் 14.95 சதவிகிதமாக இருந்தது.

★அ.தி.மு.க. ஆட்சியின் உண்மையான செலவுகள் கட்டுப்படுத்தப்படவில்லை. பற்றாக்குறைகள் மறைக்கப்பட்டுள்ளது.

★ ஒட்டுமொத்தமாக இன்றைய கடன் என்பது 5,70,189 கோடி ரூபாய் ஆக இருக்கிறது.

**- ஒட்டுமொத்தமாகச் சொல்வதாக இருந்தால் தமிழ்நாட்டின் நிதிநிலைமை, நிலையற்ற தன்மையில் இருப்பதாக அந்த வெள்ளை அறிக்கை வெளிச்சம் போட்டு காட்டியது. பழனிசாமியின் கையாலாகாததனத்தால் தான் உடனடியாக வழங்க முடியவில்லை.**

"சமீபத்தில் முடிவடைந்த தேர்தலின் போது அளித்த வாக்குறுதிகளை மாற்றியமைக்கவோ அல்லது கைவிடுவதற்கோ ஒரு காரணத்தை உருவாக்கும் முயற்சியாக இந்த அறிக்கை இல்லை" - என்று கொட்டை எழுத்தில் 125 ஆவது பக்கத்தில் ஆறாவது, ஏழாவது, எட்டாவது வரியாக உள்ளது. பழனிசாமியைக் காரணமாகக் காட்டி கொடுத்த வாக்குறுதிகளை தவிர்க்க நினைக்கவில்லை முதலமைச்சர். 'நான் மறக்கவில்லை, உறுதியாக வழங்குவேன்' என்று பல்வேறு மேடைகளில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி வந்தார்கள். சொன்னபடி கொடுத்துள்ளார்கள்.

**மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடுக்கிறார்கள். ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிர் பெறுகிறார்கள். இடையில் பழனிசாமி வாய்ச்சவடால் விடாமல் இருந்தால் போதும்!**

## டெல்லியில் 120 கி.மீ. வேகத்தில் மெட்ரோ ரெயில் இயக்கம்..!

புதுடெல்லி, செப். 18-

டெல்லியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் 120கி.மீ. வேகத்தில் மெட்ரோ ரெயில் இயக்கப்படுகிறது.

இது நாட்டிலேயே மெட்ரோ ரெயிலின் அதிகபட்ச வேகமாகும். டெல்லியில் விமான நிலைய வழித்தடத்தில் மெட்ரோ ரெயில் இந்த வேகத்தில் இயக்கப்படும்.

தங்கள் நிறுவன என்ஜினீயர்களின் மிகக் கவனமான திட்டமிடல் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளின் ஒத்துழைப்பால் இது சாத்தியமாகி உள்ளது என டெல்லி மெட்ரோ ரெயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.




தந்தை பெரியார் அவர்களின் 145ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (17.9.2023) வேலூரில், வேலூர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்த குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### காவிரிப் பிரச்சினை: அமைச்சர் துரைமுருகன் தலைமையில் - இன்று

# ஒன்றிய அமைச்சரைச் சந்திக்கும் எம்.பி.க்கள் குழு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப்.18–

தமிழ்நாட்டுக்குச் சேரவேண்டிய நீரை கர்நாடகம் உடனடியாக விடுவித்திட ஒன்றிய அரசு உத்தரவிட வேண்டும் என வலியுறுத்தி, ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் அவர்களிடம் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தலைமையில் தமிழ்நாட்டின் அனைத்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று (18.09.2023) கோரிக்கை மனு அளிப்பார்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசின் ஜல் சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களை தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டின் அனைத்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினருடன் இன்று (18.09.2023) மாலை சந்தித்து கர்நாடக அரசு இதுவரை தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய காவிரி நீரை அளித்திட காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு தேவையான அறிவுரைகள் வழங்கிடக் கோரி நேரில் சந்தித்து வலியுறுத்துமாறு அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு (திமுக), செல்வி.எஸ்.ஜோதிமணி (இ.தே.கா), முனைவர் மு.தம்பித்துரை மற்றும் என்.சந்திரசேகரன் (அ.இ.அ.தி.மு.க.), கே.சுப்பராயன் (சி.பி.ஐ.), பி.ஆர். நடராசன் (சி.பி.எம்.), வை.கோ. (ம.தி.மு.க.), முனைவர் தொல் திருமாவளவன் (வி.சி.க.), டாக்டர் அன்புமணி ராமதாஸ் (பா.ம.க.), ஜி.கே.வாசன் (த.மா.கா.), கே. நவாஸ் கனி (இ.யூ.மு.லீ.) மற்றும் ஏ.கே.பி. சின்னராஜ் (கொ.ம.தே.க.) ஆகியோர் ஒன்றிய அரசின் நீர்வளத்துறை அமைச்சர் அவர்களை சந்திக்க உள்ளனர்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத் தொகையில்

# பயனாளிகளிடம் வங்கிகள் பிடித்தம் செய்யக்கூடாது!

## நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!

சென்னை, செப்.18-

கலைஞர் மகளிர் உரிமை திட்ட பயனாளிகளிடமிருந்து வங்கிகள் பிடித்தம் செய்யக் கூடாது என தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15ம் தேதி தமிழக வரலாற்றிலேயே இல்லாத வகையில் 1.065 கோடி மகளிருக்கு, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மகளிர் உரிமை தொகை வழங்கும் நிகழ்வை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். திட்டத் தொடக்கத்தின் முதல் நாளே ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிரின் வங்கிக் கணக்கில் உரிமைத்தொகை வரவு வைக்கப்பட்டது ஒரு மகத்தான சாதனை நிகழ்வாகும். இது குறித்து நாடே பாராட்டுகிறது. தமிழ்நாட்டின் இத்திட்டத்தைப் பற்றி மற்ற மாநிலங்களும் வியந்து பாராட்டி வருகின்றன.

இந்நிலையில் ஆங்காங்கே சில குறைகள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. மகளிரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்ட உரிமை தொகையை வங்கிக்கான சேவை கட்டணம், ஏற்கனவே வாங்கிய கடன் ஆகியவற்றுக்கு சில வங்கிகள் நேர் செய்து கொள்வதாக புகார்கள் வரப்பெற்றுள்ளன. இது மிகவும் வருந்தத்தக்க நிகழ்வாகும். இதுகுறித்து மாநில வங்கிகள் குழு மத்தின் கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்படும் உ ரி மை த் தொகையை வங்கிகள் பிடித்தம் செய்யக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் சில வங்கிகளில் இந்த அறிவுறுத்தல் பின்பற்றப்படவில்லை என்பது ஏற்கத்தக்கதல்ல.

தமிழ்நாடு அரசு வழங்கும் மகளிர் உரிமைத் தொகையை வங்கிகள் தங்களது நிர்வாக செலவினங்களுக்கு நேர் செய்யக்கூடாது என்று மாநில அரசுக்கும் வங்கிகளுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. ஒப்பந்தங்களை மீறும் வங்கிகளின் வங்கிகளின் பரிவர்த்தனைகள் வேறு வங்கிகளுக்கு மாற்றப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு அரசு மகளிரின் நல்வாழ்வுக்காக வழங்கும் மகளிர் உரிமைத் தொகையை, வங்கிகள் தங்களது நிர்வாக காரணங்களுக்காக பிடித்தம் செய்யக்கூடாது என்பது குறித்து ஒன்றிய நிதி அமைச்சருக்கு கடிதம் எழுதப்படும்.

மகளிர் உரிமைத் தொகையில் பிடித்தம் செய்யப்பட்டிருந்தால் அது குறித்து புகார் அளிப்பதற்கு முதல்வரின் முகவரி உதவி மைய தொலைபேசி எண் 1100ஐ அழைத்து புகார் அளிக்கலாம். மகளிர் அளிக்கப்படும் இப்புகார்கள் குறித்து விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்துவதே நோக்கம்!

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உறுதி!

*ஐதராபாத், செப்.18-*

*காங்கிரஸ் செயற்குழு கூட்டம் தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் நேற்று நடைபெற்றது. இதில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பங்கேற்றார். மேலும், காங்கிரஸ் மூத்த தலைவர்கள் பலர் பங்கேற்றனர்.*

*கூட்டத்தில் பேசிய மல்லிகார்ஜுன கார்கே, 2024 நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்துவதே காங்கிரசின் நோக்கமாக இருக்க வேண்டும். நாட்டில் மாற்று அரசை அமைக்க அயராது உழைக்க வேண்டும். புதிய பிரச்சினைகளை கொண்டு வந்து முக்கிய மான அடிப்படை பிரச்சினைகளில் இருந்து மக்களை மோடி அரசு திசை திருப்புகிறது.*

*சமீபத்தில் மும்பையில் இந்தியா கூட்டணி கட்சி கூட்டம் நடந்த போது, மோடி அரசு ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து ஆராய குழுவை அமைத்தது. அனைத்து மரபுகளுக்கும் முரணாக இந்த குழுவில் முன்னாள் ஜனாதிபதி சேர்க்கப்பட்டுள்ளார். நமது தனிப்பட்ட நலன்களை ஒதுக்கிவைத்துவிட்டு ஓய்வின்றி நாம் உழைக்க வேண்டும். மேலும், நமது தனிப்பட்ட வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு கட்சியின் வெற்றியை முன்னிலைப்படுத்த வேண்டும். ஜனநாயகத்தை காப்பாற்ற இந்த சர்வாதிகார அரசை துடைத்தெரிய நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்' என்றார்.*



சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் நிகழ்ச்சியினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., மேயர் பிரியாராஜன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, பகுதிச் செயலாளர்கள் எஸ்.மதன் மோகன் எம்.சி., ஏ.ஆர்.பி.எம். காமராஜ் எம்.சி. உள்ளிட்ட கழகத்தினர், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## சேலம் - இளைஞர் அணி மாநில மாநாட்டை வரலாற்றுச் சிறப்பு மிக்க மாநாடாக நடத்திக் காட்டுவோம்!

# நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி - இளைஞர் அணி சார்பில் மாபெரும் கையெழுத்து இயக்கம்!

## வேலூரில் நடைபெற்ற இளைஞர் அணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் - இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

வேலூர்,செப்.18-

**வேலூரில், நேற்று காலை - மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "சேலத்தில் கழக இளைஞர் அணி மாநில மாநாட்டை வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாடாக நடத்தி காட்டுவோம்!" என்றும், 'நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி - கழக இளைஞர் அணி சார்பில் மாபெரும் கையெழுத்து இயக்கம் நடத்தப்படும்' என்றும் குறிப்பிட்டார்.**

தொகுதி வாரியாக கலைஞர் நூலகம் அமைப்பது, மாவட்டந்தோறும் மாரத்தான் போட்டிகளை நடத்துவது, பேச்சுப் போட்டி நடத்தி 100 இளம் பேச்சாளர்களைத் தேர்வு செய்வது என முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு கழக இளைஞர் அணிக்கு தலைமைக் கழகம் வழங்கியுள்ள பணிகளை மேற்கொள்வது, இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டுப் பணி முன்னேற்பாடுகள் குறித்து கலந்தாலோசனை செய்ய இளைஞர் அணியின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம் வேலூரில் நேற்று (17.09.2023) நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தை தலைமையேற்று நடத்திய இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூட்டத்தின் முடிவில் ஆற்றிய உரை வருமாறு:

இது பத்தரை மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய நிகழ்ச்சி. காலதாமதமாக ஆரம்பமாகியுள்ளது. நேற்று கோயம்புத்தூரில் நிகழ்ச்சிகள் எல்லாம் முடித்துவிட்டு, நள்ளிரவே இங்கு நான் வந்திருக்க வேண்டியது. மழையினால் 1.30 மணி நேரம் விமானம் தாமதம். அதனால் சென்னையில் இருந்து தாமதமாகத்தான் கோயம்புத்தூர் சென்றேன்.

அங்கு ஒரே ஒரு திருமண நிகழ்ச்சிக்குத்தான் தேதி வாங்கி இருந்தார்கள். அங்கே போன பிறகு தான் 'இன்னும் இரண்டு திருமண நிகழ்ச்சிகளில் நீங்கள் கலந்துகொண்டே ஆகவேண்டும்' என்று சொன்னார்கள். கழக நிகழ்ச்சி, கழகக் குடும்பத்தின் நிகழ்ச்சி என்பதால் என்னால் தவிர்க்கமுடியவில்லை.

கோவை நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு நேற்று நள்ளிரவு சேலத்தில் தங்கிவிட்டு, இன்று காலை பெரியார் பிறந்தநாளை முன்னிட்டு சேலத்தில் உள்ள சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு, இங்கு வருவதற்குத் தாமதமாகிவிட்டது.

இருந்தாலும், அந்தத் தாமதத்தையெல்லாம் தாங்கிக் கொண்டு பொறுமையாகக் காத்திருந்த உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏற்கனவே அறிமுகக் கூட்டத்தில் உங்கள் எல்லோரையும் நான் அண்ணா அறிவாலயத்தில் சந்தித்தேன். அதன் பிறகும் காணொலிக்காட்சி வழியாகத் தொடர்ந்து சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், இந்த அமைப்பாளர் கூட்டம் மிக மிகச் சிறப்பு வாய்ந்த கூட்டம்.

இது, தந்தை பெரியாரின் பிறந்த நாளில் நடக்கக்கூடிய அமைப்பாளர் கூட்டம். அதுமட்டுமல்ல, மிகச் சிறப்பு வாய்ந்த முப்பெரும் விழா நடைபெறுகின்ற அதே நாளில் நடைபெறுகின்ற ஒரு அமைப்பாளர் கூட்டம்.

கலைஞர் நூற்றாண்டைப் பொறுத்தவரை `கலைஞர் நூலகம்', `கலைஞர் நூற்றாண்டு மாரத்தான் போட்டி', `நூறு சிறப்பான இளம் பேச்சாளர்களை அடையாளம் காண்பதற்கான பேச்சுப் போட்டி' ஆகிய மூன்று தொடர் நிகழ்ச்சிகளை நடத்த, தலைவர் அவர்கள் நமக்குக் கட்டளையிட்டார்கள். இதுகுறித்து ஏற்கனவே பலமுறை நாம் காணொலிக்காட்சிகளிலே கலந்து பேசியுள்ளோம். அதைத் தொடர்ந்து இன்று நேரில் சந்தித்து ஆலோசனை செய்துள்ளோம்.

### நூலகங்களுக்கு இடங்கள் தேர்வு செய்த துணைச் செயலர்களுக்கு வாழ்த்து!

இந்தச் சமயத்தில் கலைஞர் நூலகம் குறித்து, துணைச் செயலாளர் இளையராஜா பேசும்பொழுது, தன்னுடைய மண்டலத்தில் 20 தொகுதிகளில் 13 இடங்களில் இடம் தேர்வு செய்து இருப்பதாகக் கூறினார். அவருக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

ஏற்கனவே, அவருடைய மண்டலத்துக்கு உட்பட்ட டெல்டா மாவட்டங்களில் நான்கு நாட்கள் பயணம் செய்து, மாநாட்டுக்கான இளைஞர் அணிச் செயல் வீரர்கள் கூட்டத்தை நடத்தி முடித்து விட்டோம். அதனால் உடனடியாக மீண்டும் அந்த மாவட்டத்திற்கு நான் வருவதென்பது சிரமம்.

அதனால் அந்த மாவட்டங்களில் அமைக்கவுள்ள கலைஞர் நூலகங்களை மாவட்ட அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்களை வைத்து, மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை வைத்து நீங்களே தொடங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். அந்த மாவட்டத்திற்கு அந்தப் பகுதிக்கு நான் வரும்போது அந்த நூலகங்களைப் நான் பார்வையிடுகிறேன்.

இந்தச் சமயத்தில் சகோதரர் இளையராஜா அவர்களுக்கு நான் தனிப்பட்ட முறையில் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். அவருடைய மண்டலத்திலே செயல்வீரர்கள் கூட்டத்தை மிகச் சிறப்பாக நடத்திக் காட்டினார் சகோதரர் இளையராஜா அவர்கள். மாவட்டச் செயலாளர்கள் இளைஞர் அணி நிர்வாகிகளுடன் மிகச்சிறப்பாக ஒருங்கிணைத்து வெற்றிகரமாகச் செயல்வீரர்கள் கூட்டங்களை அங்கு நடத்தி முடித்து இருக்கிறோம்.

நான் அங்கு பயணம் செய்த நான்கு நாட்களும் சகோதரர் இளையராஜா அவர்கள் தூங்கினாரா என்பதுகூட தெரியாத அளவிற்கு ஒவ்வொரு செயல் வீரர்கள் கூட்டத்தையும் அவ்வளவு சிறப்பாக ஒருங்கிணைத்தார். அதற்கு இந்த நேரத்திலே அவருக்கு என்னுடைய பாராட்டுகள்.

அதேபோல் சகோதரர் ஜோயல் அவர்களின் சென்னை மண்டலத்துக்கு உட்பட்ட மாவட்டங்களில் ஐந்து தொகுதிகளில் எட்டு இடங்களில் நூலகத்திற்கான இடங்களைத் தேர்வு செய்துள்ளார்கள். சென்னையில் நூலகம் என்றால், அதன் பணிகள் முடிந்ததும் எப்போது சொன்னாலும் உடனே தேதி கொடுத்து திறந்து வைத்து விடுகிறேன். அவரின் மண்டலத்தில் உள்ள ஆறு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகளும் மாநாட்டு நிதி அளித்துள்ளனர். அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாநாட்டு நிதிக்காக நாம் யாரையும் வற்புறுத்தத் தேவையில்லை. விருப்பப்பட்டு நிதி அளித்தால், அவர்கள் நிதி அளிக்கலாம். அவை கோடிகளில் இலட்சங்களில் இருக்கவேண்டும் என்று அவசியமில்லை. இங்கு பிரகாஷ் அவர்கள் பேசும்போதுகூட பொன்னாடைகளைத் தவிர்க்க வேண்டும். மாநாட்டுக்கு நிதி கொடுங்கள் என்று சொன்னார். எனவே சிறிய தொகையாக இருந்தாலும், மாநாட்டு நிதியாக இளைஞர் அணி வளர்ச்சி நிதியாக நீங்கள் அளிக்கலாம். அது ஒரு நல்ல காரியத்திற்காகத்தான் பயன்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சகோதரர் இன்பா - தனது மண்டலத்தில் ஐந்து கழக மாவட்டங்களில் நூலகம் அமைக்க இடம் தயார் என்று சொல்லிருக்கிறார். நான் வரும் 20, 21 ஆகிய தேதிகளில் மதுரையில் இருக்கின்றேன். அதற்குள் அந்த நூலகப் பணிகள் முடிந்திருந்தால், முதல் கலைஞர் நூலகத்தை மதுரையிலே நாம் திறந்து விடலாம்.

### கலைஞர் சிலைகளுக்கு அருகிலேயே நூலகங்கள் - பராமரிக்க எளிது!

அதேபோல் கடலூர், விழுப்புரம், திருவள்ளூர் மாவட்டங்களில் இடம் பார்த்துவிட்டதாக சகோதரர் மாலிக் சொல்லி இருக்கிறார். அதேபோல் பிரகாஷ் நீலகிரி, கோவை வடக்கு, ஈரோடு தெற்கு ஆகிய மாவட்டங்களில் இடம் தயாராக இருப்பதாகவும் சொல்லி இருக்கிறார்.

சகோதரர் பிரகாஷ் அவர்கள் கடந்த 'ஸூம்' கால் மீட்டிங்கில் பேசும் பொழுது ஒரு நல்ல கருத்தைச் சொல்லி இருக்கிறார். தலைவர் அவர்கள், 234 தொகுதிகளிலும் நம்முடைய கலைஞருடைய திருவுருவச் சிலையை அமைக்க உள்ளார். சில தொகுதிகளில் ஏற்கனவே திறந்து வைத்தும் விட்டோம். இனிமேல் அப்படி சிலை அமைக்கும் பொழுது, அந்தச் சிலைக்குப் பக்கத்திலேயோ அல்லது அந்தச் சிலைக்குக் கீழேயோ இந்த நூலகம் அமைந்தால், அந்த நூலகத்தைப் பராமரிப்பதற்கு நமக்கு வசதியாக இருக்கும் என்று அந்த நல்ல கருத்தைச் சொல்லி இருக்கிறார். நானும் கண்டிப்பாக அனைத்து மாவட்டச் செயலாளர்களிடத்திலும் இந்தக் கருத்தை சொல்ல இருக்கின்றேன்.

மண்டலப் பொறுப்பாளர்கள் பிரபு, ராஜா, ஆனந்தகுமார் ஆகியோர் சில தினங்களில் இடங்களைத் தேர்வு செய்துவிட்டு, எனக்குச் சொல்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் இங்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

சீனிவாசன், கிருஷ்ணகிரி கிழக்கில் ஒரு இடம் பார்த்திருப்பதாகக் கூறினார். வருகின்ற 25ஆம் தேதி கிருஷ்ணகிரி செல்லும் பொழுது அதைத் திறந்து வைக்க நான் நேரம் ஒதுக்கி உள்ளேன்.

நாம் ஏற்கனவே பேசியபடி நூலகம், தொகுதி மக்களும் அனைத்து மாணவர்களும் வந்து பயன்படுத்தும்படி தொகுதியின் மையப்பகுதியில் இருந்தால் நல்லது. குறைந்தபட்சம் ஒரு எட்டு பேர் அமர்ந்து படிக்கின்ற வசதி இருக்க வேண்டும். அதேபோல் குறைந்தது 300 புத்தகங்கள் இடம்பெற வேண்டும். மேலும் புத்தகங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கான அலமாரிகளும் இருக்க வேண்டும். அதேபோல் ஒரு கம்ப்யூட்டர் இருக்க வேண்டும். என்னென்ன புத்தகங்கள் இருக்கின்றன. அந்தப் புத்தகங்களைப் பற்றிய குறிப்புகள் எல்லாம் அந்தக் கம்ப்யூட்டரில் பதிவு செய்து வைத்திருக்க வேண்டும்.

### நூலகங்களில் கண்டிப்பாக - 'முரசொலி' 'விடுதலை' - 'தீக்கதிர்' வேண்டும்!

'நெஞ்சுக்கு நீதி' உள்பட கலைஞர் எழுதிய புத்தகங்கள், கலைஞரைப் பற்றி மற்றவர்கள் எழுதிய புத்தகங்கள், நம்முடைய தலைவருடைய சுயசரிதை, நம்முடைய தலைவரைப் பற்றி வந்திருக்கக்கூடிய புத்தகங்கள். அதேபோல் திராவிட இயக்க வரலாறு, முக்கியமாகப் போட்டித் தேர்வுகளுக்குப் பயன்படக்கூடிய புத்தகங்கள், அதே நேரத்தில் குழந்தைகளுக்கான புத்தகங்கள் என குறைந்தது 300 புத்தகங்களாவது இருந்தால் நல்லது. அனைவருக்கும், அனைத்து வயதினருக்கும் நம்முடைய நூலகம் பயன்படும்படி இருக்க வேண்டும்.

அதேபோல் 'முரசொலி', `விடுதலை', `தீக்கதிர்' இந்த மூன்று நாளிதழ்களும் அனைத்து நூலகங்களிலும் கண்டிப்பாக இடம் பெற வேண்டும்.

இங்கே சிலர் பேசும்போது புத்தகங்கள் எல்லாம் நாங்கள் ஆர்டர் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்தச் செலவு உங்களுக்குத் தேவை இல்லை. நாங்கள் அன்பகத்தில் இருந்து அவற்றை அனுப்பி வைக்கிறோம். தொண்டர்கள் எனக்கு அளித்த புத்தகங்கள் அன்பகத்தில் உள்ளன. அந்தப் புத்தகங்களையெல்லாம் நாங்களே பிரித்து உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நூலகத்திற்கும் தேவையானவற்றை அனுப்பி வைக்கிறோம். எனவே, புத்தகங்கள் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

### நூலகங்கள் தூய்மையாக பராமரிக்கப்பட வேண்டும்!

ஆனால், இன்னொரு கோரிக்கை என்னவென்றால், நூலகம் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்கப்பட வேண்டும். வாசகர்களை மிகக் கண்ணியமாக நடத்த வேண்டும். யார், யார் எந்தப் புத்தகங்களை எடுத்து படிக்கிறார்கள் என்பதை ஒரு ரிஜிஸ்டரில் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

நூலககர்களைத் தேர்வு செய்யும் பொழுது கவனமாகத் தேர்வு செய்ய வேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அந்த நூலகர் படிப்பிலும் வாசிப்பிலும் ஆர்வம் உள்ளவராக இருந்தால், சரியாக இருக்கும். ஒவ்வொரு மாவட்டத்திற்குமான நூலகர்களை நீங்களே தேர்வு செய்து அன்பகத்திற்கு அனுப்பி விட்டால், அவர்களுக்கான சம்பளமும் மாதந்தோறும் அன்பகத்தில் இருந்து நேரடியாக அளிக்கப்படும்.

நூலகத்திலிருந்து புத்தகங்களை வீட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதி கிடையாது. குறிப்பு மட்டுமே எடுத்துக் கொள்ளலாம். இன்னொரு முக்கியமான கோரிக்கை இந்த நூலகத்தை நாம் நிர்வாகிகள் கூடும் இடமாக மாற்றி விடக்கூடாது. பொதுமக்கள் பெருமளவில் பயன்படுத்தக்கூடிய நூலகமாகக் கலைஞர் நூலகத்தை மாற்றி அமைப்பது நம்முடைய கடமையாகும். பள்ளிக்கூடம் முடித்துவிட்டு குழந்தைகள் படிப்பதற்கு, கல்லூரிகள் முடித்துவிட்டு மாணவர்கள் படிப்பதற்கும் வசதியாக காலை 8:00 மணியிலிருந்து மாலை 7 மணி வரை நூலக நேரத்தை நாம் வைத்துக் கொள்ளலாம்.

கலைஞர் நூலகத்திற்கான அந்த லோகோ இங்கே 'டிஸ்ப்ளே' செய்யப்பட்டது. என்னுடைய சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் ஒரு நடமாடும் நூலகம் உள்ளது. அதனுடைய லோகோதான் இப்போது தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து நூலகங்களுக்கான லோகோவாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதில் சில சில திருத்தங்கள் மட்டும் செய்து ஃபைனல் டிராப்டை உங்கள் அத்தனைப் பேருக்கும் அன்பகத்தில் இருந்து அனுப்பி வைத்து விடுகிறோம். அந்த லோகோவைத்தான் நீங்கள் பயன்படுத்த வேண்டும். லோகோவிற்குக் கீழே தங்களுடைய தொகுதியினுடைய பெயரை மட்டும் நீங்கள் தனியாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

அதேபோல் மாவட்டம் வாரியாக கலைஞர் நூற்றாண்டு மாரத்தான் போட்டிகள் நடத்த உள்ளோம். இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் முன்பதிவு செய்ய உருவாக்கப்பட்ட அந்த வெப்சைட் இங்கே உங்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டது. அதைப் பயன்படுத்தி நீங்கள் முன்பதிவுப் பணியைத் துவக்க வேண்டும். அந்த வெப்சைட்டை மாவட்டத்தில் உள்ள கல்லூரிகள், பள்ளிகள், பொதுமக்கள், வாக்கர்ஸ் கிளப் சங்கத்தினரிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும்.

எல்லா ஊரிலும் ஸ்டேடியம் இருக்கும் பகுதிக்குச் சென்று விசாரித்தால் வாக்கர்ஸ் கிளப் இருக்கும். தவிர இப்போது எல்லா இடங்களிலும் மாரத்தான் போட்டிகள் ரெகுலராக நடக்கிறது. எனவே, அதில் யார் யார் கலந்துகொள்கிறார்கள் என்று நீங்கள் எளிதாகத் தெரிந்து கொள்ளலாம்.

இளைஞர்கள், மாணவர்கள் கலந்து கொள்ளுமாறு இந்தப் போட்டியை நீங்கள் நடத்த வேண்டும். போட்டி தூரம் அனைவரும் கலந்துகொள்ள வசதியாக ஐந்து கிலோ மீட்டர் வைத்துக் கொள்ளலாம். முழுமையாக ஓடி முடித்தவர்களுக்குப் பதக்கங்கள் வழங்கப்படும். அவற்றை அமைச்சர் மா.சு அண்ணன் அவர்கள் வழங்குவதாகக் கூறியிருக்கிறார்.

### மாரத்தான்: அமைச்சர் மா.சு. அண்ணனின் டீம் நடத்தித் தரும்!

எத்தனை பேர் ஒடுகிறார்களோ அத்தனை பேருக்கும் டீசர்ட், மாவட்டத்திலேயே நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். மா.சு அண்ணனுடைய டீம் முழுமையாக நம்முடன் இருந்து மாரத்தான் போட்டிகளை நடத்தித் தருவார்கள். உங்களுக்கு என்ன சந்தேகம் இருந்தாலும் நீங்கள் அவர்களிடம் கேட்டுத் தெளிவுபெறலாம். மாவட்டக் கழக நிர்வாகம், மாவட்ட அரசு நிர்வாகம், காவல்துறை, தன்னார்வலர்களுடன் இணைந்து நீங்கள் இந்தப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி முடிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.



### கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி!

`கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி' என்பதும் மிக மிக முக்கியமான ஒன்று. நூறு இளம் பேச்சாளர்களைக் கண்டறிந்து தலைமைக் கழகத்திற்கு வழங்குகிறோம் என்பது மரியாதைக்குரிய பணி என்பதை நீங்கள் உணர வேண்டும்.

இந்தப் பேச்சுப் போட்டிக்கு `என் உயிரினும் மேலான...' என்று பெயரிடப்பட்டுள்ளது. பேச்சில் ஆர்வம் உள்ள 18 முதல் 35 வயது வரை உள்ள இளைஞர், இளம் பெண்கள் முன்பதிவு செய்யும் வகையில் அதற்கான இணையதளத்தையும் நாம் அவர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். எவ்வளவு பேர் முன்பதிவு செய்துள்ளார்கள் என்பதைப் பொறுத்து, போட்டியை மாவட்ட வாரியாகவோ, மண்டல வாரியாகவோ நடத்தலாம்.

பத்துத் தலைப்புகள். ஏதாவது ஒரு தலைப்பில் ஐந்து நிமிடங்கள் பேசவேண்டும். என்னென்ன தலைப்புகள் என்பதும் விரைவில் அறிவிக்கப்படும். இதற்கு நடுவர்களாக நமது கழகப் பேச்சாளர்களையும் திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களில் கலந்து கொண்ட கருத்துரையாளர்களையும் அழைக்கலாம். ஒவ்வொரு இடத்திற்கும் மூன்று பேரை அழைக்கலாம்.

இந்தப் பேச்சுப்போட்டி கலைஞர் டி.வி.யில் ஒரு நிகழ்ச்சியாக ஒளிபரப்பாக உள்ளது. மாநில, மாவட்ட அளவில் வெல்பவர்களுக்கு எவ்வளவு பரிசுத்தொகை அறிவிக்கலாம் என்பதைத் துணைச் செயலாளர்களுடன் கலந்தாலோசனை செய்து, விரைவில் அறிவிக்கின்றோம். இதில் கலந்துகொள்பவர்கள் திராவிட இயக்கக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கவேண்டும். அதில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

234 தொகுதிகளிலும் 'கலைஞர் நூலகம்', நூறு இளம் பேச்சாளர்கள் தேர்வு, மாரத்தான் போட்டிகள். இவற்றை நடத்தி முடித்தாலே, நாம் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பாதி பிரச்சாரம் செய்தது போல் முடிந்துவிடும். இளைஞர் அணிக்கும் உங்களுக்கும் மக்கள் மத்தியிலும் கழகத்தினரின் மத்தியிலும் மிகப்பெரிய ஒரு நல்ல பெயர் கிடைக்கும். எப்படித் திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தை நாம் வெற்றிகரமாக நடத்தி முடித்தோமோ, அதேபோல் இந்த மூன்று முன்னெடுப்புகளையும் வெற்றிகரமாக நம்மால் நடத்தி முடிக்க முடியும்.

### இளைஞர் அணி மாநாடு! கழகத் தலைவருக்கு நன்றி!

கழகத்தினுடைய இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு வருகின்ற டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ளது. இதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு இந்த நேரத்திலே இளைஞர் அணியின் சார்பாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதற்காக வருவாய் மாவட்டம் வாரியாகச் செயல்வீரர் கூட்டங்களை நடத்தி வருகின்றோம். இதுவரை நாம் 24 கழக மாவட்டங்களுக்கான கூட்டங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளோம். இந்தச் செயல்வீரர் கூட்டங்களுக்கான ஒருங்கிணைப்புப் பணிகளை நம்முடைய மாநிலத் துணைச் செயலாளர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். அதற்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றி.

இந்தக் கூட்டங்களின்போது பட்டாசு வெடிப்பது, வாண வேடிக்கை, பிளக்ஸ் பேனர் வைப்பது, பொன்னாடை பூங்கொத்து அளிப்பது, சால்வை மாலை போன்றவற்றைத் தவிர்க்குமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன். அவற்றுக்குப் பதிலாக புத்தகங்கள், கழகத்தின் கருப்புச் சிவப்பு வேஷ்டி, துண்டு கொடுத்தீர்களென்றால், தேவைப்படுபவர்களுக்குக் கொடுக்க முடியும். ஆனால் பூங்கொத்து, பொன்னாடை போன்றவை யாருக்கும் எதற்கும் பயன்படாது.

இளைஞர் அணி மாநாட்டுக்கு ஒவ்வொரு கழக மாவட்ட வாரியாக எத்தனை இளைஞர்களை அழைத்து வரப் போகிறீர்கள் என்பதை ஒவ்வொரு அமைப்பாளரும் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் வாரியாக வரப்போகின்ற இளைஞர்களுடைய பெயர் முகவரி, செல்போன் எண், டீ சர்ட் சைஸ் போன்ற தகவல்களுடன் கூடிய பட்டியலை நீங்கள் தயார் செய்து தர வேண்டும். இந்தப் பணி மிக மிக முக்கியமான பணி இதைத் துணைச் செயலாளர்கள் ஒருங்கிணைப்பாளர்கள்.

### மாநாடுகளில் உரையாற்ற விரும்பும் தலைப்புகள் தருக!

அதேபோல் மாநாட்டில் யார் யார் என்னென்ன தலைப்புகளில் பேசப் போகிறீர்கள் என்ற விருப்பத்தையும் இன்னும் ஒரு வார காலத்திற்குள் அன்பகத்திற்கு நீங்கள் அனுப்பி வைக்க வேண்டும். மாநாட்டுக் குழுக்களை யார் யாரைக் கொண்டு அமைக்கப் போகிறோம் என்பதையும் இன்னும் ஓரிரு தினங்களில் உறுதி செய்து அறிவிக்க உள்ளோம்.

எப்பொழுதும் தேர்தலுக்கு முன்பு மாநாடு நடத்துவோம். அதை தலைமைக் கழகமோ, மாவட்டக் கழகமோ நடத்தும். ஆனால் முதல் முறையாக நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு இளைஞர் அணிக்கு இப்படி ஒரு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார் நம்முடைய தலைவர் அவர்கள். தலைவர் அவர்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆவலோடு காத்திருக்கிறார்கள், இந்த மாநாடு எப்படி நடக்கப்போகிறது என்பதைப் பார்ப்பதற்கு.

சமீபத்தில் மதுரையில் ஒரு மாநாடு நடந்தது. உங்களுக்குத் தெரியும். ஒரு மாநாடு எப்படி நடத்தக்கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டாக அந்த மாநாடு நடந்தது. ஆனால், நம்முடைய மாநாடு ஒரு மாநாடு என்றால் இப்படித்தான் நடத்த வேண்டும் என்று நம்முடைய மாநாடு அமைய வேண்டும். அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு தேவை. இந்த மாநாட்டை ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க மாநாடாக இதுவரை தமிழ்நாட்டில் இப்படி ஒரு மாநாடு நடந்ததே இல்லை என்று சொல்லும் அளவிற்கு நாம் இதை நடத்திக்காட்ட வேண்டும்.

செயல் வீரர்கள் கூட்டங்களில் எல்லாம் மிகப்பெரிய எழுச்சி. அதைப் பார்த்தாலே நம்முடைய மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று இளைஞர்கள் எல்லாம் ஆர்வமாக இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதனால் இளைஞர்கள் கண்டிப்பாக வந்து விடுவார்கள். அப்படி வருபவர்களுக்கு மாநாட்டில் நாம் என்ன சொல்ல போகின்றோம். என்ன செய்யப் போகிறோம்.

கொள்கை ரீதியாக இயக்க வரலாறு குறித்து, நம்முடைய தலைவர்கள் குறித்து நம்முடைய கழக ஆட்சியின் சாதனைகள் குறித்து, பெரியார், அண்ணா, கலைஞர் குறித்து அங்கு என்ன பேசப் போகிறோம் என்பதுதான் மிக மிக முக்கியம்.

மாநாடு தொடர்பாக, உங்களுக்கு என்ன கருத்துக்கள் இருந்தாலும், என்ன சந்தேகம் இருந்தாலும், நீங்கள் அதை உடனுக்குடன் அன்பகத்திற்குத் தெரிவித்து, நீங்கள் அதில் தெளிவு பெற்றுக் கொள்ளலாம்.

அதே போல் இன்னொரு ஒரு முக்கியமான ஒரு விஷயம். அண்மையில் நீட் தேர்வை ரத்துச் செய்ய வேண்டும் என்று ஒரு மிகப்பெரிய உண்ணாவிரத அறப்போராட்டத்தை நடத்தி முடித்தோம்.

அப்பொழுதே சொன்னேன், "அடுத்த கட்டப் போராட்டத்திற்கு இளைஞர் அணி தயாராக வேண்டும்" என்று! தற்போது அதற்கான நேரம் வந்திருக்கிறது. நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை ஜனாதிபதி அவர்களுக்கு கடத்தும் வகையில் மிகப்பெரிய கையெழுத்து இயக்கத்தை நடத்த உள்ளோம்.

சி.ஏ.ஏ. சட்டம் வரும் போது இதே போல் அறிவித்து இலட்சக்கணக்கான கையெழுத்துக்களைப் பெற்றோம். இப்பொழுது நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி மக்களின் ஆதரவை ஒன்றிய அரசுக்குத் தெரிவிக்கும் வகையில் கையெழுத்து இயக்கம் நடத்தப்போகிறோம். அதற்கான டிராஃப்ட் ரெடி ஆகிகொண்டிருக்கிறது.

### மாணவர், ஆசிரியர், பெற்றோர், பொதுமக்களிடம் கையெழுத்து!

நீங்கள் அதை பிரிண்ட் அவுட் மட்டும் எடுத்தால் போதும். அதை குறைந்தது 50 இலட்சம் பேரிடம் சேர்த்து அனைவரிடமும் கையெழுத்துப் பெறவேண்டும். நீட் தேர்வை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் பெரும்பான்மையான மக்களிடம் இருக்கிறது என்பதை நிரூபிக்க இது நமக்கொரு வாய்ப்பு. மாணவர்களிடம், ஆசிரியர்களிடம், பெற்றோர்களிடம், பொதுமக்களிடம் கையெழுத்து பெறப்போகிறோம்.

இதை எப்படி செய்யப்போகிறோம் என்ற வழிமுறைகளை ஓரிரு தினங்களில் உங்களிடம் தெரிவிக்கிறோம். இந்த 50 லட்சம் கையெழுத்துடன் அவர்களின் பெயர், முகவரி, அலைபேசி எண்ணையும் வாங்கி நம்முடைய மாநாட்டில், மாநாட்டுத் திடலில் நம்முடைய தலைவர் அவர்களிடத்தில் அதை நாம் ஒப்படைக்கப் போகிறோம். எனவே இந்தப் பணிக்கும் நாம் தயாராக வேண்டும்.

அதேபோல் இளைஞர் அணியின் நேர்காணல் பகுதி வாரியாக நியமிக்கக் கூடிய நேர்காணலைப் பொறுத்தவரை இரண்டு மண்டலங்களுக்கான நேர்காணல் முடிவடைந்துள்ளது. அதைச் சிறப்பாக நடத்தி முடித்து நம்முடைய அனைத்து மாநில துணைச் செயலாளர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மண்டலம் 3, 4, 7 ஆகிய மண்டலங்களுக்கு நேர்காணல் நடத்தத் தயாராக உள்ளோம். ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும் குறைந்தது சராசரியாக 2,500 விண்ணப்பங்கள் வந்துள்ளன. இது ஒரு மிகப் பெரிய சாதனை. இதற்கு மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமனம்தான் மிக மிக முக்கியமான காரணம். ஒவ்வொருவரையும் தேடித்தேடி, பார்த்துப் பார்த்து நியமித்திருக்கிறோம்.

எல்லா மாவட்டச் செயலாளர்களிடத்திலும் பரிந்துரைக் கடிதம் வாங்கினோம், சில மாவட்டச் செயலாளர்கள் கொடுத்த லிஸ்ட் அப்படியே வந்திருக்கிறது. சில மாவட்டச் செயலாளர்கள் கொடுத்த லிஸ்டில் 50 சதவிகிதம் வந்திருக்கிறது. சில மாவட்டச் செயலாளர்கள் கொடுத்த லிஸ்டில் 100% மாறியிருக்கிறது. உங்கள் ஒவ்வொருவரையும் பார்த்துப் பார்த்து தேர்வு செய்திருக்கிறோம் என்பதை நீங்கள் உணரவேண்டும்.

### உழைப்பால் தலைவரின் நம்பிக்கையைப் பெறுவோம்!

இங்கே துணைச் செயலாளர் பிரகாஷ் உங்களுக்கெல்லாம் ஒரு அறிவுரை வழங்கினார். நீங்களும் மாவட்டக் கழகச் செயலாளர்களும் அப்பா -மகன் உறவுபோல பழக வேண்டும் என்றார். அதை நீங்கள் கடைபிடிக்க வேண்டும். தலைவர் அவர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் அறிவிப்பு வந்திருக்காது. எனவே, தலைவருடைய நம்பிக்கையை நீங்கள் அத்தனை பேரும் காப்பாற்றுவீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

சனாதனம் பற்றி கடந்த இரண்டாம் தேதி ஆரம்பித்த விஷயம். நான் 15 நிமிடங்கள் மட்டுமே அதைப்பற்றி பேசினேன். நான் பேசியதை அப்படியே விட்டிருந்தால் அந்த கலைவாணர் அரங்கத்துடனேயே அது போயிருக்கும். யாருக்கும் தெரிந்திருக்காது. ஆனால், பா.ஜ.க.விற்குத்தான் நாம் அதற்கு நன்றி சொல்ல வேண்டும்.

இதை இவ்வளவு பெரிய பிரச்சினையாக்கி, பொய்யாகத் திரித்து நான் பேசாததையெல்லாம் பேசினேன் என்று சொல்லி, அதை இவ்வளவு பெரிய பேசுபொருளாக ஆக்கி இருக்கிறார்கள். இப்போது ஒட்டுமொத்த இந்தியாவும் அதைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறது. கண்டிப்பாக, நம் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது அதற்காகத்தானே. இந்த சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் உருவாக்கப்பட்டது. ஆனால், என்னவென்று பார்த்தால், இங்கு தமிழ்நாடு மாதிரி, கேரளா மாதிரி தென் மாநிலங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு இருக்கும் விழிப்புணர்வு வட இந்தியாவில் இல்லை.

### நமது வெற்றியை திசைதிருப்பப் பார்க்கிறார் பிரதமர்!

அவர்கள் நாம் ஒரு மதத்தை இழிவுபடுத்துகிறோம் என்பது போல திரித்து பிரச்சினையாகக் கொண்டு போகிறார்கள். எனவே கண்டிப்பாக இதைப்பற்றிப் பேசுவோம். இப்போது நாம் பேசுவதைவிட அவர்கள் அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணிக்கு எந்த விதத்திலும் இடையூறாக இருந்து விடக்கூடாது. இப்போது வெற்றி நமக்கு மிக மிக அருகில் இருக்கிறது. அதைத் திசை திருப்புவதற்காக, பிரதமர் மோடி அவர்கள் இந்த டாப்பிக்கை ஆரம்பிக்கிறார். எனவே நாம் இதில் நாம் கவனமுடன் இருக்க வேண்டும்.

இந்த வார்த்தையை நாம் ரொம்ப வருஷமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். அம்பேத்கரும் இதைத்தான் பேசினார். தெளிவாக விரிவாகப் பேசியிருக்கிறார். தந்தை பெரியார் பேசியிருக்கிறார். கலைஞர் பேசியிருக்கிறார். நம்முடைய தலைவர் பேசியிருக்கிறார், அண்ணன் திருமாவளவன் பேசியிருக்கிறார். நம்முடைய கழகத் துணைப் பொதுச்செயலாளர் அண்ணன் ஆ.ராசா அவர்கள் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். அதேபோல் நான் பேசிய உடன் அவர்களுக்கு ரொம்பப் பயம் வந்துவிட்டது. நாம் தொடர்ந்து இதைப் பேசுவோம்.

ஆனால், இதைவிட மிக மிக முக்கியமான ஒரு காரியம் நம் எதிரே காத்திருக்கிறது. அதுதான் நாடாளுமன்றத் தேர்தல். அந்த வெற்றிதான் மிக மிக முக்கியம். ஒன்றிய பா.ஜ.க. அரசை நாடாளுமன்ற தேர்தலில் விரட்டி வீட்டுக்கு அனுப்பியாக வேண்டும்,

எப்போது நம்முடைய கூட்டணிக்கு 'இந்தியா' என்று தலைவர்கள் எல்லாம் பெயர் வைத்தார்களோ, அன்றே மோடி அவர்கள் நாட்டுடைய பெயரையே மாற்றுவதற்கு முடிவு செய்து விட்டார். அந்த அளவிற்கு அவர்களுக்குப் பயம் வந்திருக்கிறது. இந்த நேரத்தில் நாம் கவனத்தைச் சிதற விட்டுவிடக்கூடாது. தேர்தலில் வெற்றி பெற்றதற்குப் பிறகும் நாம் சனாதனத்தைப் பற்றிப் பேசிக்கொண்டுதான் இருப்போம்.

என்னிடத்தில் சமீபத்தில் நம்முடைய சீனியர் ஒருவர் கேட்கிறார். 'தொடர்ந்து சனாதனம், சனாதனம் என்று பேசிக்கொண்டு இருக்கிறாயே. என்னதான்ப்பா அந்தச் சனாதனம்' என்று கேட்டார்.

`அண்ணா, நம்முடைய புதிய நாடாளுமன்றக் கட்டடம் கிட்டத்தட்ட 850 கோடி ரூபாய் செலவு செய்து மோடி அவர்கள் திறந்திருக்கிறார். நாட்டினுடைய முதல் பிரஜையான ஜனாதிபதி அவர்களைக் கூப்பிட்டார்களா? என்று கேட்டேன்.

"ஆமா, கூப்பிடவில்லை. ஏன் கூப்பிடவில்லை?" என்று கேட்டார்.

"அவர் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர். கணவரை இழந்தவர். அதனால்தான் கூப்பிடவில்லை. இதற்குப் பெயர்தான் சனாதனம்" என்று சொன்னேன். இதுதான் சனாதனம்.

சில இடங்களில் என் தலையைக் கேட்கிறார்கள். என் தலையின் விலை பத்து இலட்சத்தில் ஆரம்பித்து, பத்து கோடி வரை வந்து இப்போது 100 கோடியாக வந்து நிற்கிறது. "நீ சாமியார், உன்கிட்ட எப்படிப்பா பத்து கோடி வந்தது?" என்று கேட்டால், என்னோட சொத்து மதிப்பு 500 கோடி என்கிறார்.

திட்டுகிறவன் திட்டுவான் அதைப் பற்றியெல்லாம் நமக்குக் கவலை வேண்டாம். நமக்குக் கொள்கைதான் முக்கியம், கொள்கைக்காக உருவாக்கப்பட்ட இயக்கம். கூடி கலைந்து போகக்கூடிய இயக்கம் கிடையாது. கொள்கைக்காக எதுவாக இருந்தாலும் நாம் அதில் கலந்து கொள்வோம்.

இந்த நேரத்தில் உங்களிடம் கேட்டுக் கொள்வது, இந்த இரண்டரை வருடங்களில் தலைவர் அவர்கள் ஒரு மிகச் சிறப்பான திராவிட மாடல் ஆட்சியை வழங்கிக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு திட்டமாகப் பார்த்துப் பார்த்துச் செய்து கொண்டிருக்கிறார். இதில் மூன்று முக்கியமான திட்டங்கள். இதை மக்கள் நேரடியாகப் பயன்பெற்றிருக்கிறார்கள்.

### மூன்று முக்கிய திட்டங்கள்! மக்களிடம் தொடர்ந்து பேசுவோம்!

இந்த மூன்று திட்டங்களைப் பற்றி மக்களிடம் நாம் தொடர்ந்து பேசி, அவற்றை மக்களிடம் கொண்டு சேர்த்துக் கொண்டே இருக்க வேண்டும். முதலமைச்சருடைய காலை உணவுத் திட்டம். இந்தியாவிலேயே முதன்முறையாகச் செயல்படுகிறது. வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. இன்னும் சொல்லப் போனால், பக்கத்து மாநிலம், தெலங்கானாவில் இருந்து வந்து அரசு அதிகாரிகள் பார்த்து இந்தத் திட்டத்தை நீங்கள் எப்படிப் பண்ணுகிறீர்கள், எப்படிச் சாத்தியமாகிறது என்று கேட்கிறார்கள்.

கிட்டத்தட்ட 17,000 அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற 17 லட்சம் மாணவர்களுக்குத் தரமான உணவு வழங்கும் திட்டம். இன்றைக்கு பெற்றோர்கள், தாய்மார்கள், மாணவர்கள் அத்தனை பேரும் முதலமைச்சரைப் பாராட்டுகிறார்கள். இந்த திராவிட மாடல் அரசு கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை, நீங்கள் மக்களிடம் கொண்டு சென்று சேர்க்க வேண்டும்.

### புதுமைப்பெண் திட்டம்!

அரசுப் பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரிக்குச் சென்று சேர்ந்தாலும், மாதம் ஆயிரம் ரூபாய் புதுமைப் பெண் திட்டத்தில் அந்த மாணவிகளுடைய அக்கவுண்டில் போய் சேர்ந்து விடுகிறது. இப்படி கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறார் நம்முடைய தலைவர் அவர்கள்.

### 'ஸ்டாலின் பஸ்' என மக்கள் புகழாரம்!

தலைவர் போட்ட முதல் கையெழுத்து, அதுவும் மகளிருக்குத்தான். கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம். பிங்க் பஸ். நிறைய இடத்தில் தலைவர் பெயரைச் சொல்லி, 'ஸ்டாலின் பஸ்' வந்து விட்டது என்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு தாய்மார்களும் மாதம் ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள். அதுவே வருடத்திற்கு 12,000 கோடி செலவாகும் திட்டம்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக இரண்டு நாட்களுக்கு முன்பு நம்முடைய பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் கலைஞருடைய நூற்றாண்டில் ஒரு மிக மிகச் சிறப்பான திட்டம்; கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். ஒரு கோடியே 6 லட்சத்து ஐம்பதாயிரம் மகளிர், இதனால் பயன்படுகிறார்கள். அவங்களுக்கு மாதம் 1,000. இந்த இரண்டு திட்டங்களினால் வருடத்திற்கு மகளிர் 24 ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள்.

சில திட்டங்களில் நிறையக் குளறுபடிகள் நடக்கும். காசு வரவில்லை என்று சொல்வார்கள். ஒரு நாள் இரண்டு நாள் கழித்து வரும். ஆனால், இந்தத் திட்டத்தில், திட்டம் அறிவித்ததற்கு முன்னாடியே பணத்தை அனுப்பிவிட்டார்கள் தலைவர்.

இப்போது அதில் சிலர் விடுபட்டு இருப்பார்கள். சில பேர் விடுபட்டவர்களும் வந்து குறை சொல்கிறார்கள். அவர்களும் தனியாக நாளையிலிருந்து மேல்முறையீடு செய்யலாம் என தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மீண்டும் நீங்கள் விண்ணப்பிக்கலாம், தகுதி உள்ள யாரும் இந்தத் திட்டத்திலிருந்து விடுபட மாட்டார்கள். தகுதியான அனைத்து மகளிருக்கும் இந்த மாதம் ஆயிரம் ரூபாய் திட்டத்தைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்.

### நமது திட்டங்களின் சிறப்பை இடைவிடாது எடுத்துரைங்கள்!

அந்த அளவுக்கு ஒரு சிறப்பான செயல்பாட்டை, இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. எனவே, இந்த மூன்று நான்கு திட்டங்களைப் பற்றி இளைஞர் அணித் தம்பிமார்கள் எந்த வாய்ப்புக் கிடைத்தாலும், எந்த மேடை கிடைத்தாலும் எங்கு மைக் கிடைத்தாலும் எந்தத் திருமண நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அரசு நிகழ்ச்சி எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, இந்தத் திட்டத்தைப் பற்றி மக்களிடம் பேசிக் கொண்டே இருங்கள்.

தமிழ்நாடு முழுக்க இருந்து வந்திருக்கிறீர்கள்.. நீங்கள் அனைவரும் பாதுகாப்பாக உங்களுடைய வீட்டிற்குப் போய்ச் சேர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கே சகோதரர் ஈஸ்வரப்பன் சில கருத்துக்களைப் பேசினார். சட்டமன்ற உறுப்பினர் ஈஸ்வரப்பன் அவர்கள். அவர் சட்டமன்ற உறுப்பினர் ஆனதற்கு நான்தான் காரணம் என்றார்.

என்னதான் நான் உதவியிருந்தாலும் நீங்கள் மக்கள் சேவை செய்திருக்கிறீர்கள். மக்கள் உங்கள் மீது அன்பு வைத்திருக்கிறார்கள். அதுதான் உங்களுக்குக் கிடைத்திருக்கக் கூடிய அந்த வெற்றி. உழைத்தால் உயரலாம் என்பதற்கு இந்த இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்தான் சாட்சி. அதற்குச் சகோதரர் ஈஸ்வரப்பன் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. எனவே அதையெல்லாம் நீங்கள் மனதில் வைத்து உழைக்கவேண்டும்.

### மாநாட்டை சிறப்புற நடத்தி - தலைவரின் பாராட்டைப் பெறுவோம்!

இந்த இரண்டாவது மாநில மாநாட்டை நீங்கள் அத்தனை பேரும் மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்து தலைவருடைய நம்பிக்கையைக் காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

எனவே வந்திருந்து பொறுமையாகக் காத்திருந்த உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும் நன்றியையும் கூறிக்கொண்டு அனைத்து மாநில துணைச் செயலாளர்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறிக் கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# பா.ஜ.க. ஊழல் முகத்தைக் கிழித்தெறிவோம்!

## வேலூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்த இயக்கத்தை நீங்களும், உங்கள் குடும்பமும் சேர்ந்துதான் வாழ வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதனால்தான் நாம் கம்பீரத்தோடு இன்றைக்கு பவள விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இன்னும் சிறப்பாக நூற்றாண்டு விழாவையும் நாம் கொண்டாடுவோம். அதில் எந்த மாற்றம் இல்லை. எந்தக் கட்டடமும் கட்டுவதற்கு முன்பு எடுத்து வைக்கப்படுவது செங்கல் தான். நான் சொல்லும் செங்கல் வேறு, நீங்கள் வேறு எதையும் நினைத்துவிடாதீர்கள். ஆனால், அது திறப்பு விழாவின்போது வெளியில் தெரியாது. மலர் மாலைகள்தான் தெரியும். அந்த மாலைகள் உதிர்ந்திடும். ஆனால், செங்கல்கள்தான் கடைசி வரையிலும் காப்பாற்றும். அத்தகைய அடித்தளம்தான் கழகத்தின் கோடிக்கணக்கான உடன்பிறப்புகள். அடித்தளத்தை நானும் மறக்க மாட்டேன். யாரும் மறந்துவிடக் கூடாது. அதனால்தான் மூத்த முன்னோடிகளுக்கு, அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு செய்துகொண்டே இருக்கிறோம்.

**அண்ணா சொன்ன 'தளநாயகர்கள்' - கலைஞர் கூறிய 'ரத்தநாளங்கள்' தொண்டர்களே!**

ஒரு குடும்பத்துக்குத் தாய் தகப்பனைப் போன்றவர்கள்தான் இந்த இயக்கத்தின் மூத்த முன்னோடிகளும். அவர்களை இந்த பவள விழா ஆண்டில் போற்றுங்கள் - பாராட்டுங்கள் என்று எல்லா மாவட்டக் கழகச் செயலாளர்களையும் நான் இந்த விழாவின் மூலமாக கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களின் கடந்த காலத் தொண்டுக்கு இணையாக நாம் எதையும் கொடுத்துவிட முடியாது. அவர்களைப் பாராட்டுவது மூலமாக நாம் நன்றிக்குரியவர்களாக ஆகிறோம். அவர்களைப் பாராட்டுவது மூலமாக நம்முடைய மதிப்பு உயரும் என்பதை மறந்துவிடாதீர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன தளநாயகர்கள் அவர்கள்தான். தலைவர் கலைஞர் அவர்கள் சொன்ன ரத்த நாளங்கள் அவர்கள்தான். இவர்களைப் பார்த்துப் புதிய புதிய தளநாயகர்கள் உருவாக வேண்டும். உருவாக்க வேண்டும்.

**இரண்டு கோடி கொள்கைவாதிகள் நிரம்பிய கோட்டை தி.மு.க.!**

இந்தப் பவளவிழா ஆண்டில் இயக்கத்தின் தலைவராக நான் இருக்கிறேன். இன்று இரண்டு கோடி உறுப்பினர்கள் இயக்கத்தில் இருக்கிறார்கள் என்றால், இரண்டு கோடிப் பேர் என்ற எண்ணிக்கை தேவையில்லை. இரண்டு கோடி கொள்கைவாதிகள் நிரம்பிய கோட்டை திராவிட முன்னேற்றக் கழகம். இதைவிட எனக்கு என்ன பெருமை வேண்டும்? இது கனவுகள் நிறைவேறும் காலம். அதனால்தான் நான் கம்பீரமாக நிற்கிறேன். மகிழ்ச்சியுடன் மனநிறைவுடன் நிற்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முகவரியாகவும் முகமாகவும் இருக்கிறவர்கள் தந்தை பெரியார்! பேரறிஞர் அண்ணா! தலைவர் கலைஞர்! இனமானப் பேராசிரியர்! பாவேந்தர் பாரதிதாசன்! ஆகிய ஐம்பெரும் ஆளுமைகள்! இவர்கள் தனிமனிதர்கள் இல்லை! தத்துவத்தின் அடையாளங்கள்! தந்தை பெரியாரின் சமூகநீதியும் பேரறிஞர் அண்ணாவின் மாநில உரிமையும் முத்தமிழறிஞர் கலைஞரின் ஒடுக்கப்பட்டோர் உரிமையும் இனமானப் பேராசிரியரின் இனமானமும் பாவேந்தரின் மொழிப்பற்றும்தான் நம்மை வழிநடத்துகிறது. அவர்கள் கொள்கையை நாம் பின்பற்றுவதும் அவர்கள் வழிநடக்கும் தளகர்த்தர்களைத் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் விருதுகள் வழங்குவதும் நம்முடைய இயக்கத்தின் மாபெரும் கடமை!

இந்த ஆண்டுக்கான பெரியார் விருது கி.சத்தியசீலன் அவர்களுக்கும், அண்ணா விருது - முன்னாள் அமைச்சர் சுந்தரம் அவர்களுக்கும், கலைஞர் விருது துணைப் பொதுச் செயலாளர், இந்நாள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கும், பேராசிரியர் விருது ந.ராமசாமி அவர்களுக்கும், பாவேந்தர் விருது - திருமதி. மலிகா கதிரவன் அவர்களுக்கும் வழங்கப்படுகிறது. விருதுகள் பெற்ற ஐந்து பேரையும் வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன். போற்றுகிறேன்!

**பெரியார் விருது! 'சத்தியம் தவறாத சத்தியசீலன்'**

பெரியார் விருது பெற்றிருக்கும் மயிலாடுதுறை கி.சத்தியசீலன் அவர்கள் 1956ஆம் ஆண்டு முதல் கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு தொடர்ந்து இன்றுவரை பணியாற்றிக் கொண்டிருப்பவர். கிளைக் கழகச் செயலாளர் முதல் மாவட்டக் கழகப் பொருளாளர் வரை உயர்ந்தவர். இப்போது அவருக்கு 85 வயது. ஆனாலும் நெஞ்சுறுதியோடு காட்சி அளிக்கிறார் என்றால் கலைஞர் அவருக்கு அளித்த பாராட்டுப் பத்திரம்தான் காரணம். "சத்தியம் தவறாத சத்தியசீலன்" என்று கலைஞர் இவருக்கு மகுடம் சூட்டி இருக்கிறார். தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளை உதட்டளவில் இல்லாமல், உள்ளார்ந்த ஈடுபாட்டோடு கடைப்பிடித்த சத்தியசீலன் அவர்கள் இந்த ஆண்டுக்கான பெரியார் விருதைப் பெறுகிறார்.

**அமைதியாக கழகப் பணியாற்றுபவர் முன்னாள் அமைச்சர் க.சுந்தரம்!**

முன்னாள் அமைச்சர் மீஞ்சூர் க.சுந்தரம் அவர்கள் அண்ணா பெயரிலான விருதைப் பெற்றிருக்கிறார். அமைதியாகப் பணியாற்றுபவர்களுக்கு எடுத்துக்காட்டு வேண்டும் என்றால் அது க.சுந்தரம் அவர்கள்தான். எந்தப் பொறுப்பை வகித்தாலும் அதில் அமைதியாகவும் ஆக்கபூர்வமாகவும் செயல்படக் கூடியவர் அவர். அவரை நான் பாராட்டுகிறேன்.

கலைஞர் பெயரிலான விருதை தலைவர் கலைஞர் நூற்றாண்டில் பெற்றிருப்பவர் நம்முடைய அன்புக்குரிய அமைச்சர் கழகத் துணைப் பொதுச் செயலாளர் திண்டுக்கல் ஐ.பெரியசாமி அவர்கள். 1980ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கருப்பு மீசையோடு கம்பீரமாக அவரைப் பார்த்தேன். இப்போது வெள்ளை மீசையோடு கம்பீரமாகப் பார்க்கிறேன். அன்று முதல் இன்று வரை உற்சாகம் குறையாமல் கழகத்துக்காக உழைத்துக் கொண்டு இருக்கிறவர் நம்முடைய ஐ.பி. அவர்கள். நானும் அவரும் ஒரே ஆண்டில் பிறந்தவர்கள். என்னைவிட இரண்டு மாதம் மூத்தவர் அவர்.

**'லட்சியவாதி' என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர், அமைச்சர் ஐ.பி.**

கல்லூரி மாணவராக இருந்தபோதே கழகச் செயல்வீரராகச் செயல்பட்டவர். 20 ஆண்டுகாலமாக மாவட்டச் செயலாளராக இருந்து திண்டுக்கல் மாவட்டத்தை மட்டுமல்ல, தென் மாவட்டங்களையே கழகக் கோட்டையாக மாற்றி அமைத்தவர் அமைச்சர் ஐ.பி. அவர்கள். 7 முறை சட்டமன்ற உறுப்பினர் 3ஆவது முறையாக அமைச்சர் என்று அசைக்க முடியாத சிறப்புகளுக்குச் சொந்தக்காரர் ஐ.பி. 'லட்சியவாதி என் தம்பி ஐ.பி.' என்று தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர். கலைஞர் பெயரிலான விருது பெற்றிருக்கக் கூடிய இவரைப் பற்றி ஒரு வரியில் சொல்ல வேண்டும் என்றால், 'இவர் கலைஞரின் வெறியர்' என்பதுதான்.

**கழக மகளிர்க்கோர் எடுத்துக்காட்டு, தென்காசி மலிகா!**

அடுத்து, பாவேந்தர் பெயரிலான விருதை திருமதி. மலிகா கதிரவன் அவர்கள் பெறுகிறார். கதிரவனும் மலிகாவும் இணைந்து கழகப் பணியாற்றியவர்கள் என்று தென்காசி வட்டாரத்து மக்களுக்கு நன்றாகத் தெரியும். ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டச் செயலாளராகப் பணியாற்றிய கதிரவன் அவர்கள் மறைந்த பிறகும் தன்னுடைய கழகப் பணிகளை தொடர்ந்து ஆற்றி, பாவேந்தர் வழிகாட்டிய புரட்சிப் பெண்ணாகத் திகழ்பவர்தான் மலிகா அவர்கள். கழகக் குடும்பத்து மகளிர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாய்ச் செயல்பட்டு வருகிறவர் தென்காசி மலிகா அவர்கள்.

**கர்நாடகத்தில் கழகம் வளர்ப்பவர் இராமசாமி!**

பேராசிரியர் அவர்கள் பெயரிலான விருதை பெங்களூரைச் சேர்ந்த ராமசாமி அவர்களுக்கு வழங்கி இருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் மாநாடு 1951 ஆம் ஆண்டு சென்னையில் நடந்தபோது அதில் கலந்து கொள்வதற்காக பெங்களூரில் இருந்து வந்தவர் என்ற பெருமைக்கு உரியவர் இவர். கர்நாடக மாநில தி.மு.க.வை வளர்த்தெடுக்கப் பாடுபட்டவர். பணியாற்றியவர். இன்னும் பணியாற்றிக் கொண்டிருப்பவர். தமிழ்நாட்டுத் தலைவர்கள் அனைவரையும் அழைத்து கர்நாடக மாநிலத்தில் பொதுக்கூட்டங்கள் நடத்தி, கழகப் பிரச்சாரத்தை தீவிரமாக மேற்கொண்டவர். இன்னொரு மாநிலத்தில் கழகம் வளர்ப்பது எவ்வளவு சிரமம் என்று எல்லோருக்கும் தெரியும். அந்த சிரமத்தை நினைக்காமல் சிறப்பாக செய்து காட்டியவர் ராமசாமி அவர்கள்.

**விருதாளர்களுக்கு வேண்டுகோள்! இளைஞர்களை வழிநடத்துங்கள்!**

விருதுகள் பெற்றுள்ள அனைவரையும் தலைமைக் கழகத்தின் சார்பில் மட்டுமில்ல, தனிப்பட்ட முறையிலும் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், போற்றுகிறேன். உங்களது ரத்தத்தால், வியர்வையால், தியாகத்தால், தொண்டால் வளர்ந்த இயக்கம் இது. உங்களுக்கு விருதுகள் தருவது மூலமாக நாங்கள் எங்கள் நன்றியைக் காட்டுகிறோமே தவிர உங்கள் தொண்டுக்கு பரிசு வழங்குகிறோம் என்று பொருள் இல்லை. உங்கள் உழைப்பு விலைமதிக்க முடியாதது. உங்கள் தொண்டு அளவிட முடியாதது. இத்தோடு உங்கள் பொறுப்பும், கடமையும் முழுந்துவிடவில்லை. எங்களுக்குத் தொடர்ந்து வழிகாட்டுங்கள். இன்றைய இளைஞர்களை வழிநடத்துங்கள் என்று விருதாளர்கள் அனைவரையும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏன் என்றால், மிக மிக முக்கியமான காலக்கட்டத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்தியாவில் ஜனநாயகத்தைக் காக்கின்ற போர்க்களத்தை நோக்கிய பயணத்திற்கிடையே இந்த முப்பெரும் விழாவை நாம் கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம்.

1949ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் உதயம் ஆனது. 75 ஆண்டுகளாக தமிழ்ச் சமுதாயத்தின் காவல் அரணாக கழகம் செயல்பட்டு வருகிறது. 1967ஆம் ஆண்டு முதன் முதலாக நாம் ஆட்சிக்கு வந்தோம். 1971, 1989, 1996, 2006, 2021என்று மொத்தம் ஆறு பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து வருகிறோம்.

**தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கி வருகிறோம்!**

ஒரு பக்கம் ஆட்சி இன்னொரு பக்கம் கட்சி இரண்டின் மூலமாகவும் தமிழ்நாட்டை மற்ற மாநிலங்களைவிட தலைசிறந்த மாநிலமாக மாற்றிக்கொண்டு வருகிறோம். அனைத்துத் துறைகளிலும் தலைசிறந்த மாநிலமாக உருவாக்கி வருகிறோம். இடையிலே கொஞ்ச காலம் அ.தி.மு.க. கூட்டத்தின் ஆட்சி வந்து தமிழ்நாட்டைச் சீரழித்தாலும் அதையும் திருத்தி தமிழ்நாட்டை வளர்த்தெடுத்து வருகிறோம்.

**தமிழ்நாட்டை பட்டவர்த்தனமாக அழிக்கப் பார்க்கிறது பா.ஜ.க.!**

இன்றைக்கு தமிழ்நாட்டின் வளர்ச்சி தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சி தமிழினத்தின் வளர்ச்சி பலருக்கும் பொறாமை ஏற்படுத்தும் வளர்ச்சியாக இருக்கிறது. தமிழ்நாடு என்ற மாநிலத்தை அதற்கான உரிமைகளைச் சிதைப்பது மூலமாக, நம்முடைய மாநில மக்களின் வாழ்க்கையை அழிக்கப் பார்க்கிறார்கள். அதைத்தான் பட்டவர்த்தனமாக பாரதீய ஜனதா கட்சி செய்துகொண்டு வருகிறது.

ஜி.எஸ்.டி. மூலமாக மாநில உரிமையைப் பறித்தார்கள். ஒரு மாநில அரசை நடத்துவதற்கு மிக முக்கியமான நிதி ஆதாரம் என்பது வரி வருவாய்தான். அந்த வரி வருவாயைக் கபளீகரம் செய்ததன் மூலமாக மாநில அரசை செயல்பட விடாமல் முடக்குகிறார்கள். மக்களுடன் நேரடியான தொடர்பைக் கொண்டது மாநில அரசுகள்தான்.

மக்களுக்குத் தேவையான கல்வி - சுகாதாரம் குடிநீர் சாலை வசதிகள் - கடன்கள் மானியங்கள் - பெண்கள் முன்னேற்றம் - விளிம்புநிலை மக்களுக்கான உதவிகள் - இவை எல்லாவற்றையும் வழங்க வேண்டிய கடமை மாநில அரசுகளுக்குத்தான் இருக்கிறது. இதைச் செய்து தருவதற்கு நிதி வேண்டாமா? அப்படிப்பட்ட நிதி ஆதாரங்களை கிடைக்கவிடாமல் செய்வதற்காகவே ஜி.எஸ்.டி.யை கொண்டு வந்து நிதி வருவாய் வாசல்களை அடைத்தார்கள். நான் கேட்பது, நிதியை வசூல் செய்கிறீர்களே, அதை முறையாகப் பிரித்துக் கொடுக்கிறீர்களா அதுவும் இல்லை.

**கல்வியில் சிறந்த தமிழ்நாட்டை முடக்கப் பார்க்கிறார்கள்!**

அதேபோல கல்வி மிக முக்கியமான ஒரு துறை. ஒவ்வொரு மாநில அரசும் - அங்கு வாழும் பெரும்பான்மை மக்களின் பண்பாடு, அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப கல்வியை வழங்கும். புதிய கல்விக் கொள்கை - என்று சொல்லி, பொதுவான கல்வி முறை என்ற பெயரில், நமது மாநிலத்தின் கல்வி வளர்ச்சியை தடுக்கப் பார்க்கிறார்கள். ஒன்றிய அரசாங்கம் சொல்லும் கல்வி வளர்ச்சியை - தமிழ்நாடு எப்போதோ எட்டிவிட்டது. கல்வியில் சிறந்த மாநிலமான தமிழ்நாட்டை முடக்குவதற்கான முயற்சிதான் அவர்கள் கொண்டு வரும் கல்விக் கொள்கை.

நீட் தேர்வைப் பற்றி சொல்லவே அவசியமில்லை. மருத்துவம் படிக்க நினைக்கும் மாணவர்களின் கனவைச் சிதைப்பதற்காக கொண்டுவரப்பட்டதுதான் நீட் தேர்வு. லட்சக்கணக்கில் செலவு செய்தால்தான் தேர்ச்சி பெற முடியும் என்ற நிலையை உருவாக்கி விட்டார்கள். சில தனியார் கோச்சிங் செண்டர்களின் லாபத்துக்காகவே இந்தத் தேர்வு நடத்தப்படுகிறது. அனிதா முதல் ஜெகதீஸ்வரன் வரை ஏராளமான மாணவர்கள் நீட் தேர்வால் உயிரிழந்திருக்கிறார்கள். இத்தகைய உயிரிழப்புகள் இப்போது வட மாநிலங்களிலும் நடக்க ஆரம்பித்திருக்கிறது.

**இரக்கமற்ற மோடி அரசு!**

கடந்த 14ஆம் தேதி ஜார்கண்டைச் சேர்ந்த மாணவி, ராஜஸ்தானில் தற்கொலை செய்து கொண்டார். நீட் தேர்வுக்கு படிப்பதற்காக வந்தவர் அவர். ராஜஸ்தான் மாநிலத்தில் மட்டும் கடந்த ஆண்டு, 22 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். இத்தனை தற்கொலைகள் நடக்கிறதே, இதற்கான காரணத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு ஆராய்ந்ததா? இரக்கமற்ற அரசாகத்தானே மோடி அரசு இருக்கிறது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் எத்தனை வாக்குறுதி கொடுத்தார்கள்? நிறைவேற்றினார்களா? நேற்று ஒரு தாய்மார் கேட்கிற மாதிரி, போனில் மீம்ஸ் பார்த்தேன். "எங்கள் முதல்வர் சொன்ன 1000 ரூபாய் வந்தாச்சு... பிரதமர் சொன்ன 15 லட்சம் என்னாச்சு?" இது வைரல் ஆகிவிட்டது.

நாம் பிரதமரைப் பார்த்து என்ன கேட்கிறோம்? இதைச் செய்யுங்கள் என்று, அதைச் செய்யுங்கள் என்று புதிதாக எந்த வாக்குறுதியையும் கேட்கவில்லை. புதிதாக எந்த கோரிக்கையையும் வைக்கவில்லை. நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக் காட்டியிருக்கிறீர்களா? இல்லையே என்று தான் கேட்கிறேன்.

**பிரச்சினைகளை எழுப்பி, திசை திருப்பி குளிர்காயப் பார்க்கிறார்கள்!**

பிரதமர், தமிழ்நாட்டுக்கு வந்து பல வாக்குறுதிகளைக் கொடுத்தார். அந்த வாக்குறுதிகளையாவது நிறைவேற்றினாரா? இல்லை. உதாரணத்துக்கு ஒன்று கேட்கிறேன். மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்போம் என்று 2015ஆம் ஆண்டு சொன்னார்கள். இப்போதுதான் டெண்டரே விட்டிருக்கிறார்கள். இவை அனைத்தையும் யாரும் நினைவுபடுத்திவிடக் கூடாது என்றுதான் மற்ற பிரச்சினைகளைக் கிளப்பிக் குளிர்காயப் பார்க்கிறார்கள்.

சரி என்னதான் சாதனை இந்த ஒன்பது வருடத்தில் செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால், 2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வரும்போது சமையல் சிலிண்டர் விலை 420 ரூபாய். இதை 1100 ரூபாய்க்கு உயர்த்தியது தான் மோடியின் சாதனை. மூன்று மடங்கு உயர்த்தினார்கள். தேர்தல் வருவதால் கண்துடைப்பு நாடகமாக இப்போது 200 ரூபாயை மட்டும் குறைத்திருக்கிறார்கள். இதை மக்கள் நம்புவார்களா?

2014ஆம் ஆண்டு மோடி ஆட்சிக்கு வரும் போது பெட்ரோல் ஒரு லிட்டர் 71 ரூபாய். இப்போது ஒரு லிட்டர் 102 ரூபாய். ஒன்றிய அரசின் வரியை மூன்று மடங்கு உயர்த்தி இருக்கிறார்கள். மோடி ஆட்சிக்கு வரும்போது டீசல் ஒரு லிட்டர் 55 ரூபாய். இப்போது ஒரு லிட்டர் 94 ரூபாய். ஒன்றிய அரசின் வரியை ஏழு மடங்கு உயர்த்தி இருக்கிறார்கள்.

கடந்த 9 ஆண்டுகளில் மட்டும் 100 லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கி இருக்கிறது பா.ஜ.க. அரசு. இவர்கள் ஆட்சிக்கு வரும்போது இந்தியாவுக்கு இருந்த கடன் 55 லட்சம் கோடி ரூபாய்தான். அது, இந்த 9 ஆண்டுகாலத்தில் 155 லட்சம் கோடி ரூபாய் ஆகிவிட்டது.

பெரிய நிறுவனங்களுக்கு 14 லட்சம் கோடி ரூபாய் பணத்தை வாராக் கடன் என்று சொல்லி தள்ளுபடி செய்திருக்கிறது பா.ஜ.க. அரசு. பணவீக்கம் அதிகமாகி இருக்கிறது. இப்படி வேதனையை மட்டுமே மக்களுக்குத் தந்த பா.ஜ.க. ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும்.

**பா.ஜ.க.வின் ஊழல் முகத்தை மக்களிடையே அம்பலப்படுத்துவோம்!**

அண்மையில் வெளியான சி.ஏ.ஜி. அறிக்கையின்படி மட்டும் 7.50 லட்சம் கோடி ரூபாய்க்கு முறைகேடு நடந்திருக்கிறது. ஊழல் குற்றச்சாட்டில் அதிகம் சிக்கி இருப்பது சி.பி.ஐ. அதிகாரிகள்தான் என்று மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையமே புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறது. இத்தகைய ஊழல் முகத்தை மறைக்கப் பார்க்கிறார்கள். இந்த ஊழல் முகத்தைக் கிழித்தெறிய வேண்டும். இதுதான் நம் முன் இருக்கும் முக்கிய கடமை. பா.ஜ.க.வின் ஊழல் முகத்தைப் பொதுமக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி ஆக வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நமது கூட்டணிதான் புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் வெற்றி பெறப்போகிறது. அதில் எந்த மாற்றமும் இல்லை. அதில் சந்தேகமே இல்லை. தமிழ்நாட்டில் மட்டும் நாம் வெற்றி பெற்றால் போதாது. இந்தியா முழுமைக்கும் வெற்றி பெற்றாக வேண்டும். அதனால்தான் இந்தியா கூட்டணியை உருவாக்கி இருக்கிறோம்.

நம்முடைய ஆட்சி ஒன்றியத்தில் அமைந்தால் 15 மாதத்தில் மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனையைக் கட்டி எழுப்ப முடியுமா? முடியாதா?

**'நீட்' தேர்வில் இருந்து விலக்குப் பெற முடியுமா? முடியாதா?**

தமிழ்நாட்டுக்குத் தேவையான ரயில்வே திட்டங்களை ஏராளமாகக் கொண்டு வர நம்மால் முடியும்.

புதிய விமான நிலையங்கள் - மெட்ரோ ரயில்களை இயக்க முடியும். இவை எல்லாமே நம்முடைய இந்தியா கூட்டணி ஆட்சி அமையுமானால் தமிழ்நாட்டுக்கு கொண்டு வர முடியும். இந்தியா முழுமைக்கும் சமூகநீதியை உருவாக்கித் தர நம்மால் முடியும்.

**நமது கொள்கைக் கடமை!**

இங்கு நாம் அமல்படுத்தி வரும் திராவிட மாடல் திட்டங்களை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கும் கொண்டு சேர்க்க முடியும். இத்தகைய பொற்காலத்தை உருவாக்கித் தரத்தான் நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகிறது. இந்தியாவைக் காக்க இந்தியா கூட்டணியை வெல்ல வைக்க வேண்டியது நம்முடைய அரசியல் கடமை மட்டுமல்ல! கொள்கைக் கடமையும்தான்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதிமொழி என்பது நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 இடங்களையும் வெற்றி பெற்றே தீருவோம் என்பதுதான்.

**ஆட்சியில் அதிகாரம் செலுத்தும் கூட்டணிக் கட்சியாக கழகத்தை உயர்த்துவோம்!**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழா ஆண்டில் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதிமொழி என்பது, இந்திய நாடாளுமன்றத்தில் ஆட்சி அதிகாரத்தை செலுத்தும் கூட்டணிக் கட்சியாக நம்முடைய இயக்கத்தை உயர்த்துவோம் என்பதுதான்.

அன்பு உடன்பிறப்புகளே! உங்களின் ஒருவன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அழைக்கிறேன். நாற்பதுக்கு நாற்பது வெல்வோம்! இந்தியாவைக் காப்போம்! இந்தியா கூட்டணி வெற்றிக்கு முழுமையாகப் பாடுபடுவோம்! என்று இந்த வேலூர் மண்ணில் நடைபெறும் முப்பெரும் விழாவில் உறுதியேற்போம்... உறுதியேற்போம்... உறுதியேற்போம்... நன்றி, வணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### நாற்பதுக்கு நாற்பதும் வெல்வோம்! இந்தியாவைக் காப்போம்!

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழா ஆண்டில் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதிமொழி என்பது, இந்திய நாடாளுமன்றத்தில் ஆட்சி அதிகாரத்தை செலுத்தும் கூட்டணிக் கட்சியாக நம்முடைய இயக்கத்தை உயர்த்துவோம் என்பது தான். அன்பு உடன்பிறப்புகளே! உங்களின் ஒருவன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அழைக்கிறேன். நாற்பதுக்கு நாற்பது வெல்வோம்! இந்தியாவைக் காப்போம்! இந்தியா கூட்டணி வெற்றிக்கு முழுமையாகப் பாடுபடுவோம்! என்று இந்த வேலூர் மண்ணில் நடைபெறும் முப்பெரும் விழாவில் உறுதி யேற்போம்... உறுதியேற்போம்...**

---

## வேதனையை மட்டுமே மக்களுக்குத் தந்த பா.ஜ.க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்!

---

**உங்கள் எல்லோரையும் 'தம்பி' என்று அழைத்தார் பேரறிஞர் அண்ணா. 'உடன்பிறப்பே' என்று அழைத்தார் கலைஞர். நான் உங்களில் ஒருவன். நான் வேறு நீங்கள் வேறு இல்லை. உங்களால் உருவாக்கப்பட்டவன் நான். தொண்டர்களால் தலைவனாகவும் தொண்டர்களால் முதலமைச்சராகவும் ஆக்கப்பட்டவன் நான். கழகத்தின் எந்தப் பொறுப்புக்கும் ஆசைப்படாமல் அதிகாரத்தின் எந்தப் பதவியையும் அனுபவிக்காமல் கருப்புச் சிவப்புக் கொடியைப் பிடித்திருந்தால் போதும் கருப்பு சிவப்பு வேட்டியைக் கட்டியிருந்தால் போதும் என்ற உணர்வோடு உயிர்வாழும் தொண்டர்கள் இருக்கும் திசைநோக்கி நான் வணங்குகிறேன்.**



தந்தை பெரியார் அவர்களின் 145 ஆவது பிறந்த நாளான "சமூக நீதி" நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.9.2023) வேலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

### பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் ஆட்சியைப் போன்றே


# முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியும் எம் தந்தை பெரியாருக்கே காணிக்கை!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, செப். 18-

பகுத்தறிவுப் பகலவன், சுய மரியாதைச் சுடரொளி, மாபெரும் சமூக சீர்திருத்தவாதி தந்தை பெரியார் அவர்களின் 145-வது பிறந்த நாளையொட்டி நேற்று (17.9.2023) தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், "பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் ஆட்சியைப் போன்றே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியும் எம் தந்தை பெரியாருக்கே காணிக்கை" என்று குறிப்பிட்டுள்ளார்.

தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**அவர் வாழ்வே ஓர் அரசியல் தத்துவம்!**

**மொழி, நாடு, மதம் போன்றவற்றைக் கடந்து மனிதநேயத்தையும் சுயமரியாதையையும் அடிப்படையாகக் கொண்ட அரசியலை வலியுறுத்திய மாபெரும் சீர்திருத்தவாதி அவர்.**

**தாம் எண்ணியவை எல்லாம் சட்டவடிவம் பெறுவதைப் பார்த்துவிட்டே மறைந்த பெருமை அவருக்கே உரித்தானது!**

**பெண் விடுதலைக்காகவும், சமத்துவச் சமுதாயத்துக்காகவும் நாம் இன்று தீட்டும் திட்டங்களுக்கெல்லாம் அடிப்படை பெரியாரியலே!**

**பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் ஆட்சியைப் போன்றே இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் ஆட்சியும் எம் தந்தை பெரியாருக்கே காணிக்கை!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## 13 மாவட்டங்களில் - 19 மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும்

# இலங்கைத் தமிழர்களுக்கு 1,591 புதிய வீடுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேலூரில் நடைபெற்ற விழாவில் திறந்து வைத்தார்!

**வேலூர், செப். 18-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.9.2023) பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் வேலூர் மாவட்டம், மேல்மொணவூர், இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் நடைபெற்ற விழாவில், 13 மாவட்டங்களில் உள்ள 19 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 79 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1591 வீடுகளை திறந்து வைத்தார்.**

தமிழ்நாட்டில் உள்ள 29 மாவட்டங்களில் 104 தற்காலிக முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு 19,498 குடும்பங்களைச் சார்ந்த 58,272 நபர்கள் தங்க வைக்கப்பட்டு வசித்து வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021-2022 சட்டமன்ற கூட்டத் தொடரின்போது பேரவையில் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு இனி பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை அமைத்து தருவதை இந்த அரசு உறுதி செய்யும் என்று அறிவித்ததுடன், இலங்கை அகதிகள் முகாம் என்பதை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்று பெயர் மாற்றம் செய்தும் அறிவித்தார்.

**இலங்கைத் தமிழர்களுக்கு அனைத்து வசதிகளுடன் வீடுகள்!**

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்திர பணக்கொடை, துணிமணிகள், பாத்திரங்கள், கல்வி உதவித் தொகை ஆகிய நலத்திட்டங்களை உயர்த்தப்பட்ட விகிதத்தில் வழங்கப்படும் என அறிவித்ததுடன், இலவச சமையல் எரிவாயு இணைப்பு, அடுப்பு மற்றும் சமையல் எரிவாயு மானியம், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும் எனவும் அறிவித்தார். இத்திட்டங்கள் அனைத்தும் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

> **"முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப் பட்டுவரும் மாதாந்திர பணக்கொடை, துணிமணிகள், பாத்திரங்கள், கல்வி உதவித் தொகை ஆகிய நலத் திட்டங்களை உயர்த்தப்பட்ட விகிதத்தில் வழங்கப்படும் என அறிவித்ததுடன், இலவச சமையல் எரிவாயு இணைப்பு, அடுப்பு மற்றும் சமையல் எரிவாயு மானியம், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும் எனவும் அறிவித்தார். இத்திட்டங்கள் அனைத்தும் சீரிய முறையில் செயல் படுத்தப்பட்டு வருகின்றன."**

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இலங்கைத் தமிழர்களது முகாம்களில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 7,469 வீடுகள் புதிதாக கட்டித்தரப்படும் எனவும் அறிவித்திருந்தார். அவற்றில் முதற்கட்டமாக, 3510 வீடுகள் புதிதாக கட்டித்தரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டு, அதற்காக ரூ.176.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குடியிருப்பு சாவிகளை வழங்கி முதல்வர் வாழ்த்தினார்!**

அதன் தொடர்ச்சியாக 20 மாவட்டங்களில் உள்ள 35 இலங்கைத் தமிழர் முகாம்களில் 3,510 புதிய வீடுகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் கட்டப்பட்டு வருகிறது. அவற்றில், தற்போது 13 மாவட்டங்களில் உள்ள 19 முகாம்களில் ரூ.79.70 கோடி செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள 1,591 வீடுகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வேலூர் மாவட்டத்தில் நேரடியாகவும், இதர 12 மாவட்டங்களில் காணொலிக் காட்சி வாயிலாகவும் திறந்து வைத்தார். மேலும், மேல்மொணவூர், இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம் இல்லவாசிகளுக்கு புதிய குடியிருப்புகளை வழங்கிடும் அடையாளமாக 5 குடும்பத்தினருக்கு குடியிருப்புக்கான சாவிகளையும், 8 வகையான வீட்டு உபயோக பொருட்களையும், மரக்கன்றுகளையும், மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களையும் வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.9.2023) பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் வேலூர் மாவட்டம், மேல்மொணவூர், இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் நடைபெற்ற விழாவில், 13 மாவட்டங்களில் உள்ள 19 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 79 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1591 வீடுகளை திறந்து வைத்தார். இவ்விழாவில் அமைச்சர்கள் துரைமுருகன், இ.பெரியசாமி, கே.ஆர். பெரியகருப்பன், ஆர்.காந்தி, செஞ்சி கே.எஸ்.மஸ்தான், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், து.மு.கதிர் ஆனந்த், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், பா.கார்த்திகேயன், திருமதி அமலு விஜயன், திருமதி ஆ.தமிழரசி, வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறை ஆணையர் திருமதி ஜெசிந்தா லாஸரஸ், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**19 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் கட்டப்பட்டுள்ள 1,591 வீடுகளை திறந்து வைத்தார்.**

வேலூர் மாவட்டம், மேல்மொணவூர் முகாமில் 11 கோடி ரூபாய் செலவில் 220 வீடுகளும், ஈரோடு மாவட்டம், பவானிசாகர் முகாமில் 21 கோடி ரூபாய் செலவில் 420 வீடுகளும், சேலம் மாவட்டத்தில் 13.22 கோடி ரூபாய் செலவில், பவளத்தானூர் முகாம், அத்திக்காட்டானூர் முகாம் மற்றும் குறுக்குப்பட்டி ஆகிய முகாம்களை ஒருங்கிணைக்கப்பட்டு 244 வீடுகளும், தம்மப்பட்டி முகாமில் 20 வீடுகளும், விருதுநகர் மாவட்டத்தில் மொத்தம் 7.02 கோடி ரூபாய் செலவில், செவலூர் முகாமில் 3.11 கோடி ரூபாய் செலவில் 62 வீடுகளும், அனுப்பன்குளம் முகாமில் 40 இலட்சம் ரூபாய் செலவில் 8 வீடுகளும், குல்லூர் சந்தை முகாமில் 3.51 கோடி ரூபாய் செலவில் 70 வீடுகளும், கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டூர் முகாமில் 5.60 கோடி ரூபாய் செலவில் 112 வீடுகளும், திருவண்ணாமலை மாவட்டம், புதிப்பாளையம் மற்றும் பையூர் முகாம்கள் ஒருங்கிணைக்கப்பட்டு 5.57 கோடி ரூபாய் செலவில் 111 வீடுகளும், சிவகங்கை மாவட்டம், ஒக்கூர் முகாமில் 4.51 கோடி ரூபாய் செலவில் 90 வீடுகளும், தூத்துக்குடி மாவட்டம், தாப்பாத்தி முகாமில் 2.60 கோடி ரூபாய் செலவில் 52 வீடுகளும், தருமபுரி மாவட்டம், சின்னாறு அணை முகாமில் 2.51 கோடி ரூபாய் செலவில் 50 வீடுகளும், கிருஷ்ணகிரி மாவட்டம், பாம்பாறு அணை முகாமில் 1.86 கோடி ரூபாயில் 37 வீடுகளும், திருநெல்வேலி மாவட்டம், சமூகரெங்கபுரம் முகாமில் 1.77 கோடி ரூபாய் செலவில் 35 வீடுகளும், மதுரை மாவட்டம், திருவாதவூர் முகாமில் 1.51 கோடி ரூபாய் செலவில் 30 வீடுகளும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், வாழவந்தான்கோட்டை முகாமில் 1.51 கோடி ரூபாய் செலவில் 30 வீடு களும் என மொத்தம் 1591 வீடுகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்டன. மேலும், மேல்மொணவூரில் இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாம்களில் கட்டப்பட்டுள்ள வீட்டினையும் நேரடியாகச் சென்று திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இலங்கைத் தமிழர் முகாம்களில் குடிநீர், மின்சாரம், கழிப்பிடம் மற்றும் சாலை வசதிகள் புதிதாகவும் ஏற்கனவே உள்ளவற்றை உடனுக்குடன் சீர்படுத்தியும் தரப்படும் என்று அறிவித்திருந்தார். அதன்படி, மேற்படி 13 மாவட்டங்களில் உள்ள 19 முகாம்களில் ரூ.11.33 கோடி செலவில் இதர அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் மதிப்புடன், மேம்படுத்தப்பட்ட, பாதுகாப்பான வாழ்க்கை வாழ்வதை இந்த அரசு மீண்டும் உறுதி செய்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக பிற மாவட்டங்களில் உள்ள முகாம்வாழ் தமிழர்களுடன் கலந்துரையாடினார். அப்போது பயனாளிகளிடம் தமிழ்நாட்டிற்கு வந்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றும், பிள்ளைகள் என்ன படிக்கிறார்கள்? என்றும், தற்போது கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் வசதியாக உள்ளதா? என்றும் கேட்டறிந்தார். அதற்கு பதிலளித்த பயனாளி ஒருவர் தன்னுடைய குடும்பம் இம்முகாமிற்கு வந்து 33 வருடங்கள் ஆகிறது என்றும் நெருக்கடியான சூழ்நிலையில் வசித்து வந்ததாகவும், தற்போது கட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ள வீடு நல்ல வசதியாக உள்ளது என்றும், அங்கன்வாடி, நூலகம், பொது விநியோக அங்காடி உள்ளிட்ட அனைத்து வசதிகள் உள்ளது என்றும் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என்றும் தன்னுடைய நன்றியைத் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நன்றி கூறுவதோடு மட்டுமல்லாமல், வழங்கப்பட்டுள்ள வீடுகளை நன்றாக பராமரித்திட வேண்டும் என்றும், சுற்றுப்புறங்களை சுகாதாரமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

முன்னதாக முதல்வர் அவர்கள் 13 மாவட்டங்களில் 19 இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாம்களில் கட்டப்பட்ட புதிய குடியிருப்புகளின் புகைப்படத் தொகுப்பினை பார்வையிட்டார்.

இவ்விழாவில் அமைச்சர்கள் துரைமுருகன், இ.பெரியசாமி, கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.காந்தி, செஞ்சி கே.எஸ்.மஸ்தான், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், து.மு.கதிர் ஆனந்த், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், பா.கார்த்திகேயன், திருமதி அமலு விஜயன், திருமதி ஆ. தமிழரசி, வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறை ஆணையர் திருமதி ஜெசிந்தா லாஸரஸ், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி....; வரும் நாடாளுமன்றத் தேர்தலில், பீகார் மாநிலத்தில் உள்ள 40 தொகுதிகளிலும், பா.ஜ.க. தலைமையிலான என்.டி.ஏ. வெற்றி பெறும் என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆரூடம் கூறியிருக்கிறாரே?

**பட்டணம் :** ஆமாம் அய்யா; அவர் அப்படிக் கூறியிருப்பது, தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் இங்குள்ள 39 தொகுதிகளிலும் என்.டி.ஏ. வெற்றி பெறும் என்று கூறி வருவதற்கு ஒப்பானதாகும்.

"எண்ணங்கள் குதிரைகளானால், எண்ணிய நேரத்தில் காத தூரம் பறக்கலாம் !" என்றொரு பழமொழி இருக்கிறதே !




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.9.2023) பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் வேலூர் மாவட்டம், மேல்மொணவூர், இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் நடைபெற்ற விழாவில், 13 மாவட்டங்களில் 19 இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாம்களின் பழைய குடியிருப்புகள் மற்றும் கட்டப்பட்ட புதிய குடியிருப்புகளின் புகைப்படத் தொகுப்பினை பார்வையிட்டார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், து.மு.கதிர் ஆனந்த், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், பா.கார்த்திகேயன், திருமதி அமலு விஜயன், திருமதி ஆ. தமிழரசி, வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறை ஆணையர் திருமதி ஜெசிந்தா லாஸரஸ், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

அமெரிக்காவில் விபத்தில் உயிரிழந்த

## இந்திய மாணவிக்கு பட்டம்!

சியாட்டில், செப். 18 –

அமெரிக்காவில் விபத்தில் உயிரிழந்த இந்திய மாணவிக்கு பட்டமளிக்க முடிவு செய்திருக்கிறோம் என அவர் படித்த பல்கலை கழகத்தின் வேந்தர் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் நார்த்ஈஸ்ட் பல்கலை கழகத்தில் படித்து வந்த மாணவி ஜானவி கண்டுலா (வயது 23). ஆந்திர பிரதேச மாநிலத்தில் இருந்து படிப்பதற்காக அவர் அமெரிக்கா சென்றுள்ளார். இந்நிலையில், இந்த ஆண்டு ஜனவரியில் தெரு ஒன்றை கடந்து செல்லும்போது, சியாட்டில் நகர போலீஸ் வாகனம் ஒன்று அவர் மீது மோதிவிபத்துஏற்படுத்தியது. இதில், அவர் உயிரிழந்து உள்ளார்.

இந்நிலையில், அந்த பல்கலை கழகத்தின் வேந்தர் கென்னத் ஹென்டர்சன் கூறும்போது, கண்டுலா மறைவை அடுத்து, அவருக்கு பட்டமளிக்க திட்டமிட்டு இருக்கிறோம். இதனைஅவருடைய குடும்பத்திற்குவழங்கஇருக்கிறோம் என கூறியுள்ளார்.

அடுத்த வாரம் பல்கலைக்கழக வளாகத்தில், நல்லிணக்கம் சார்ந்து எங்களுடையமாணவர்கள்ஒன்றாக கூடக்கூடிய நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது என்றும் அதுபற்றிய பல்கலை கழகத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; தி.மு.க. அழிந்துவிடும், காணாமல் போகும் என்றெல்லாம் தமிழக பா.ஜ.க. தலைவர் ஒருவர் புலம்பிக் கொண்டு திரிகிறாரே; அவரை என்ன செய்ய ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; அவரை யாரும் ஒன்றும் செய்ய வேண்டாம்.**

**“அவருடைய நாக்கு அழுகிவிடும்” என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஒருவர் விடுத்திருக்கும் சாபத்தையே பா.ஜ.க. தலைவருக்குச் சமர்ப்பித்து விடலாம்.**

டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை! டி.எம்.ஜோசப் தலைமை!

## பம்மல் வடக்குப் பகுதியில் கலைஞர் நூற்றாண்டு - சாதனை விளக்கக் கூட்டம்!

### குத்தாலம் அன்பழகன் - இ.கருணாநிதி பங்கேற்பு! த.ஜெயக்குமார் - கோ.காமராஜ் - மு.சித்ரா தேவி வரவேற்புரை!

காஞ்சிபுரம், செப்.18

தாம்பரம் மாநகரம் - பம்மல் வடக்குப் பகுதி - 31-வது வட்ட தி.மு.க. சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் நாளை (19.9.2023-செவ்வாய் கிழமை) மாலை 5 மணியளவில் வேம்புலியம்மன் கோவில் அருகில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு 31-வது வட்டக் கழகச் செயலாளர் டி.எம்.ஜோசப் தலைமை வகிக்கிறார். கே.சந்திரன், மு.ஸ்ரீதர், இரா.குமரேசன், இரா.பாபுஜி, ஏ.சேகர், தி.ச. நடராஜன், சத்தியவாணி விஜயகுமார், மா.விஜய குமார், பி.கல்யாண குமார், கே.சீனிவாசன், ஆர்.ஸ்ரீதர், டி.எம்.செல்வம், என்.முருகானந்தம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பகுதிச் செயலாளர் த. ஜெயக்குமார், துணை மேயர் கோ.காமராஜ், மாமன்ற உறுப்பினர் சித்ராதேவி முரளிதரன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைக் கழக சொற்பொழிவாளர் குத்தாலம் அன்பழகன் ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

இக்கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, வே. கருணாநிதி, இரவி. நரேஷ் கண்ணா, எஸ்.கே.நெப்போலியன், சத்தியபிரபு, எல்.பிரபு, ச.பிரபு, க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, சி.பார்த்தசாரதி, க.சுந்தர மூர்த்தி, பி.ஆண்டவன், இ.பாலாஜி, ப.அன்பழகன், க.மோகன், மு.நி. தமிழ்குமரன், ஜெ.சண்முக சுந்தரி, வி.கலைவாணி, எம்.வி. வாணிஸ்ரீ, த.சித்ரா உள்ளிட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள், 29, 30-வது வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், முன்னாள் வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஆர்.முரளிதரன், வி. கோதண்டராமன், வி.கௌதம், பி.கார்த்திக், ஆர். ஜனார்த்தனன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

**சோ.துரைபாண்டியன் நிகழ்ச்சி ஏற்பாடு! கா.பொன்னரசு ஒருங்கிணைப்பில்**

## கோவை வடக்கு - அண்ணா நகரில் கழக முப்பெரும் விழா!

### மாலதி தலைமையில் கழகத்தினர் கொண்டாட்டம்!

சென்னை, செப்.18

தலைமைக் கழகம் அறிவித்துள்ளபடி கழக உடன்பிறப்புகளுடன், பொது மக்களை ஒருங்கிணைத்து பவள விழா மற்றும் முப்பெரும் விழாவானது, நெஞ்சுரம் வாய்ந்த,புலமையின் சிகரமான, நமது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கட்சி தோன்ற முழுமுதற் காரண கர்த்தாக்களில் ஒருவரான பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் (15.9.2023), மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க,, சனாதனத்தை எதிர்த்து வீறு கொண்டு குரல் கொடுத்து, இந்திய நாட்டையே நம் கட்சியின் பக்கம் திருப்பிய இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளடக்கிய,, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமூகநீதியை தொடர்ந்து காத்திடும் நமது திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நாள் (17.9.2023) மற்றும் சீர்திருத்த செம்மல், பகுத்தறிவு பகவலன் தந்தை பெரியாரின் பிறந்த தினம் (17.9.2023) ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்து, நேற்று (17-ஆம் தேதி) காலையில் நமது கட்சியினர் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து, இனிப்புகள் வழங்கி தெரு நெடுகிலும் வெடிகள் வெடித்து, அறிஞர் அண்ணா, பகுத்தறிவு பகவலன் தந்தை பெரியார் ஆகியோரது திருஉருவப் படத்திற்கு மலர்களால் அலங்கரித்து மாலை அணிவித்து மரியாதை செய்து கோலாகலமாக கோவையே குலுங்கும் வண்ணம் விழாக்கோலம் பூண்டது.

இவ்விழாவில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் வழி காட்டுதலின் பேரில் தமிழ் நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தினந்தோறும் அயராத உழைப்பினை,, நலத்திட்ட உதவிகளை எடுத்துரைத்து,, முக்கிய நிகழ்வுகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்த்தல் போன்ற கட்சியின் அரும்பெரும் கொள்கைகளை அனைவரும் ஆரவார முழக்கங்களுடன் எடுத்துரைக்கப்பட்டது.

கோவை வடக்கு மாவட்டம் உள்ளடக்கிய அறிஞர் அண்ணா நகர் காவல் நிலையத்திற்கு அருகில் நடைபெற்ற இந்த நிகழ்வானது, அவைத் தலைவர் சோ. துரைப்பாண்டியன் ஏற்பாட்டில் , மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் திருமதி மாலதி தலைமையில், மூத்த முன்னோடியும், முன்னாள் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் துணை அமைப்பாளர்

கா.பொன்னரசு ஒருங்கிணைப்பில் , மூத்த முன்னோடியும் 34-வது வட்டக் கழக அவைத் தலைவருமான நாகராஜ், 35-வது வார்டின் மாமன்ற உறுப்பினர் சம்பத், மூத்த முன்னோடியும் 35-வது வட்டக் கழக துணைச் செயலாளர் குணசீலன், கவுண்டம்பாளையம் பகுதிக்கழக துணைச் செயலாளர் திருமதி கண்ணகி, முன்னாள் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி ஆல்ஸ் பிரசன்னா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வட்டச் செயலாளர் தாமோதரன், முன்னாள் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி உமா ஆகியோர் முன்னிலை வகிக்க கொண்டாடப்பட்டது.

இதில் தலைமை வன பாதுகாவலர் பி. வரதராஜ், இலக்கிய அணி ரவி முரசு , விளையாட்டு மேம்பாட்டு அணி மோகன் குமார், கோவில் கமிட்டியை சார்ந்த சந்திரலிங்கம், திருமதி சரஸ்வதி தேவி, வழக்கறிஞர் அணி சுப்பிரமணியன், இளைஞர் அணி விக்னேஷ், மூத்த முன்னோடிகள் ரங்கா வீதி அரங்கசாமி, பி.ஜி.ராமதாஸ்,

முன்னாள் காவல் உதவி ஆய்வாளர் மதிவாணன், அரிமா சங்க செயலாளர் குமரேசன், கோவை லேப் சிவக்குமார், லட்சுமி நகர் விநாயகர் கோவில் கமிட்டி நிர்வாகிகள் பாலன், கஜேந்திரன், கிஷோர் குமார், வர்த்தக அணி ராம்குமார், ஆட்டோ நகர் வீரப்பன், அன்பு நகர் சக்திவேல், ஜான் கழக முன்னோடிகள் சலூன் பாலன், இ சர்வீஸ் மோகன்ராஜ், ரியல் எஸ்டேட் ராதாகிருஷ்ணன், காய்கறி கடை பஞ்சு, சலாமத் பாட்சா, கவின்ராஜ், தீபக் குமார், லாண்டரி செந்தில், நந்தினி, கோயில் மிதுன், புனிதா கார்டன் பாலாஜி, பாத்திரக்கடை ராஜ பாண்டியன், முன்னாள் நலச் சங்கத் தலைவர் திருமண் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சைதை கிழக்கு பகுதிக் கழகச் செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான இரா.துரைராஜ்யின் தந்தை பொ.ராமசந்திரன் 6 ஆம் ஆண்டு நினைவு நாளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அன்னாரின் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி 1000 பொதுமக்களுக்கு உணவு வழங்கி நினைவில் வாழும் பொ.ராமசந்திரன் அறக்கட்டளை சார்பில் ஆம்னி வேன், நீத்தார் நினைவு ரதம், நீத்தார் குளிர்சாதன பெட்டிகள் ஆகியவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக சைதை கிழக்கு பகுதி திமுக விடம் ஒப்படைத்தார்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டத்தில்

## மகளிர்க்கு உரிமைத்தொகை வழங்கிய முதலமைச்சருக்கு நன்றி தீர்மானம்!

### மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் நடைபெற்றது!

திருவள்ளூர், செப். 18

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம் அமைச்சரும், மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் பூவிருந்தவல்லி தலைமையில் நடைபெறுகிறது. இதில் முன்னதாக மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சங்கீதா சீனிவாசன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் கு.தமிழ்செல்வி ஆகியோர் வரவேற்புரையற்றினார்கள் .

கழக மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் சேலம் சுஜாதா, தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநில நிர்வாகிகள் சி.ஜெரால்டு, பிரபு கஜேந்திரன், மாவட்ட கழக நிர்வாகிகள் வி.ஜெ.சீனிவாசன், காயத்திரி ஸ்ரீதர், எஸ்.ஜெயபாலன், பொதுகுழு உறுப்பினர்கள் த. எத்திராஜ், கு. விமல்வர்ஷன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், பூவிருந்தவல்லி நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை, மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் உதயா, வாணிஸ்ரீ, எம்.ரமணி, பேபி ஸ்ரீ, ஸ்டெல்லா, எஸ்.கெஜலஷ்மி, ஜே.சாந்தி, மீனாட்சி ஜெய்சங்கரன், க.சரளா, கோ.கோபிகா, காவிதா சுரேஷ் , மாவட்ட மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஜி.கௌரி, என். லட்சுமி, வி.சுமதி, எம். பவானி, ட.ரேவதி, இ. வாசுகி, எம்.காஞ்சனா, ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் .

இக்கூட்டத்தில் மேற்படி கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் பல்வேறு ஆலோசனை வழங்கினார். அப்போது பேசியதாவது:-

மகளிர் உரிமைத் தொகை வழங்கிய தமிழ் நாடு முதலமைச்சருக்கு மத்திய மாவட்ட கழகம் சார்பில் நன்றிகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழின தலைவர் டாக்டர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை மகளிர் அணி மற்றும் தொண்டர் அணி சார்பில் ஏழை, எளியவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக கொண்டாடிட வேண்டும்.

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு மகளிர் அணி மற்றும் தொண்டரணி நிர்வாகிகள் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செய்த சாதனைகளை எடுத்துக் கூறி தீவிரமாக தேர்தல் பணியாற்ற வேண்டும்.

மத்திய மாவட்டத்தில் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணிகளுக்கான உறுப்பினர்களை அதிக அளவில் சேர்த்திடும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர் சண் பிரகாஷ், டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், சே.பிரேம் ஆனந்த், என்.இ.கே.மூர்த்தி, ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், தி.வே.முனுசாமி, உள்ளாட்சி பிரதிநிதிகள் அமுதா பேபிசேகர், ஜோதி லட்சுமி, உஷாரணி ரவி, பரமேஸ்வரி கந்தன், யமுனா ரமேஷ், பி.எல்.ஆர்.தேவி யோகா, மற்றும் அணிகளின் நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் மகளிர் அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! ஏ.வி.ஆறுமுகம் ஏற்பாட்டில்! முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## திருவொற்றியூர் மத்திய பகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

### பேராசிரியர் சுபவீரபாண்டியன் சிறப்புரை! கலாநிதி வீராசாமி எம்.பி. - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. - தி.மு.தனியரசு பங்கேற்பு!

சென்னை, செப்.15-

திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம் திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளரும், இரண்டாவது மண்டலக்குழு தலைவருமான ஏ.வி.ஆறுமுகம் ஏற்பாட்டில் 11.9.2023, திங்கட்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் சின்ன மாத்தூர் சாலை, விநாயகர் கோயில் அருகில் நடைபெற்றது.

இப்பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், எம்.எல்.ஏ தலைமை வகித்தார்.

திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுபவீர பாண்டியன் சிறப்புரை யாற்றினார்.

இக்கூட்டத்தில் டாக்டர் கலாநிதிவீராசாமி எம்.பி, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, 1வது மண்டல குழுத் தலைவர் தி.மு.தனியரசு எம்.சி. எஸ்.நந்தகோபால், வை.மா. அருள்தாசன், வ.முத்துசாமி ஆகியோர் பேசினர்.

இதில் ஆர்.டி.ரமேஷ்குமார், வி.ஜி.தினகரன், துர்கா கோதண்டம், என். கிருஷ்ணமூர்த்தி, எஸ். ஸ்டாலின், பா.செல்வராஜ், என்.விஜயரங்கன், எ.ஞானமூர்த்தி, எஸ்.ஸ்ரீதர், சாலை டி. கணேசன், மு.செல்வம், டி.கரிகாலச்சோழன், மிசா.பா.மதிவாணன் வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு. ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், அறிவழகி, எம்.ஆனந்தன், என்.பரந்தாமன், ஜெ.ஜெ.ஜெய்மதன், டி.ஏ.ராஜீ இரா.முருகேசன், பி.சாந்தி, புழல். எம்.நாராயணன், ஜி.துக்காராம், ஜி.தயாளன் மி.வே.கருணாகரன், பெ.சரவணன், ஜி.ராஜேந்திரன், ந.திருசங்கு, இ.குமரவேல், யு.எஸ்.குறலரசன், அ.இந்துமதி, எம்.வஜ்சிரவேல், ஆர்.சி.ஆசைதம்பி, எம்.பி.குமார், ஆர்.எஸ். சம்பத், கே.பிராபாவதி, இரா.குமரேசன், தா. கார்த்திகேயன், டி.சி.வி. மணிகண்டன், எம்.எல்.சரவணன் குறுத்து சி.முனுசாமி, க.வி.சதீஷ்குமார், கேபிள்டிவி எம்.ராஜா, ஆர்.சுந்தர், ஏ.கா.கார்த்திகேயன், மு.சிவக்குமார், எம்.ஜெயசந்திரன்,

மு.மாணிக்கவேல், பி.தமிழரசு, கே.கண்ணன், கே.பி.சொக்கலிங்கம், கே.பவுல், எஸ்.தமிழ்ச்செல்வன் டி.சி.வி. ராஜகுமாரி, உமா சரவணன், சரண்யா கலைவாணன், சுசிலா ராஜா, பானுமதி சுந்தர், ஆர்.தினேஷ் குமார், எம்.சந்திரகுமார், எஸ்.ஆர் மலைராஜ், வி.வீரமுத்து, இ.வி.சரவணன், ஆர். மோகனசுந்தரம், பொன்.கோ.விஜயன், எஸ்.மகேந்திரன், எஸ்.ஆறுமுகம், ஜி. தினேஷ், எஸ்.கணேஷ்,

எம்.ராம்குமார், ஒய். ரஜினி நந்தி, ஆர்.ரஜினி பாபு, பி.எஸ்.சைனஸ், எஸ்.பாஸ்கர், ஆர்.டில்லி, டி.டி.எம்.பாபு, வி.பழனிவேல் சந்தானகிருஷ்ணன், கே.கார்த்திகேயன், மா.ஜெயராமன், மா.எத்திராஜ், அ.அப்துல் சலிம், ஆர்.டி.மதன்குமார், கேபிள்டிவி. த.கணேசன், சி.எஸ்.எஸ்.டி. சீனிவாசன், மோரை மு.சதீஷ்குமார், டி.ஜி.ஆர். மணிவண்ணன், ஜி.கே. இனியவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருவொற்றியூர் மத்திய பகுதி பொருளாளர் எம்.எஸ்.நாகலிங்கம் நன்றி கூறினர்.



சமூக நீதி நாளான தந்தை பெரியாரின் 145 ஆவது பிறந்த நாளான நேற்று (17.09.2023) கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவகத்தில் கோட்டயம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வி.விக்னேஸ்வரி தந்தை பெரியாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அருகில் வைக்கம் நகராட்சி தலைவர் திருமதி.ராதிகா ஷியாம், நகர்மன்ற உறுப்பினர் ராஜசேகரன், வட்டாட்சியர் தர்மஜென் ஆகியோர் உள்ளனர்.

# வேலூரில் கழக முப்பெரும் விழா - எழுச்சிமிகு காட்சிகள்!











கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.9.2023) வேலூர் மாநகர், பள்ளிகொண்டாவில் நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில், பெரியார் விருதினை கி. சத்தியசீலன் அவர்களுக்கும், அண்ணா விருதினை க. சுந்தரம் அவர்களுக்கும், கலைஞர் விருதினை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருதினை திருமதி மலிகா கதிரவன் அவர்களுக்கும், பேராசிரியர் விருதினை ந. இராமசாமி அவர்களுக்கும் வழங்கி சிறப்பித்தார்கள். இவ்விழாவில், கழக பொதுச் செயலாளரும், அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும் அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. ராசா, அந்தியூர் செல்வராஜ், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார், வேலூர் மாநகர கழகச் செயலாளர் ப. கார்த்திகேயன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (17.9.2023) வேலூர் மாநகர், பள்ளிகொண்டாவில் நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பில் "மக்களுடன் ஸ்டாலின் என்ற செயலியை கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் தொடங்கி வைத்தார். இவ்விழாவில், கழகப் பொருளானரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளரும் தொழில் துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜா, அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார், வேலூர் மாநகர கழகச் செயலாளர் ப.கார்த்திகேயன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (17.9.2023) வேலூர் மாநகர், பள்ளி கொண்டாவில் நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில், முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை சார்பில் தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில் பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர் ஆகியவற்றில், கழகப் பணியில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு "கழக விருது "க்கான சான்றிதழையும் மற்றும் பொற்கிழியையும் வழங்கினார். இவ்விழாவில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார், வேலூர் மாநகர கழகச் செயலாளர் ப. கார்த்திகேயன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, வேலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.இராஜமார்த்தாண்டன், துணை அமைப்பாளர்கள் என்.பிரகாஷ், வி.எம்.டி.ஏ. பாலாஜி, அர்ச்சனா ப.ச.நவீன் சங்கர், மா.சத்தியமூர்த்தி, ரா. பீடா சரவணன், கே.ராஜ்கமல் ஆகியோர் வெள்ளி வீரவாள் வழங்கி வாழ்த்துப் பெற்றார்கள். கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின், மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. ஆகியோர் உடன் உள்ளார்கள்.

### தந்தை பெரியார் 145 - ஆம் ஆண்டு பிறந்த நாள்!

## சமூக நீதி நாள் உறுதிமொழியேற்பு!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்றது

சென்னை, செப். 18 - பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 145ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவான நேற்று அவரது சிலைக்கு தமிழர் தலைவர் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டு, நினைவிடங்களில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தி, உறுதிமொழி ஏற்கப்பட்டது.

உலகத் தலைவர் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 145ஆம் ஆண்டு பிறந்த நாளான நேற்று (17.9.2023) சமூகநீதி நாளாக உலகம் முழுதும் கொண்டாடப்படுகிறது. இன்று காலை 10 மணியளவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் சென்னை வேப்பேரி பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ் சாலையில் அமைந்துள்ள அன்னை மணியம்மையார் சிலைக்கு கழகத் தோழர் தோழியர்கள் பெருந்திரளாக ஊர்வலமாக சென்று மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

பின்னர் பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் 21 அடி முழு உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டும், தந்தை பெரியார் நினைவிடம், அன்னை மணியம்மையார் நினைவிடம், சுயமரியாதை சுடரொளிகள் நினைவிடங்களில் மகளிரணி சார்பில் மலர் வளையம் வைக்கப்பட்டது. தந்தை பெரியார் நினைவிடத்தில் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தி தந்தை பெரியார் பிறந்தநாள் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் சமூக நீதி நாள் உறுதிமொழியைக்கூற, அவரைத் தொடர்ந்து அனைத்து தோழர்களும் உறுதிமொழி ஏற்றார்கள். உறுதிமொழி வருமாறு:

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற அன்பு நெறியையும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பண்பு நெறியையும் எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைப்பிடிப்பேன்! சுயமரியாதை ஆளுமைத் திறனும், பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்! சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன்! மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்! சமூக நீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர அறிவு ஆசான் தந்தைபெரியார் அவர்களது 145ஆம் ஆண்டு பிறந்த நாள் பெருவிழாவில் பெரியார் உலகமயமாகிறார். உலகம் பெரியார் மயமாகிறது என்கிற இலக்கோடு, மகிழ்ச்சியோடு நம்முடைய எதிர்ப்புகள் ஆயிரமாயிரம், தடைகள் பல்லாயிரம் என்றாலும், எங்களை யாரும் அசைக்கவோ, மறுக்கவோ முடியாது. இந்த கொள்கை ஆயிரங்காலத்துப்பயிராக வளர பெரியார் வழி நின்று புதியதோர் உலகத்தை சமைக்க மேலும் எங்களை அர்ப்பணிப்போம் அர்ப்பணிப்போம், வென்று காட்டுவோம் வென்று காட்டுவோம். வாழ்க பெரியார் வருக அவர் விரும்பிய புதிய உலகம்"

இவ்வாறு அனைவரும் உறுதியேற்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் பேரூராட்சியில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர்.க. சுந்தர் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டார். உடன் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் இரா நாகன். பேரூர் செயலாளர் என் எஸ் பாரி வள்ளல் பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார் மற்றும் ஒன்றிய. பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### தந்தை பெரியார் 145 வது பிறந்த நாள் !

## பம்மல் தெற்குப் பகுதியில் சமூக நீதி நாள் உறுதிமொழி!

### வே.கருணாநிதி எம்.சி. தலைமையில் கழகத்தினர் ஏற்றனர்!

சென்னை, செப்.18- தந்தை பெரியாரின் 145 வது பிறந்தநாளை முன்னிட்டு பம்மல் தெற்கு பகுதி த.மு.க சார்பில் அவரது திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி கழகத்தினர் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

பகுத்தறிவு தந்தை பெரியார் அவர்களின் 145வது பிறந்தநாளை முன்னிட்டு பம்மல் தெற்கு பகுதி தி.மு.க சார்பில் பம்மல் தெற்கு பகுதி செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழு தலைவர் வே.கருணாநிதி தலைமையில் பம்மல் போலீஸ் பூத் அருகில், பகுத்தறிவு தந்தை பெரியார் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்து,சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றனர்.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக பொருளாளர் ஆர். உமாசங்கர்,பகுதி கழக துணை செயலாளர்கள் பன்னீர்செல்வம்,துரை இளங்கோவன்,பகுதி கழகப் பிரதிநிதிகள் பா.டில்லி,மாமன்ற உறுப்பினர்கள் கல்யாணி டில்லி, மூ.இன்பசேகர், எ. மதினாபேகம்,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரவிச்சந்திரன்,வே.க. தன்ராஜ்,காஞ்சி வடக்கு மாவட்ட ஆதிதிராவிட நல குழு துணை அமைப்பாளர் மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் வேதாச்சலம், வட்டக் கழக செயலாளர்கள் வி.எஸ்.ஜெகநாதன், என். காந்தி, எ.அப்பாஸ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டனர்.


கலைஞர் கருணாநிதி பொன் விழா வளைவு
நாள் : 18.09.2023 திங்கட்கிழமை
மாலை 5.00 மணிக்கு
முன்னாள் துணை மேயர்
சி.பி.பவளவண்ணன்
அவர்களால் சைதையில்
முத்தமிழறிஞர்
கலைஞர்
பொன்விழா ஆண்டையொட்டி கட்டப்பட்ட வளைவை
அவரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு
புதுப்பிக்கப்பட்ட
கலைஞர் கருணாநிதி
பொன்விழா வளைவு
திறந்து வைக்க வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை
அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
மா.சுப்பிரமணியன் B.A.LL.B.,
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
செயலாளர் – சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.
மகிழ்வுடன் வரவேற்கும்...
சைதை மு.மகேஷ்குமார் B.A., M.C
துணை மேயர் - பெருநகர சென்னை மாநகராட்சி
தலைமை செயற்குழு உறுப்பினர்
South digital 9840100489


நாள்: 18.09.2023 திங்கட்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி
சைதையின் அடையாளம்..!
டாக்டர் கலைஞர் பொன்விழா வளைவு
நூற்றாண்டிற்கான புது பொலிவுடன்...
மாண்புமிகு மா.சுப்பிரமணியன் B.A.,LL.B.,
சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
அவர்களின் முன்னிலையில் திறந்து வைக்க வருகை தரும்...
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
அவர்களே வருக! வருக!!
முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
மு.மகேஷ்குமார்
துணை மேயர் - பெருநகர சென்னை மாநகராட்சி
எம்.கிருஷ்ணமூர்த்தி
சைதை மேற்கு பகுதி செயலாளர்
10 வது மண்டலக்குழுத் தலைவர் - பெருநகர சென்னை மாநகராட்சி
இரா.துரைராஜ்
சைதை கிழக்கு பகுதி செயலாளர்
13 வது மண்டலக் குழுத் தலைவர் - பெருநகர சென்னை மாநகராட்சி
சைதை மா.அன்பரசன்
தலைமை பொதுக்குழு உறுப்பினர்
வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன்
தலைமை பொதுக்குழு உறுப்பினர்
எம்.நாகா
142 வது வட்டச் செயலாளர்
எஸ்.பி.கோதண்டம்
142 (அ) வட்டச் செயலாளர்
சை.மு.சேகர்
139 (அ) வட்டச் செயலாளர்
ந.தமிழரசு
140 (அ) வட்டச் செயலாளர்
சைதை மேற்கு பகுதி திமுக
சென்னை தெற்கு மாவட்டம்
அன்புடன்:- D.N.சிவமணி
மாவட்ட பிரதிநிதி - சைதை மேற்கு பகுதி - சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க
Santhosh Design 99401 80492


சைதையின் அடையாளம்..!
டாக்டர் கலைஞர் பொன்விழா வளைவு
நூற்றாண்டிற்கான புது பொலிவுடன்...
நாள்: 18.09.2023 திங்கட்கிழமை ❖ நேரம்: மாலை 5.00 மணி
மாண்புமிகு
மா.சுப்பிரமணியன் B.A.,LL.B.,
சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
அவர்களின் முன்னிலையில் திறந்து வைக்க வருகை தரும்...
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
அவர்களே வருக! வருக!!
வரவேற்று மகிழும்...
எம்.கிருஷ்ணமூர்த்தி
சைதை மேற்கு பகுதி தி.மு.க செயலாளர்
10வது மண்டலக்குழுத் தலைவர் - பெருநகர சென்னை மாநகராட்சி
இரா.துரைராஜ்
சைதை கிழக்கு பகுதி தி.மு.க செயலாளர்
13 வது மண்டலக் குழுத் தலைவர் - பெருநகர சென்னை மாநகராட்சி
Santhosh Design 99401 80492



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 145 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, சேலம் கிழக்கு மாவட்டம், வீரபாண்டி சட்டமன்ற தொகுதி, சீரகாபாடி பகுதியில் உள்ள சமத்துவபுரத்தில் நிறுவப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# சனாதனம் நாட்டின் சட்டமானால் இந்தியர்கள் அடிமைகள் ஆவர்!

## கர்நாடகா முதல்வர் சித்தராமையா எச்சரிக்கை!

பெங்களூரு, செப்.18-

இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தை அழித்துவிட்டு சனாதன தர்மத்தையே இனி இந்திய அரசியல் சாசனமாக பாஜக நடைமுறைப் படுத்தும்; அப்படி நடைமுறைப்படுத்தினால் 90 சதவிகித இந்தியர்கள் அடிமைகளாக நடத்தப்படுகிற அபாயம் உருவாகும் என கர்நாடகா முதல்வர் சித்தராமையா எச்சரிக்கை மணி அடித்துள்ளார்.



கர்நாடகத்தில் அரசியலமைப்புச் சட்ட முகவுரையை வாசிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பெங்களூரு சட்டப் பேரவையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் துணை முதல்வர் டி.கே.சிவகுமார் மற்றும் பள்ளி மாணவர்கள் பெருமளவு பங்கேற்றனர். விதான் சவுதா முன்பாக அனைவரும் அரசியல் சாசனத்தின் முகப்பு பக்கத்தை வாசித்தனர்.

கர்நாடகா முதல்வர் சித்தராமையா உரை யாற்றினார். "போபாலில் பேசிய பிரதமர் மோடி, சனாதன தர்மத்தை ஆதரித்து பேசுகிறார். சனாதன தர்மம்தான் இந்தியாவின் ஒற்றுமைக்கு பலம் என்கிறார். இந்தியாவின் அரசியல் சட்டம் ஒழிக்கப்பட்டு இவர்கள் பேசுகிற சனாதன தர்மம் மனு தர்மம் அமலுக்கு வந்தால் தேசத்தின் 90 சதவிகித மக்கள் அடிமைகளாக்கப்படுவர். இதற்கான சதிகளைத்தான் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஜனநாயக கோட்பாடுகள் புத்தர், பசவண்ணர் காலத்தில் இருந்து இந்திய மண்ணில் நிலைபெற்ற ஒன்று. எனவே, அரசியல் சாசனத்துக்கு எதிரான சக்திகளின் சதிகளை இணைந்து முறியடிப்போம்".

இவ்வாறு கர்நாடகா முதல்வர் சித்தராமையா குறிப்பிட்டார்.

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் அ.தி.மு.க. - பா.ஜ.வின் நிலை என்ன?

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கேள்வி!

சென்னை, செப்.18-

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் அ.தி.மு.க., பா.ஜ.வின் நிலை என்ன என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு:

கடந்த சட்டமன்ற தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றியுள்ள தமிழ்நாடு அரசு, தற்போது முத்திரை பதிக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை நிறைவேற்றி யுள்ளதை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநில செயற்குழு பாராட்டி வரவேற்கின்றது.

இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டைச் சேர்ந்த, ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்கள் உட்பட தகுதி வாய்ந்த ஒரு கோடியே ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் தாய்மார்களும், சகோதரிகளும் பயன் அடைகின்றனர். பொருளாதார நெருக்கடிகள், ஒன்றிய அரசின் ஒத்துழைப்பு இல்லாமை



போன்ற கடும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும், தான் கொடுத்திட்ட வாக்குறுதியை நிறைவேற்றிட வேண்டும் என்கிற மன உறுதியுடன் நிறைவேற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை வாழ்த்துகின்றோம்.

தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. இத்திட்டத்தை வரவேற்கிறதா அல்லது எதிர்க்கின்றதா என்பது குறித்து வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். அதே போன்று ஒன்றியத்தில் ஆளும் கட்சியாக உள்ள பாஜ இத்திட்டம் குறித்து தனது நிலை என்னவென்பதனையும் பகிரங்கமாக தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.








சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி தி.மு.க



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.9.2023) பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் வேலூர் மாவட்டம், மேல்மொணவூர், இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் நடைபெற்ற விழாவில், 13 மாவட்டங்களில் உள்ள 19 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் கட்டப்பட்டுள்ள 1591 வீடுகளை திறந்து வைத்து, மேல்மொணவூர் இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாம் இல்லவாசிகளுக்கு புதிய குடியிருப்புகளை வழங்கிடும் அடையாளமாக 5 குடும்பத்தினருக்கு குடியிருப்புக்கான சாவிகளையும், வீட்டு உபயோக பொருட்களையும், மரக்கன்றுகளையும், மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களையும் வழங்கினார். இவ்விழாவில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், து.மு.கதிர் ஆனந்த், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், பா.கார்த்திகேயன், திருமதி அமலு விஜயன், திருமதி ஆ. தமிழரசி, வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறை ஆணையர் திருமதி ஜெசிந்தா லாஸரஸ், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நமது முதல்வரின் ஆட்சியை

# குறை கூறுவதற்கான காரணங்களை எதிர்க் கட்சியினர் தேடிவருகிறார்கள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேச்சு!



ஆலோசனைகள் பேரில்

சிவகங்கை, செப். 18 - தமிழக முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தினை துவக்கி வைத்தார். அவரது உத்தரவின் பேரில் மாவட்ட தலைநகரங்களில் அமைச்சர்கள் இத்திட்டத்தினை துவங்கி வைத்தார்கள். இதில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் 3 லட்சத்தி 27 ஆயிரத்து 71 மகளிர்களுக் கான ஏடிஎம் கார்டுகளை வழங்கி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது.

தமிழக முதல்வராக தளபதி அவர்கள் பொறுப் பேற்ற நாள் தமிழக அரசுக்கு கடும் நிதி நெருக்கடியில் இருந்தது. பல்வேறு ஆலோசனைகள் பேரில் நிதி நிலையை சீரமைத்து வருகிறார். 2021 தேர்தலில் கழகத்தின் வாக்குறுதியாக மகளிர்களுக்கு மாதம்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும் திட்டத்தினை செயல் படுத்தப்படும் என்று அறிவித்தார். அப்பொழுது எதிர்க்கட்சிகள் இது பொய்யான அறிவிப்பு. நிறைவேற்ற முடியாது என்று கூறிவ ந்தார்கள். ஆனால் அதை நிறை வேற்றிக் காட்டுவோம் என்று முதல்வர் அறிவித்தார்கள். இரண்டு ஆண்டுகளில் நிதி நிலைமை சீரானதும் தற்பொழுது பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் கலைஞர் நூற்றாண்டில் இத்திட்டம் மாதந்தோறும் செயல்படுத்தப் பட உள்ளது. தமிழகம் முழுவதும் ஒரு கோடி 6 லட்சத்து 50 ஆயிரம் பேர் மகளிர்கள் இதில் பயன் அடைகிறார்கள்.

இதுவரை இரண்டரை ஆண்டு ஆட்சியில் முதல்வர் அவர்கள் 85 சதவிகிதம் வாக்குறுதி களை நிறைவேற்றியுள் ளார். இதில் முத்தாய்ப்பு திட்டமாக கலைஞர் மகளிர் உரிமை திட்டம் ஆகும். 5 ஆண்டுகள் நிறைவேற்ற வேண்டியதை இரண்டரை ஆண்டுகளில் 85 சதம் வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளார்.

ஒன்பது ஆண்டுகளாக பதவியில் இருக்கும் பிரதமர் மோடி அவர் அறிவித்த வாக்குறுதிகளை நிறை வேற்றினாரா.இது பற்றி மக்கள் சிந்திக்க வேண்டும்.

பெட்ரோல், டீசல் விலை குறைப்பு, காஸ் விலை குறைப்பேன் என்று கூறினார். மேலும் கறுப்பு பணத்தை மீட்டு ஒவ்வொருவரின் வங்கி கணக்கில் ரூபாய் 15 லட்சம் வரவு வைக்கப்படும் என்று அறிவித்தார். இதை ஏதும் மோடி செய்தாரா. விலை வாசி நாளுக்கு நாள் ஏறி வருகிறது. எனவே 9 ஆண்டு கால பா.ஜ.க ஆட்சியில் சாதனையைவிட மக்கள் பட்ட வேதனை தான் அதிகம்.

எனவே தமிழகத்தில் திராவிட மாடல்ஆட்சி நடத்திவரும் முதல்வரின் ஆட்சியை குறை கூறுபவர்கள் அறிவற்றவர்கள். அவர்களுக்கு மக்களின் ஆதரவு கிடையாது. குறை கூற வேண்டும் என்பதற்காக ஏதாவது ஒரு பொய்யான காரணத்தை தேடி குறை கூறி வருகிறார்கள்.

அதற்கான காரணங்களை இப்பொழுது தேடி வருகிறார்கள் . கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை நிறைவேற்று வதில் கூட்டுற வுத்துறை பெருமளவில் பங்காற்றி யுள்ளது. நியாய விலைக் கடைகளில் விண்ணப்பம் வழங்குவது, ஆய்வு என்பதை முதலில் மேற்கொண்டது. தொடர்ந்து பல்வேறு பணிகள் எங்களது துறையின் மூலம் மேற்கொள்ளப்

பட்டது. 99 சதவீதம் கூட்டுறவுத்துறை மூலம் இந்த திட்டம் நிறைவேற துறை ஊழியர்கள் பெரும் பணியாற்றினார்கள். அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் புதிதாக 7,5000 ஆயிரம் புதிய வங்கி கணக்குகள் திறக்கப்பட் டுள்ளது. இது மத்திய கூட்டுறவு வங்கி வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் திறக்கப் பட்டுள்ளது. இதனால் வங்கிகள் புத்துணர்ச்சி பெறும்.

இத்திட்டத்தினால் பெண்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவார்கள். மற்ற திட்டங்களை செயல்படுத்தி யதை விட கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை செயல்படுத்தியதில்முதல்வர் மிகுந்த மகிழ்ச்சியுடன் உள்ளார் . மகளீர் மீது என்றும் அக்கறையாக உள்ளார். கழகம் ஆட்சியில் இருந்தபோதெல்லாம் மகளிருக்கான பல்வேறு திட்டங்களை தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றி யுள்ளார்

தலைவர் கலைஞர் வழியில் முதல்வர் தளபதி அவர்கள் மகளிருக்கு பல்வேறு திட்டங்களையும் உரிமைகளையும் வழங்கி வருகிறார். எனவே தொடர்ந்து தமிழக முதல்வர் தளபதி அவர்களுக்கு மகளிர்கள் தங்களது ஆதரவினை தொடர்ந்து தந்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர் .பெரிய கருப்பன் பேசினார்.

நிகழ்ச்சி முடிவடைந்த பிறகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் வாயிலாக ஒரு கோடி 6 லட்சத்து 50 ஆயிரம் மகளீர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது மாதந்தோறும் நடைபெறும் சிறப்பான திட்டமாகும். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதே திராவிடமாடல் ஆட்சியின் நோக்கம்ஆகும்.

அதை நமது முதல்வர் அவர்கள் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். முதல்வரின் பல்வேறு திட்டங்களை மற்ற மாநிலங்கள் செயல்படுத்த வேண்டும் என்று ஆர்வத்துடன் தமிழகத்திற்கு வந்து திட்டம் செயல்படுவது குறித்து தெரிந்து கொண்டு செல்கிறார்கள் .

மகளிர் உரிமைத் தொகைகிடைக்காமல் விடுபட்டவர்கள் 30 நாட்களுக்குள் வருவாய் கோட்டாட்சியரிடம் மேல் முறையீடு செய்யலாம். அவர்கள் மனுவும் உரியமுறையில் பரிசீலித்து அவர்களுக்கு விரைவில் தொகை கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அனைவருக்கும் இத் தொகை கிடைக்க வேண்டும் என்பதே முதல்வரின் விருப்பம்ஆகும்.கூட்டுறவு துறையை மேம்படுத்துவது குறித்து முதல்வர் அவர்கள் பல்வேறு யோசனைகளை வழங்கியுள்ளார். அதன்படி கூட்டுறவுத் துறை நவீன மயமாக்கப்ப டுவது குறித்து ஆலோசிக்கப் பட்டு வருகிறது.

தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகளுக்கு இணையாக கூட்டுறவு த் துறை வங்கிகள் செயல்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார்.

பேட்டியின் போது முன்னாள் அமைச்சர் மு . தென்னவன் , திருமதிதமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ., மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன்,காரைக்குடி நகர் கழக செயலாளர் என்.குணசேக ரன் காரைக்குடி நகர்மன்ற தலைவர் சே.முத்துதுரை ஆகியோர் இருந்தார்கள்.

# “முதல்வரின் உயர்ந்த சிந்தனையே, அவரது உயர்வுக்குக் காரணம் !”

### காஞ்சிபுரம் விழாவில் முதல்வரை வாழ்த்தி கவிதை பாடிய - கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளி!



கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட தொடக்க விழாவுக்காக காஞ்சிபுரம் வருகை தர இருந்த நிலையில், விழா துவங்குவதற்கு முன்பு “கலைஞர் செய்திகள்” தொலைக்காட்சியின் சார்பாக, விழா நடைபெறும் களத்திலிருந்து, பயனாளிகளிடம் நேரடியாகக் கலந்துரையாடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

“கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மகளிர் மாண்பை உறுதிசெய்யும் மாண்புமிகு முதல்வர் “ என்று தலைப்பிடப்பட்ட அந்த நிகழ்ச்சியில் நெறியாளர் சரவணனிடம் பேசிய ஒரு பெண்,

“நான் முதல்வர் அய்யாவுக்காக கவிதை சொல்லணும்” என்றார். மேலும், “மரியாதை நிமித்தமாக எழுந்து நின்றே சொல்கிறேன்” எனச் சொன்ன அப்பெண், தான் எழுதிக் கொண்டு வந்திருந்த கவிதையை வாசித்தார்.

அக்கவிதை வருமாறு:

“அய்யா அவர்களுக்கு வணக்கம்.
நலத்திட்டங்கள் பல தந்தீர்,
நலிந்தோர் நலன் பெற !

உங்களின் உயர்ந்த சிந்தனையே,
உங்களின் உயர்வுக்குக் காரணம் !
தமிழகம் உயர தளராது உழைக்கும்
உங்கள் எண்ணம் என்றும் தளராதது !

கம்பீரமாய் நீங்கள் இருக்க
கவலை ஏது எங்களுக்கு?
அழகான தமிழ்
அணிவகுத்து நிற்கிறது
அய்யாவைப் பற்றிப் பேச…

வார்த்தைகளில்
வர்ணனை வேண்டாம்
எங்கள் அய்யாவைப்
பற்றிப் பேச….
அவரது வருகையே
காஞ்சிக்கு வசந்தம் அல்லவா!!

வணக்கத்துடன்.
வா.துளசி ”

இங்ஙனம் கவிதையை நிறைவு செய்த அவரிடம், “எப்போது இந்தக் கவிதையை எழுதினீர்கள்?” என்று நெறியாளர் கேட்க, “நேற்றிரவு” என பதில் கூறிய துளசி, “அய்யாவைப் பார்க்க ஒரு வாய்ப்புக் கிடைத்தால் அவரிடம் நேரில் சொல்லிவிடும் ஆசையோடு இதனை எழுதி வந்தேன்” என்றார்.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து, அண்மையில் டெல்லியில் பிரமாண்டமான விளம்பரக் கோலாகலத்துடன் நடந்த ஜி20 உச்சி மாநாட்டினால் ஏற்பட்ட பயன் என்ன ?

**சிந்துமணி : ஆமாண்டி அந்து; விளம்பரங்களின் மூலம், பிரதமர் மோடியை சர்வதேச அரங்கத்தில் மிக முக்கியமான ஒரு தலைவராக முன்னிறுத்திக் கொள்ள ஜி20 மாநாடு பயன்படுத்தப்பட்டது.**

**பிரிட்டன் இதழான ‘தி அப்சர்வர்’ தனது தலையங்கத்தில், “மோடி தன்னுடைய தனிப்பட்ட செல்வாக்கை பூதாகாரமாகச் சித்தரித்துக் கொள்ளவும்; அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெறக் கூடிய தேர்தலில் தனது வாய்ப்புகளை உயர்த்திக் கொள்ளவும்; உச்சி மாநாட்டை அப்பட்டமாகப் பயன்படுத்தி இருக்கிறார்” என்று, ஏற்பட்ட பயன் குறித்துச் சான்றிதழ் வழங்கி இருப்பதைப் பார்த்து, இந்தியர்கள் பெருமை ( ! ) கொள்ளலாமே!**

### ஒடிசா மாநில முதல்வர் நவீன் பட் நாயக்கின் சகோதரி

# புகழ்பெற்ற எழுத்தாளர் கீதா மேத்தா மறைவு!


### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**வேலூர், செப். 18 - ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன்பட்நாயக் அவர்களின் சகோதரியும் - புகழ்பெற்ற எழுத்தாளரும் ஆவணப்பட இயக்குநருமான திருமிகு. கீதாமேத்தா அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-**

புகழ்பெற்ற எழுத்தாளரும் ஆவணப்பட இயக்குநரும் - ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன்பட்நாயக் அவர்களின் சகோதரி திருமிகு.கீதாமேத்தா அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன். இலக்கியத்துக்கும் ஆவணப்படத்துறைக்கும் அவர் பெரும் பங்காற்றியிருக்கிறார். அவரை இழந்து வாடும் நவீன்பட்நாயக் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# தந்தை பெரியார் வழி முதன்மை முதல்வர் ஆட்சி!



இருள்நடுவே தோன்றியஒர் கதிர வன்போல்
இடர்நடுவே தோன்றியநல் இன்பத்
தைப்போல்
மருள்நடுவே தோன்றியவெல்
தெளிவினைப்போல்
மருண்டவர்முன் தோன்றியநல் அஞ்சா
மைபோல்
தருவெறிசூழ் மதம்சாதி நடுவே தோன்று
தகைமைதரு விடியலைப்போல்
மண்ணும் வானும்
உருவாக நிமிர்ந்து நின்று சமூக நீதி
உச்சஉரை யெழுப்பிவிழிப் பைத்தந்தார் தந்தை!

பேராயக் கட்சிக்குள் இருந்த போதும்
பேரறிவு பகுத்தறிவுக் கொள்கை விஞ்ச
நேராய்ந்த உண்மைநெறிப் பாதை நேர்ந்தார்
நிமிர்ந்துசுய மரியாதைக் காக்கும் வீரத்
தேராண்மைச் சமத்துவத்தை விண்டார் மக்கள்
தேவையற்ற புராணகுப்பை மூடக் கொள்கை
தீராத நோய்களினைத் தீர்த்தார் வையத்
திசைகளெல்லாம் பகுத்தறிவு ஒளியைத் தந்தார்

பெண்ணடிமைத் தனத்தை யெலாம் ஒழித்துக் கட்டி
பீடுடனே தலைநிமிரச் செய்தார் நம்மின்
மண்ணடிமை தீர்ப்பதற்கு தி.க. கண்டார்
மானமுள்ள தமிழர்களாய் மிளிரச் செய்தார்
அண்ணாவை உருவாக்கித் தம்பி மார்கள்
அன்னைதமிழ் நாட்டைவிடு விக்கச் செய்தார்
‘கண்ணீர்த்து ளிகளெ’னப்பின் கண்ணாய்ப் போற்றி
காலத்தால் கைகொடுத்தே நிலைக்கச் செய்தார்

பகுத்தறிவுத் தந்தைநம் பெரியா ரைப்போல்
பாரில்முன் காணியர்தாம் பிறந்த துண்டோ?
பகுத்தறிவின் அவர்பாதை அறிஞர் அண்ணா
வாகை தமிழ்நாடு கண்டார் கலைஞர் எம்மான்
புகுந்தவேறு பாடுகளைப் புறம்பாய் ஆக்கிப்
பொன்னாடாய் ஆக்குவித்தார்! மு.க.இஸ்டாலின்
தகுமுதன்மை முதல்வராக வியப்பைத் தந்தார்
தந்தைதாய்நம் வழிப்பெரியார் ஆட்சி மாதோ!



பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**

# தி.மு.க. முப்பெரும் விழா - 2023 (வேலூர்) விருது பெறுவோர் வாழ்க்கைக் குறிப்புகள்!

## கி.சத்தியசீலன்

### பெரியார் விருது



இளவயது முதல் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர் திரு.சத்தியசீலன் அவர்கள். மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம், திருமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட செண்பகச்சேரி சிற்றூரில் திரு.து.கிருஷ்ணசாமி, திருமதி பொன்னாயாள் இணையரின் இரண்டாவது மகனாக 2.2.1939 அன்று பிறந்தவர் திரு.சத்தியசீலன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பேச்சுக்களால் கவரப்பட்டு, தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கினார். 1956ஆம் ஆண்டு செண்பகச்சேரி கிளைக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றினார். 1983ஆம் ஆண்டு மயிலாடுதுறை ஒன்றியச் செயலாளராகப் பொறுப்பேற்றார். 2000ஆம் ஆண்டில் நாகை மாவட்ட துணைச் செயலாளராகவும், பின்னர் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தார். பின்னர் 2006ஆம் ஆண்டில் மயிலாடுதுறை ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகப் பணியாற்றினார்.

1984ஆம் ஆண்டில் மயிலாடுதுறை சட்டப்பேரவைத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1988ஆம் ஆண்டில் மயிலாடுதுறை ஒன்றியப் பெருந்தலைவராக மக்களால் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த 85 வயதில், இன்றளவும் கழகப் பணியில் தொய்வில்லாமல் பங்கெடுத்து வரும் இவரை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், "சத்தியம் தவறாத சத்தியசீலன்" என்று அழைத்ததை பெருமையுடன் நினைவு கூர்கிறார்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம், சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு ஆறு முறை சிறைவாசம் ஏகினார்.

1960ஆம் ஆண்டில் நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், திருமதி சத்தியவாணிமுத்து ஆகியோர் முன்னிலையில் ஞாயிற்றுக் கிழமை அன்று மாலை 4.30 - 6.00 மணிக்குள் இராகு காலத்தில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர். இவரது துணைவியார் பெயர் பன்னீர்செல்வி. இவ்விணையருக்கு வளர்மதி என்ற மகளும், கண்ணன் என்ற மகனும் உள்ளனர்.

திரு. சத்தியசீலன் அவர்கள் கழகத்திற்கு ஆற்றிய பணிகளைப் பாராட்டி, தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2023), 'வேலூர், பள்ளிகொண்டா'வில் நடைபெறும் முப்பெரும் விழாவில், தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **"பெரியார் விருது"** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

**வேலூர்**
**17.09.2023**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## மாண்புமிகு. இ.பெரியசாமி

### கலைஞர் விருது



திண்டுக்கல் மாவட்டம், திரு.இருளப்பன் சேர்வை வத்தலகுண்டு நகரத்தில் திருமதி அலமேலு அம்மாள் இணையருக்கு 6.1.1953ஆம் ஆண்டு பிறந்த திரு. இ.பெரியசாமி அவர்கள், கல்லூரி மாணவராக இருந்த காலத்திலேயே மாணவர் தி.மு.க.வில் தன்னை இணைத்துக் கொண்டு தனது கழகப் பணியைத் தொடங்கினார். சட்டக் கல்லூரியில் பயின்ற காலத்தில் இரண்டாம் ஆண்டில் போராட்டத்தில் கலந்து கொண்டதால், கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டார். அன்று முதல் தீவிர கழகப் பணியில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு பல முறை கைதாகி சிறைவாசம் அனுபவித்தவர் இ.பெரியசாமி. தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட அனைத்துப் போராட்டங்களையும் திண்டுக்கல் மாவட்டத்தில் வெற்றிகரமாக நடத்தி எழுச்சி ஏற்படுத்தியவர் இ.பெரியசாமி அவர்கள்.

1992ஆம் ஆண்டில் மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுபேற்ற இ.பெரியசாமி அவர்கள் 2014ஆம் ஆண்டு வரை, இடையில் இரண்டாண்டு காலம் திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு மற்றும் தேனி மாவட்டங்கள் அடங்கிய மண்டலப் பொறுப்பாளராகப் பணியாற்றினார். இதே காலத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத்தலைவராகவும் பொறுப்பேற்றிருந்தார். 2003ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்து, 2015ஆம் ஆண்டில் கழகத் துணைப் பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டு பணியாற்றி வருகிறார்.

1986ஆம் ஆண்டில் வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1991ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். 1990ஆம் ஆண்டில் வத்தலகுண்டு நகர கூட்டுறவு வங்கித் தலைவராகப் பொறுப்பேற்றார்.

1989ஆம் ஆண்டில் ஆத்தூர் தொகுதியில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இ.பெரியசாமி, 1996, 2001, 2006, 2011, 2016, 2021 ஆகிய ஆண்டுகளில் ஏழு முறை ஆத்தூர் தொர்குதியில் போட்டியிட்டு தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறார். 2021ஆம் ஆண்டில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைவரையும் டெபாசிட் இழக்க வைத்தவர் இ.பெரியசாமி.

1996ஆம் ஆண்டு தமிழக அரசின் ஊரகத் தொழில், பத்திரப் பதிவு மற்றும் சத்துவுணத் திட்ட அமைச்சராகப் பொறுப்பேற்று பணியாற்றியதோடு, 2006ஆம் ஆண்டு வருவாய், சட்டம், வீட்டுவசதி மற்றும் சிறைத் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். 2021ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலத்துறை அமைச்சராகவும், தற்போது ஊரக வளர்ச்சித் துறை அமைச்சராகவும் பொறுப்பு வகித்து வருகிறார்.

மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகித்த காலத்தில் 1993ஆம் ஆண்டு தென் மாவட்டங்களிலேயே அதிக நிதியாக பத்து லட்சம் ரூபாய் திரட்டி, கழக வளர்ச்சி நிதி, முரசொலி அறக்கட்டளை நிதியாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார்.

"தம்பி பெரியசாமி இன்றைக்கு அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்றாலும்கூட, இந்தப் பொறுப்பு தனக்கு கிடைக்கும் என்று எண்ணி இந்த இயக்கத்திலே அவர் அடியெடுத்து வைத்தவர் அல்ல. திராவிட இயக்க உணர்வுகளை உள்ளத்தில் ஏந்திக் கொண்டு அவர் ஆற்றிய அரும்பணி, அவர் ஏற்றுக் கொண்ட அடக்குமுறைகளால் அவர் சந்தித்த எதிர்ப்புகள், இவற்றையெல்லாம் தாங்கித்தான் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் வழங்கிய லட்சியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற உள்ள உறுதியோடு அவர் இந்தப் பணியை மேற்கொண்டார்" என்று உரையாற்றினார்.

சமீபத்தில் இராமநாதபுரத்தில் நடந்து முடிந்த தென்மண்டல வாக்குச் சாவடி நிலை முகவர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "இந்த நிகழ்ச்சியை மிகுந்த எழுச்சியோடும், உணர்ச்சியோடும் ஏற்பாடு செய்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் இ.பெரியசாமி அவர்களைப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். பெரிய மீசை, பெரிய கிருதா என்று கட்டிளம் காளையாக வலம் வந்தவர், இப்பொழுது மீசை, கிருதாவோடு தாடியும் சேர்ந்துவிட்டது. வெள்ளி போன்ற தாடி, தலை நரைத்தாலும் கழகப் பணிக்கு நரையில்லை, தளர்வில்லை என்று பணியாற்றி வருகிறார் நம்முடைய ஐ.பி." என்று பாராட்டினார்.

கழகத் தலைவரின் நம்பிக்கையையும் முத்தமிழறிஞர் கலைஞரின் நம்பிக்கையையும் பெற்று ஏறத்தாழ 50 ஆண்டு காலத்துக்கு மேல் தீவிர கழகப் பணியாற்றி வரும் திரு. இ.பெரியசாமி அவர்களின் ஈடுஇணையற்ற பணிகளைப் பாராட்டிடும் வகையில், தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2023), 'வேலூர், பள்ளிகொண்டா'வில் நடைபெறும் முப்பெரும் விழாவில், தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **"கலைஞர் விருது"** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

**வேலூர்**
**17.09.2023**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## க.சுந்தரம்

### அண்ணா விருது



ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டம், பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட மீஞ்சூரில் நினைவில் வாழும் திரு.கன்னி - திருமதி கோவிந்தம்மாள் இணையரின் ஐந்தாவது மகனாக 1.7.1948 அன்று பிறந்தவர் திரு. க.சுந்தரம் அவர்கள்.

தொடக்கக் காலத்தில் தனியார் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றி வந்த க.சுந்தரம் இளமைக் காலம் தொட்டு தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமி ழறிஞர் கலைஞர் ஆகியோரது கொள்கைகளில் ஈர்ப்பு கொண்டு கழகப் பணியாற றத் தொடங்கினார்.

கழகத்தில், மீஞ்சூர் ஒன்றியப் பிரதிநிதி, ஒன்றிய துணைச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், தலை மைப் பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர் திரு.க.சுந்தரம். பின்னர், கழகத் துணைப் பொதுச்செயலாளராக தலைவர் கலைஞர் அவர்களால் நியமிக் கப்பட்டு பொறுப்பு வகித்தார். தற்போது, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு தலைவராக, கழகத் தலைவர் தள பதி அவர்களால் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்.

1989ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் பொன்னேரி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திரு.க.சுந்தரம் ஓராண்டுக்குப் பிறகு முத்தமிழறிஞர் கலைஞர் அமைச்சரவையில் ஆதிதி ராவிடர் நலத்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். "தான் அத்துறை அமைச்சராக இருந்த காலத்தில் அருந்ததியருக்கு 3 சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடை முறைக்கு கொண்டு வந்தது தனது வாழ்வில் மறக்க முடியாத ஒன்று" என்று க.சுந்தரம் மகிழ்ந்து நினைவு கூர்கிறார். அத்துடன் இந்தியாவிலேயே முதல்முறையாக ஆதிதிராவிடர் மக்களுக்குத் தொகுப்பு வீடுகளை அன்றைய ஒன்றிய அமைச்சர் பாபு ஜெகஜீவன்ராம் அவர்களைக் கொண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திறக்கச் செய்தார் என்பதையும் பெருமையுடன் குறிப்பிடுகிறார்.

1996ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அமைச்சரவையில் பால்வளத் துறை மற்றும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் துறை அமைச்ச ராகப் பொறுப்பேற்றார்.

அந்த காலகட்டத்தில், சென்னையில் கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய் ஆகிய ஆற்றங்கரைகளில் வசித்து வந்த மக்கள் வாழ்வதற்கு, சென்னை கண்ணகி நகர் பகுதியில் 5,000 குடிசைப் பகுதி மாற்று வாரிய வீடுகளை கட்டித் தந்தது தமக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கிய பெரும் வாய்ப்பு என்று கூறி மகிழ்கிறார் க.சுந்தரம் அவர்கள்.

தற்போது மாநில ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவராக பொறுப்பு வகித்து வரும் க.சுந்தரம், கழகத்தால் அறிவிக்கப்பட்ட அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

1983ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் எழிலினி அவர்களை மணந்து கொண டார். இவ்விணையருக்கு மருத்துவர் செல்லகுமார், மீஞ்சூர் பேரூர்ச் செயலாளர் தமிழ்உதயன், பொறி யாளர் அணியில் பணியாற்றி வரும் தமிழ்ப்பிரியன் ஆகிய மூன்று மகன்கள் உள்ளனர்.

இத்தகு சிறப்புக்குரிய திரு. க.சுந்தரம் அவர்களின் கழகப் பணியினைப் பாராட்டும் வகையில் தலை மைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2023), 'வேலூர், பள்ளிகொண்டா'வில் நடைபெறும் முப்பெரும் விழாவில், தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **"அண்ணா விருது"** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

**வேலூர்**
**17.09.2023**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திருமதி. மலிகா கதிரவன்

### பாவேந்தர் விருது



கழகப் பணியில் தம்மை ஈடுபடுத்திப் பணியாற்றி வரும் திருமதி மலிகா கதிரவன் அவர்கள், தொழிலதிபர் எம்.எஸ்.முகமது நயினார், ஹாஜிமா முஹைதீன் பாத்திமா இணையருக்கு மகளாக 7.7.1945 அன்று பிறந்தார். 1960ஆம் ஆண்டில் முஹமது முஸ்தபா, வெள்ளி இஸ்மாயில் பீவி ஆகியோரின் மகனான சம்சுதீன் அவர்களை மணம் செய்து கொண்டார். சம்சுதீன் அவர்கள் இளமைக் காலம் தொட்டு கழகப் பணியாற்றி வந்தவர். அவருடைய அரசியல் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்ட திருமதி மலிகா கதிரவன், அவரோடு இணைந்து கழகப் பணியில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார்.

கழக வளர்ச்சியில் தீவிரமாகப் பணியாற்றி வந்த சம்சுதீன் அவர்களின் பெயரை "கதிரவன்" என்று இனமானப் பேராசிரியர் அவர்கள் அழைத்த நாள் முதல் தன்னுடைய பெயரை 'கதிரவன்' என்றே மாற்றிக் கொண்டார்.

1967ஆம் ஆண்டு தென்காசி தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்த கதிரவன் அவர்கள், அதே தொகுதியில் 1968ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத்தேர்தலில் பெரும் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

பின்னர் 1971, 1989 ஆகிய ஆண்டுகளில் சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று 1989ஆம் ஆண்டில் சட்டப்பேரவை தலைமைக் கொறடாவாகப் பொறுப்பேற்றார். 1972ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றினார். கழகத்தின் பல்வேறு பொறுப்புகளில் திறம்படப் பணியாற்றி வந்த திரு.கதிரவன் அவர்கள் 23.4.1995 அன்று மறைவெய்தினார்.

தனது கணவரின் கழகப் பணிகளை திருமதி மலிகா சம்சுதீன் தொடர்ந்து ஆற்றி வருகிறார். சாட்டையடி சக்திவேல் அவர்கள் தொடங்கிய கலைஞர் தமிழ்ச் சங்கத்தில் இணைந்து பொருளாளர் பொறுப்பு வகித்தார். ஆசிரியர் கி.வீரமணி, சுப.வீரபாண்டியன், இரா.ஆவுடையப்பன், மகளிர் அணிச் செயலாளராக இருந்த கனிமொழி, எம்.பி., கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் ஆகியோரை அழைத்து பொதுக்கூட்டங்கள் நடத்தி, நலத்திட்ட உதவிகளைச் செய்து வந்துள்ளார்.

சமீபத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்வாக புதிய கொடிக் கம்பங்கள் அமைத்து, கழகக் கொடிகளை ஏற்றியுள்ளார்.

தம் கணவர் மறைவுக்குப் பின்னர் தாமே கழகத்தில் ஈடுபாடு கொண்டு, தன்னெழுச்சியாகக் கழகப் பணிகளை மேற்கொண்டு கணவரின் வழியில் நடைபோட்டு பணிகளை மேற்கொண்டு வரும் திருமதி மலிகா கதிரவன் அவர்களின் கழகப் பணியினைப் பாராட்டும் வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2023), 'வேலூர், பள்ளிகொண்டா'வில் நடைபெறும் முப்பெரும் விழாவில், தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **"பாவேந்தர் விருது"** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

**வேலூர்**
**17.09.2023**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தி.மு.க. முப்பெரும் விழா - 2023 (வேலூர்) விருது பெறுவோர் வாழ்க்கைக் குறிப்புகள்!

## ந.இராமசாமி

### பேராசிரியர் விருது



தன்னுடைய பள்ளிக் காலத்திலேயே கழகப் பணிகளில் ஆர்வம் கொண்டு, தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர் திரு.ந.இராமசாமி அவர்கள். கர்நாடக மாநிலம், பெங்களூரில் 15.8.1936 அன்று திரு. நடேசன், திருமதி கண்ணம்மாள் இணையரின் மூத்த மகனாகப் பிறந்த திரு.ராமசாமி அவர்களுக்கு இரண்டு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உள்ளனர்.

1951ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற தி.மு.க. முதல் மாநில மாநாட்டில் கலந்து கொள்ள தன்னுடைய நண்பர்களுடன் பெங்களூரில் இருந்து சென்னை வந்த ந.இராமசாமி, அன்று முதல் இன்று வரை கழகத்தில் தீவிர ஈடுபாடு கொண்டு பணியாற்றத் தொடங்கினார்.

கர்நாடக மாநில தி.மு.கழகத்தில் 1956ஆம் ஆண்டில் மாவட்ட பிரதிநிதியாக பொறுப்பு வகித்து, தன் பணியை தொடங்கிய அவர் பெங்களூரில் நடைபெற்ற இரண்டு கழக மாநாடுகளிலும் வரவேற்புக்குழு உறுப்பினராக பணியாற்றி உள்ளார்.

1965ஆம் ஆண்டு கர்நாடக மாநில தி.மு.கழகத்தின் துணை அமைப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, கர்நாடக மாநிலத்தில் மைசூர், பத்ராவதி, சிமோகா, தாவன்கெரே, மங்களூர், நஞ்சன்கூடு ஆகிய நகரங்களில் கழகக் கிளைகளை அமைத்து மாநிலக் கழகத்துக்கு வலு சேர்த்தார்.

கர்நாடக மாநிலத்தில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர், கே.ஏ.மதியழகன், ஈ.வே.கி.சம்பத், என்.வி.நடராஜன், ப.உ.சண்முகம், சி.பி. சிற்றரசு, ஏ.வி.பி.ஆசைத்தம்பி, கவிஞர் கண்ணதாசன், சத்தியவாணிமுத்து, டி.கே.சீனிவாசன், நாஞ்சில் மனோகரன், மதுரை முத்து, அலமேலு அப்பாதுரை, ஏ.கே.வேலன் ஆகியோரை அழைத்து கர்நாடக மாநிலத்தில் பொதுக்கூட்டங்கள் நடத்தி, கழகப் பிரச்சாரத்தை தீவிரமாக மேற்கொண்டார். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கு பெற்று பலமுறை சிறைவாசம் அனுபவித்தவர் திரு.ந.இராமசாமி.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் தொழிற்சாலைகளில் பணியாற்றி வரும் தமிழர்களின் நலனுக்காக 1958ஆம் ஆண்டில் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தையும், பொதுத் தொழிலாளர்கள் சங்கத்தையும் தொடங்கி, பல்வேறு தொழிலாளர் நலப் போராட்டங்களை நடத்தி, தொடர்ந்து தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்களை நிறுவி, தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.

மாநிலக் கழகத்தின் சார்பில் கழக முன்னோடிகளை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் விருது வழங்கும் விழா நடத்தி விருதுகள் வழங்கி வருகிறார்.

1960ஆம் ஆண்டு திருமதி என்.ஆர்.வேணி அவர்களை மணம் புரிந்தார். இவ்விணையருக்கு ஆர்.ரவி, ஆர்.ரமேஷ் ஆகிய மகன்களும், சாந்தி என்ற மகளும் உள்ளனர்.

இத்தகைய சிறப்பான பணியை கழகத்துக்காக ஆற்றி வரும் திரு. ந.இராமசாமி அவர்களுக்கு, தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2023), 'வேலூர், பள்ளிகொண்டா'வில் நடைபெறும் முப்பெரும் விழாவில், தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **"பேராசிரியர் விருது"** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

**வேலூர்**
**17.09.2023**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# 8-வது முறையாக ஆசிய கோப்பையை வென்றது இந்தியா!

கொழும்பு,செப்.18–

16வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி கொழும்பு பிரேமதாசா ஸ்டேடியத்தில் நடந்தது. முதலாவதாக களமிறங்கிய இலங்கை அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து இலங்கை அணி தடுமாறியது. இறுதியில்,15.2 ஓவரில் 50 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து இலங்கை அணி சுருண்டது. 51 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கினர்.

முதலாவதாக பேட்டிங் செய்ய களமிறங்கிய இஷான் கிஷான் 17 பந்துகளில் 23 ரன்களும், ஷூப்மன் கில் 19 பந்துகளில் 27 ரன்களும் எடுத்து வெற்றி இலக்கை அடைந்தனர்.

இறுதியில், இந்திய அணி 6.1 ஓவரில் 51 ரன்கள் எடுத்து எளிதாக வெற்றி பெற்றது. இதன்மூலம், இந்திய அணி 8வது முறையாக ஆசிய கோப்பையை வென்றுள்ளது.




## மொரீஷியசில் தடை எதிரொலி

# அதானி குழுமத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## 'செபி'க்கு காங்கிரஸ் கட்சி கேள்வி!

ஐதராபாத், செப்.18–

அதானியுடன் தொடர்புடைய 2 நிறுவனங்கள் முறைகேட்டில் ஈடுபட்டதாக மொரீஷியசில் தடை விதிக்கப்பட்ட நிலையில், இந்தியாவில் செபி மட்டும் ஏன் அதானி குழுமத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் உள்ளது என காங்கிரஸ் கேள்வி எழுப்பி உள்ளது.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறியதாவது: அதானி குழுமத்துடன் தொடர்புடைய 2 நிறுவனங்கள் மொரிஷீயசில் நிதி சேவைகள் சட்டம், பத்திரச் சட்டம், தீவிரவாத நிதி உதவி உள்ளிட்ட பல சட்டங்களை மீறியதற்காக கடந்த 2002 மே மாதம் தடை விதிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் செபியை போல, மொரீஷியசில் உள்ள நிதிச் சேவை ஆணையம் (எப்எஸ்சி) இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. தடை செய்யப்பட்ட அந்த 2 நிறுவனங்களும் அதானியின் சகோதரர் வினோத் அதானியின் கூட்டாளிகளான நாசர் அலி ஷபான் அலி மற்றும் தைவானை சேர்ந்த சாங் சுங் லிங்குக்கு சொந்தமானவை.

அலி மற்றும் சாங் ஆகியோர் இந்த மோசடி நிதி மூலம் அதானி நிறுவனங்களுக்கு சந்தேகத்திற்குரிய முதலீடுகளை செய்துள்ளனர். எனவே, மோசடி செய்த 2 நிறுவனங்கள் மீது மொரீஷியஸ் நடவடிக்கை எடுக்கும்போது, அதானி குழுமம் மீது செபி நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன்? மோடியால் உறங்கிக் கொண்டிருக்கும் செபி இனியாவது விழித்துக் கொள்ளுமா? பங்குச்சந்தையின் நியாயமான கட்டுப்பாட்டாளராக, பங்குதாரர்களின் நலன்களை பாதுகாக் கும் என்ற நம்பிக்கையை செபி ஏற்படுத்த தவறி உள்ளது. எனவே, நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு உத்தரவிட்டால் மட்டுமே உண்மை வெளிவரும். நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரில் இந்த விவகாரம் குறித்து விவாதிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 145வது பிறந்தநாளை முன்னிட்டு ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் கழகத் தோழர்களுடன் இணைந்து தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மலர்மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தி, "சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். அருகில் பகுதிச் செயலாளர் பி. குணாளன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## வெள்ளத் தடுப்பு நடவடிக்கை - வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள

# சென்னை - புறநகர்ப் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள்!

## தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா தலைமையில் ஆய்வுக் கூட்டம்

சென்னை, செப்.18-

அரசு தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா தலைமையில் நேற்று வெள்ளத் தடுப்பு நடவடிக்கை மற்றும் வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்வேறு துறைகள் மூலம் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மற்றும் வெள்ளத் தடுப்பு நடவடிக்கை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

தலைமைச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள்.

மண்டலம் 4ல் வடக்கு அவென்யூ சாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணியினை விரைந்து முடிக்க வேண்டும் என்றும், அம்பேத்கர் நீர்வழிக்கால் வாயை ஆழப்படுத்தி தூர்வாரும் பணியினை செப்டம்பர் மாதம் இறுதிக்குள் முடிக்க அறிவுறுத்தினார்கள்.

மண்டலம் 5ல் தமிழ்ச் சாலை, இராஜாஜி சாலை மற்றும் எழும்பூர் பிரதான சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினை 30.9.2023க்குள் முடிக்கவும் அறிவுறுத்தினார்கள்.

மண்டலம் 6ல் பராக்கா சாலையில் தற்போது மந்த நிலையில் பணி நடைபெறுவதால் ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தினார்கள்.

ஸ்டீபன்சன் சாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணி, Sump Work and Pumping arrangements, Sluice Gate அமைக்கும் பணிகளை 30.09.2023க்குள் முடிக்க அறிவுறுத்தினார்கள்.

மண்டலம் 7ல் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகள் அனைத்தையும் Silt Catch Pit அமைக்கும் பணியினையும் 30.09. 2023க்குள் முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

மண்டலம் 8ல் பார்த்தசாரதி சாலையில் மந்த நிலையில் பணி நடைபெறுவதால் ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தினார்கள்.

மண்டலம் 9ல் அனைத்து மழைநீர் வடிகால் பணிகளை 30.09.2023க்குள்முடிக்க அறிவுறுத்தினார்கள்.

மண்டலம் 10ல் அசோக் நகர் நான்காவது அவென்யூ சாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணியினை விரைந்து முடிக்க வேண்டும் என்றும், புஷ்பவதி அம்மாள் நீர்வழிக்கால்வாயில் தூர்வாரி மழைநீர் விரைந்து செல்ல வழிவகை செய்யுமாறும் பணிகளை செப்டம்பர் மாதம் இறுதிக்குள் முடிக்கும்படி அறிவுறுத்தினார்கள்.

மண்டலம் 11ல் மாதா கோவில் தெருவில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணியினை விரைந்து முடிக்கு மாறு அறிவுறுத்தினார்கள்.

மண்டலம் 12ல் திருவள்ளுவர் நகர் ஆறுமுகம் தெருவில் மழைநீர் வடிகால் பணி மந்த நிலையில் நடைபெறுவதால் ஒப்பந்ததாரருக்கு தாக்கீது வழங்கி மேல் நடவடிக்கை எடுக்கும்படியும் அறிவுறுத்தினார்கள்.

மண்டலம் 13ல் தலைமைச் செயலக காலணியில் மழைநீர் வடிகால் பணியினை விரைந்து முடிக்கு மாறு அறிவுறுத்தினார்கள்.

மாம்பலம் நீர்வழிக் கால்வா யில் ஒட்டியிருக்கும் அம்மா உணவகம் மற்றும் 16வது நாள் காரியக் கூட கட்டடத்தை வேறு இடத்தில் மாற்றியும் மற்றும் இங்குள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியும் மாம்பலம் நீர்வழிக்கால் வாயினை அகலப்படுத்துமாறு அறிவுறுத்தினார்கள்.

நவீன இயந்திரங்கள் கொண்டு நீர்வழிக்கால் வாயிகளில் தூரிவாரிய மண் மற்றும் கட்டடக் கழிவுகள் உடனுக்குடன் அப்புறப்படுத்தவும் மழைநீர் விரைந்து செல்லும் வகையில் பணி மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள்.

வட்டார துணை ஆணையர் (தெற்கு) கிழக்கு கடற்கரை சாலையில் திருவான்மியூர் முதல் ஈஞ்சம்பாக்கம் வரை மழைநீர் தேங்காவண்ணம் இருக்க குறுக்குச் சாலைகளில் கோவலம் வடிநில பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணி B'canalலில் வடியும் வகையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து வடிகால் பணிகளையும் 30.09.2023க்குள் முடிக்க அறிவுறுத்தினார்கள்.

கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் வரும் பருவ மழையினை எதிர்கொள்ள அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது என்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் வடபழனி மற்றும் OMR சாலைகளில் மழைநீர் தேங்காவண்ணம் நடவடிக்கை எடுக்கும்படியும் அறிவுறுத்தினார்கள்.

கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வள ஆதார துறை அவர்கள் நீர்வள ஆதார துறையினால் பருவ மழை முன்னெச்சரிக்கை ஆயத்தப்பணிகளில் அனைஏரியிலிருந்து மழைநீர் வெளியேற பல்லாவரம் சுற்றுவட்டாரச்சாலை, DLF பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி அனைத்தும் 90% முடிந்துள்ளது என்றும் மீதமுள்ள பணிகள் 30.9.2023க்குள் முடிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். தணிகாச்சலம் நீர்வழிக் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை வட்டார துணை ஆணையர் (வடக்கு), பெருநகர சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், போக்குவரத்து காவல் துறை ஆகியோர் ஒருங்கிணைந்து கூட்டு ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட இடங்களைக் கண்டறிந்து அவ்விடங்களில் பணிகளை விரைந்து முடிக்கு மாறு தலைமைச் செயலாளர் அறிவுறுத்தினார்.



இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ40 இலட்சம் மதிப்பீட்டில் 50–வது வார்டு சென்னை மாநகராட்சி உருது மேல்நிலைப் பள்ளியில் காலை மற்றும் மதியம் மாணவர்கள் உணவு அருந்துவதற்கான உணவு அருந்தும் இடம் கட்டும் பணிகளுக்கு இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். மேலும் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.10/ இலட்சம் மதிப்பீட்டில் அப்பள்ளியில் ஒரு பிரிவான மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் பெற்றோர்கள் வந்து இருந்து அவர்களை அழைத்து செல்ல காத்திருப்போர் அறை கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளது. இந்நிகழ்வில் பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார், மாமன்ற உறுப்பினர் சுரேஷ், மாநகராட்சி அதிகாரிகள் இருந்தனர்.





பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குரோம்பேட்டை பேருந்து நிலையம் தபால் நிலையம் அருகில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 145 வது பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு கழகப் பொருளாளரும் திமுக நாடாளுமன்ற குழு தலைவருமான டி. ஆர். பாலு, காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ. கருணாநிதி ஆகியோர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். அதைத்தொடர்ந்து சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். அப்பொழுது பல்லாவரம் மண்டல தலைவரும் பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை தெற்கு பகுதி கழக செயலாளர் இ. எஸ். பெர்னார்ட், செம்பாக்கம் வடக்கு பகுதி கழக செயலாளர் ஏ. கே. கருணாகரன், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் ஆகியோரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

### முரண்டு பிடிக்கும் கர்நாடக அரசு உணர வேண்டும்!

# காவிரி நீர் வழங்குவது யாசகமல்ல - தமிழ்நாட்டின் உரிமை!

## 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, செப்.18

சட்டத்தின் வழிநின்று நீர் கேட்கும் தமிழ்நாட்டிற்கு காவிரி நீர் வழங்குவது யாசமல்ல. அது தமிழ்நாட்டின் உரிமை என முரண்டு பிடிக்கும் கர்நாடக அரசு உணர வேண்டும் என தினகரன் நாளேடு 17.9.2023 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அது வருமாறு:-

நிலத்தின் உணவுக்களஞ்சியமான டெல்டா மாவட்டங்களின் பாசனத்துக்கு உயிரோட்டமாக இருப்பது காவிரி நீர். குடகுமலையில் உற்பத்தியாகும் காவிரி, ஒகேனக்கல்லில் பொங்கி பிரவாகம் எடுக்கிறது. அங்கிருந்து மேட்டூர் அணையில் சங்கமிக்கிறது. அணையில் இருந்து திறந்து விடப்படும் நீரானது பாசனப்பகுதிகளை ஆரத்தழுவி பசுமைக்கு வழி வகுக்கிறது. ஆனால் பாசனத்திற்கான நீரை கர்நாடக அணைகளில் இருந்து உரிய நேரத்தில் திறந்து விடுவதில் அம்மாநில அரசு தொடர்ந்து முரண்பட்டு நிற்கிறது.

அதேநேரத்தில் ஜனநாயகத்தின் மீது பெரும் நம்பிக்கை கொண்ட தமிழ்நாடு, பல ஆண்டு கால சட்டப்போராட்டத்துக்கு பிறகு காவிரியில் தனக்கான உரிமையை நிலைநாட்டியது. உச்ச நீதிமன்றம் வழங்கிய இறுதி தீர்ப்பின்படி



தினகரன்

செப்டம்பர் 17, 2023 ஞாயிற்றுக்கிழமை

யாசகமல்ல.. உரிமை

தமிழ்நாட்டிற்கு கர்நாடகம் ஆண்டுதோறும் 177.25 டிஎம்சி நீரை வழங்க வேண்டும். இந்த நீரை மாதம்தோறும் முறையாக வழங்க வேண்டும். ஜுன் மாதம் 9.19 டிஎம்சி, ஜுலை மாதம் 31.24 டிஎம்சி, ஆகஸ்ட் மாதம் 45.95 டிஎம்சி, செப்டம்பர் மாதம் 36.76 டிஎம்சி, அக்டோபர் மாதம் 20.22 டிஎம்சி, நவம்பர் மாதம் 13.78 டிஎம்சி, டிசம்பர் மாதம் 7.35 டிஎம்சி, பிப்ரவரி முதல் மே மாதம்வரை 2.50 டிஎம்சி என்று நீரை தமிழகத்துக்கு திறந்து விட வேண்டும் என்றும் அறிவுறுத்தியது. இதனை முறையாக கண்காணிக்க காவிரி மேலாண்மை வாரியமும் அமைக்கப் பட்டது.

ஆனால், கடந்த 5 ஆண்டுகளாக இதை முறையாக பின்பற்றாத கர்நாடகம், பெருமழைக்காலங்களில் அங்குள்ள அணைகள் நிரம்பி வழியும்போது நீரை திறந்துவிடுகிறது. இப்படி மழைநீர் வடிகாலாக மட்டுமே நமது நிலத்தை பயன்படுத்தும் கர்நாடகம், அதையே ஆணையத்திற்கும் கணக்கு காட்டி, உரிய நீரை வழங்கி விட்டதாக பசப்புகிறது. இயற்கை அன்னை அருட்கொடையாய் நீரை வார்க்கும் காலங்களில் இங்குள்ள விவசாயிகளுக்கு கவலை இல்லை. ஆனால், பருவமழை பொய்க்கும் காலங்களில் உரியநேரத்தில் கர்நாடகம் நீரை வழங்காவிட்டால் லட்சக்கணக்கான ஏக்கர் சாகுபடி வீணாகிறது. நடப்பாண்டில் இதுபோன்றதொரு இக்கட்டான நிலை, இப்போது டெல்டா விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகளின் துயரம் போக்க துரித நடவடிக்கைகளை எடுத்துள்ளது தமிழ்நாடு அரசு. எங்களுக்கே நீர் பற்றாக்குறையாக உள்ளது என்று நீலிக் கண்ணீர் வடிக்கிறது கர்நாடகம். இந்தச்சூழலில் காவிரியில் கர்நாடக அரசு தண்ணீர் திறந்து விட மறுப்பது தொடர்பாக தமிழகத்தை சேர்ந்த அனைத்துக் கட்சி எம்.பி.க்களும் ஒன்றிய அமைச்சரிடம் மனு அளிப்பார்கள் என்று அறிவித்துள்ளார் நமது முதல்வர். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி தீர்ப்பு மற்றும் 16.2.2018 தேதியிட்ட உச்சநீதிமன்ற தீர்ப்பின் படி பற்றாக்குறை ஆண்டில் தமிழ்நாட்டிற்கு நீர் வழங்க வேண்டியதை தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி நடப்பாண்டில் 14.9.2023 வரை 103.5 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டும். ஆனால், 38.4 டி.எம்.சி. மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதை துல்லியமாக கோடிட்டுக் காட்டியுள்ளார். காவிரிக்கும், தமிழ்நிலத்திற்கும் உள்ள பந்தம் தொப்புள்கொடி உறவை போன்றது. ஆயினும் சட்டத்தின் வழிநின்று நீர்கேட்கிறது தமிழ்நாடு. கண்ணியமான இந்த போக்கை கர்நாடகம் மதிக்க வேண்டும். காவிரி நீரை வழங்குவது யாசகமாக அல்ல. தமிழ்நாட்டிற்கான உரிமை என்பதை முரண்டு பிடிக்கும் கர்நாடகம் முதலில் உணரவேண்டியது மிகவும் அவசியம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவை சார்பில்

# பேரறிஞர் அண்ணா 115வது பிறந்தநாள் விழா நலத்திட்ட உதவிகள்!

## நா.மோ.முரளி – புரவலர் ந.இளவரசு வழங்கினர்

சென்னை, செப். 18 -

தென்னாட்டு காந்தி, காஞ்சி அளித்த காவியத் தலைவர், அறிவுலக மாமேதை கடமை. கண்ணியம். கட்டுப்பாட்டின் வித்தகர், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், தமிழ் மக்களின் உயர்வுக்காகவும், தமிழகத்தின் முன்னேற்றத்திற்காகவும் தன் வாழ்வையே அர்ப்பணித்த பெரும் உத்தமர், பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் வழிவந்த சுயமரியாதைப் பேரொளி, திராவிடர்களின் போர்வாள், எழுத்துலக மன்னர், கருத்தினால் மயக்கும் சொற்பொழிவா ளர்களில் வேந்தர், இந்திய அரசியல் தலைவர்களில் உன்னதமானவர், உலக சான்றோர்கள் போற்றும் நற்பண்பாளர், இயக்கத் தோழர்களையும் தொண்டர்களையும் பாசத்துடன் அரவணைத்து அவர்களை முன்னேற்றப் பாதையில் வழி நடத்துவதில் ஈடு இணையில்லாத ஒப்பற்ற எளிமையான ஒழுக்கச் சீலர், சுயமரியாதையின் அடையாளமான பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115ஆம் பிறந்தநாள் விழா, காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவையின் சார்பில் சென்னை, கோடம்பாக்கம், என்.எஸ். கிருட்டிணன் சாலை, எண். 87 & 89ல் அமைந்துள்ள மணிமொழியார் வணிக வளாகத்தருகில் உள்ள 'குறளகம்' இல்லத்தில் (15-09-2023) அன்று காலை 9 மணியளவில் தொடங்கி சிறப்பாக நடைபெற்றது. திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் முத்தான ஐந்து திட்டங்களையும் அடக்கிய துண்டறிக்கைகளை தி.மு.க. 132 வது வட்ட செயலாளர் ந.மோ. முரளி அனைவருக்கும் தேநீருடன் வழங்கினார்.

தரணியில் உள்ள தமிழர்களின் மனங்களில் எல்லாம் நாயகராக கோலோச்சிடும் செந்தமிழ்ப் பேரறிஞர் 'தம்பி' என்ற தாரக மந்திரத்தின் மூலம் உண்மையான, உணர்வுபூர்வ மான இயக்க உறவை வளர்த்த அரசியல் ஞானி இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என பார் போற்ற பெரும்வெற்றியும் சாதனைகளும் படைத்த அரசியல் சாணக்கியர், ஈன்ற அன்னைக்கு இணையாக நேசித்த தாய் நாட்டிற்கு தமிழ்நாடு என்ற உரிய பெயர் சூட்டி மகிழ்ந்து அனைவரையும் மகிழ்வித்த தனிப்பெரும் புகழுடைய மாமனிதர் அறியாமையில் ஊறி திளைத்திருந்த தமிழக மக்களை விழிப்புறச் செய்த தன்னிகரில்லாத பெருந்தலைவர், தமிழக மக்களும் மாற்றாரும் போற்றிடும் நற்குணத்தவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் புகழ் பாடி அவரின் கொள்கை வழி நடப்போம் என உறுதி பூண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளன்று அறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி அனைவருக்கும் இனிப்புகளும், அறுசுவை உணவும் வழங்கப்பட்டு. வழக்கம் போல நலத்திட்ட செயல்பாடுகளும் நடைபெற்றன. இவ்விழாவில் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகளும் மற்றத்தோழர்களும் மற்றும் தோழமைக்கு கழக நண்பர்களும், ஏனைய பொது மக்களும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

இதில் 132வது வட்டச் செயலாளர் ந.மோ.முரளி, க.சந்துரு, சி.சங்கர், எம்.டி. ஆர். வேலு, எம்.இராமச்சந்திரன், அ.இராமநாதன், தேவராஜ், ஜலந்தர், இராசன், 'செம்மொழி' சா. மணிவண்ணன், 'செய்யார்' டி.கண்ணன், செல்வம், பாஷ்யம் கேஸ் ஏஜென்சி' வேலு மற்றும் ஊழியர்கள், காங்கிரஸ் நிர்வாகிகள், எஸ்.இராசசேகர், மார்க்கபந்து, மெக்கானிக் ராஜ், பிரபல ஏ.வி.எம். நிறுவன ஒலிப்பதிவாளர் ஜெ.ஜெ. மாணிக்கத்தின் புதல்வர் தாசன், ஐ.சி.எப். வாசு, சென்னை மாநகராட்சி சண்முகம், ஹோட்டல் சந்திர பவன்' என்.இராமக்கிருட்டிணன் மற்றும் திரு.சீனிவாசன், குமார். திரு. சரவணன் உட்பட பொதுமக்களும் திரளாக கலந்துக் கொண்டு பேரறிஞர் அண்ணாவின் சீர்மிகு புகழ் பாடி சிறப்பித்தனர்.

மேலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடர்ச்சியாக கலைஞர் மற்றும் இயக்கம் சார்ந்த புகைப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன. விழா ஏற்பாடுகளை காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவைப் புரவலர் ந. இளவரசு, புலவர் ஆசி. திருமாலடிமை, 'செம்மொழி' சா.மணிவண்ணன் மற்றும் நிறுவாகி துணைச் செயலாளர் உட்பட நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தனர்.



தாம்பரம் மாநகர திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் சார்பில் தந்தை பெரியார் அவர்களின் 145ஆவது பிறந்தநாள் விழா மாநகரக் கழகச் செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா சிட்லபாக்கம் வரதராஜா திரையரங்கு எதிரில் தந்தை பெரியார் அவர்களின் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப்படத்திற்கு மலர் தூவி புகழ் வணக்கம் செலுத்தி உறுதிமொழி ஏற்றார். இதில் மண்டல குழு தலைவர்கள் எஸ் இந்திரன் டி காமராஜ் ஜெயா பிரதீப்சந்திரன் மற்றும் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் சிட்லபாக்கம் மனோகரன் மாவட்ட மாநகர பகுதி வட்ட கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி தகவல் தொழில்நுட்ப அணி வட்ட நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி தகவல் தொழில்நுட்ப அணி தாம்பரம் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொண்டு உறுதி மொழி ஏற்றனர்.



முதல்வர் அவர்களால் தமிழ்நாடு முழுவதும் 52 வாரங்கள் கொண்டாடிடும் வகையில் கடந்த ஆண்டு தொடங்கி வைக்கப்பட்ட வள்ளலார் 200 முப்பெரும் விழாவின் 50வது வார விழா நேற்று (17.09.2023) சென்னை, திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருமண்டபத்தில் நடைபெற்றது. அவ்விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். உடன், சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, வள்ளலார் முப்பெரும் விழா சிறப்பு உயர்நிலைக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### தவறுகளுக்கு இடம் கொடுக்காத ஆட்சி என்ற எண்ணம் அதிகரித்துள்ளதால்

# உபயதாரர்கள் திருப்பணிகளைச் செய்ய அதிகளவில் முன்வருகின்றனர்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, செப்.18

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (17.09.2023) சென்னை, மயிலாப்பூர், ஆதிகேசவப் பெருமாள் மற்றும் பேயாழ்வார் திருக்கோயிலில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கருங்கல் முன் மண்டபம், மடப்பள்ளி, அலுவலகக் கட்டிடம் மற்றும் திருக்கோயில் முழுவதும் புனரமைத்து வர்ணம் பூசும் திருப்பணிகளையும், திருவல்லிக்கேணி, திருவேட்டீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.72.80 லட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் திருப்பணியினையும் தொடங்கி வைத்தார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் ஆகம விதிப்படி 12 ஆண்டுகள் கடந்த திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொண்டு நன்னீராட்டு விழா நடைபெறுவதற் குண்டான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார். அதன்படி திருக்கோயில்கள் கணக்கெடுக்கப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மயிலாப்பூர் ஆதிகேசவப் பெருமாள், மயூரநாத சுவாமி மற்றும் பேயாழ்வார் அவதரித்த இத்தலத்திற்கு கடந்த 2004 ஆம் ஆண்டு நன்னீராட்டு விழா நடைபெற்றது. 19 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலுக்கு உபயதாரர் ஜெய்பிரகாஷ் வழங்கிய நிதி ரூ.3 கோடியில் திருப்பணிகள் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் இந்த பணிகளை முடித்து குடமுழுக்கு நடத்தப்படும்.

அதேபோல திருவல்லிக்கேணி, திருவேட்டீஸ்வரர் திருக்கோயிலுக்கு 30 ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட மரத்தேர் பழுதடைந்ததால் கடந்த 5 ஆண்டுகளாக தேரோட்டம் நடைபெறவில்லை. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் தெரிவித்த கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில் இத்திருக்கோயிலுக்கு ரூ.72.80 லட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் திருப்பணியினையும் இன்றைக்கு தொடங்கி வைத்துள்ளோம். ஆறு மாத காலத்திற்குள் மரத்தேர் பணி நிறைவுற்று, திருத்தேர் வீதிவுலா வரும்.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இதுவரையில் 1,075 திருக்கோயில்களுக்கு நன்னீராட்டு விழா நடைபெற்றுள்ளது, இன்றைய தினம் 31 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெறுகின்றது. அதேபோல் கடந்த 28 மாதங்களில் திருக்கோயிலின் சொத்துகளை மீட்கின்ற பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.5,213 கோடி மதிப்பிலான 5769.60 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களை புனரமைத்து திருப்பணி மேற்கொள்ள கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் தலா ரூ.100 கோடி அரசு மானியம் வழங்கினார்கள். அரசு மானியத்துடன் திருக்கோயில் நிதி, உபயதாரர் நிதி மற்றும் பொது நல நிதியின் மூலம் கடந்த ஆண்டு 143 திருக்கோயில்களிலும், இந்த ஆண்டில் 87 திருக்கோயில்களிலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது போன்று தொடர்ந்து திருப்பணிகள் மேற்கொள்கின்ற போது 5 ஆண்டுகளில் 1000க்கும் மேற்பட்ட தொன்மையான திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நிறைவு பெற்றிடும்.

திருக்கோயில் நிலங்களில் குடியிருந்து வரும் வாடகைதாரர்கள், வணிக பயன்பாட்டிலான கடைகளின் வாடகைதாரர்கள் மற்றும் குத்தகைதாரர்களிடம் அந்தந்த இடங்களில் இருக்கின்ற சூழ்நிலைக்கு ஏற்றார்போல் வாடகை நிர்ணயித்து வசூலித்து வருகிறார்கள். ஒருபுறம் வாடகை அதிகமாக இருக்கிறது என்று குடியிருப்பு வாடகைதாரர்களும், வணிக ரீதியாக வாடகைக்காரர்களும் மேல்முறையீட்டு மனுக்களை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். மறுபுறம் வாடகை குறைவாக வசூலிப்பதாக சிலர் குற்றம் சாட்டுகின்றனர். இந்த குற்றச்சாட்டு அபத்தமானது, இந்து சமய அறநிலையத்துறை பொறுத்தளவில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தான் சுமார் ரூ. 400 கோடி வாடகை நிலுவைத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது. வாடகை நிர்ணயத்தை சீர்படுத்திட தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு ஒருங்கிணைப்பு குழுவை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமைத்திருக்கின்றார். இக்குழு வாடகை நிர்ணயம் செய்வது குறித்து முழுமையாக சாதக, பாதகங்களை ஆய்வு செய்து கொண்டிருக்கின்றது. வெகு விரைவில் இதற்கு ஒரு தீர்வு ஏற்படும்.

உபயதாரர்கள் நிதியை விட இந்து சமய அறநிலையத்துறை நிதிதான் அதிக அளவில் திருப்பணி மற்றும் குடமுழுக்கிற்கு செலவிடப்பட்டு வருகின்றது. தனிநபர்கள் திருக்கோயில்களின் திருப்பணியை உபயதாரர்களாக முன் வந்து செய்திட வரவேற்று அதற்காக பணி ஆணையினை வழங்குவது இந்து சமய அறநிலையத்துறை தான். இந்த ஆட்சியின் மீது இருக்கின்ற நம்பிக்கையும், நாம் செலவிடுகின்ற தொகை முழுவதுமாக இறைவனுக்கு சென்றடையும் என்ற நம்பிக்கையுமே உபயதாரர்கள் அதிகளவிற்கு நிதி தந்து திருப்பணிகளை மேற்கொள்வதற்கு காரணமாகும். இந்த ஆட்சி சொன்னதை செய்கின்ற ஆட்சி, தவறுகளுக்கு இடம் கொடுக்காத ஆட்சி என்ற எண்ணம் உபயதாரர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

நேற்றைய தினம் சென்னையில் அதிகளவிற்கு மழை பெய்தாலும் எங்கும் பெரிய அளவிற்கு தண்ணீர் தேங்கவில்லை. மழை நின்றவுடன் அடுத்த அரை மணி, ஒரு மணி நேரத்தில் தண்ணீர் முழுவதுமாக வடிந்து விட்டது. முதலமைச்சர் அவர்கள் எடுத்த துரித நடவடிக்கையின் காரணமாக 2021ல் இருந்த மழை நீர் தேக்கம் 2022 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளில் குறைந்திருக்கின்றது. வரும் பருவமழைக்கு முன்பாக மழைநீர் வடிகால் பணிகள் அனைத்தையும் முடிக்க வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

அரசால் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்பணிகள் முழுமையாக நிறைவு பெற்றவுடன் சென்னையில் மழை நீரால் ஏற்படும் பாதிப்பும் இருக்காது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ. முரளீதரன், பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர் என்.சிற்றரசு, சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, மண்டல குழு தலைவர் எஸ்.மதன் மோகன், துணை ஆணையர்கள் இரா.ஹரிஹரன், திருமதி சி.நித்யா, அறங்காவலர் ராமானுஜம், செயல் அலுவலர் திருமதி கங்கா தேவி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளில் கலைஞர் மகளிர் உரிமை தொகை ரூபாய் 1000 முதலமைச்சர் அவர்கள் வழங்கியதற்கு நன்றி தெரிவித்து பெரம்பூர் சட்ட மன்ற உறுப்பினர் ஆர். டி. சேகர் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கி மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை துண்டு பிரசுரங்களாக அச்சிட்டு பொதுமக்களுக்கு வழங்கினார்.உடன் பகுதி செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன் மாவட்ட துணை செயலாளர் எஸ். ஆர். கமலக்கண்ணன், பொது குழு உறுப்பினர் ஏ.தமிழ்ச்செல்வன் மாமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி சி.ஆனந்தி வட்ட செயலாளர்கள் கே.வி.ராஜன், மு.உமாபதி, கே.ஈ.செந்தமிழரசு, வி.முருகன், கி.தினகரன், த.ஆறுமுகம், ஆர். எஸ். மனோகரன், பகுதி துணை செயலாளர் வி.வேதா மாவட்ட துணை அமைப்பாளர்கள் வை.கௌதமன், பிரசிடென்சி சி.சதீஷ், என்.டி.சேகர், பி.ரவிசங்கர், ஆர்.டி.கார்த்திக், க.ஜெயராஜ், ஜி.பி. மோகன் பாபு இளைஞர் அணி அமைப்பாளர்கள் எச்.ராஜ்குமார் சி.சுரேஷ் கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நீலகிரி காந்தல்ராஜ்**

**செப்டம்பர் 18 (1981)**



நீலகிரி மாவட்ட தி.மு.க. செயலாளராகப் பணியாற்றியவர்.

நெருக்கடி நிலையை எதிர்த்து மிசா கைதியாக இருந்தவர்.

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை கண்டித்து நடைபெற்ற மறியலில் பங்கேற்று சிறையிலிருந்தபோது மரணடைந்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - வேலூர் மாவட்டம் - மேல்மொணவூர் விழாவில் நேற்று இலங்கைத் தமிழர்களுக்கு புதிய இல்லங்களைத் திறந்துவைத்து சிறார்களுடன் உரையாடிய காட்சி!









முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.9.2023) பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் வேலூர் மாவட்டம், மேல்மொணவூர், இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமிற்கு நேரடியாக சென்று வீடுகளை திறந்து வைத்து, வீடுகளை பார்வையிட்டு பயனாளிகளிடம் விசாரித்தார். இந்நிகழ்வின் போது நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், து.மு.கதிர் ஆனந்த், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், பா.கார்த்திகேயன், திருமதி அமலு விஜயன், திருமதி ஆ. தமிழரசி, வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறை ஆணையர் திருமதி ஜெசிந்தா லாஸரஸ், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.









தந்தை பெரியாரின் 145 வது பிறந்த நாளையொட்டி சேலத்தில்இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தந்தை பெரியாரின் முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, சமத்துவ நாள் உறுதி மொழி எடுத்துக் கொண்டார். உடன்..வீட்டுவசதி மற்றும் மதுவிலக்கு. ஆயத் தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர். எஸ். கார்மேகம் சேலம் மாவட்ட கழக செயலாளர்கள். இரா. இராஜேந்திரன் எம். எல்.ஏ.(சேலம் மத்திய மாவட்டம்) எஸ். ஆர். சிவலிங்கம் (சேலம் கிழக்கு மாவட்டம்) டி.எம். செல்வகணபதி ( சேலம் மேற்கு மாவட்டம்) மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர். ஆ.க. தருண் உட்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர். பகுதி, கோட்ட கழக நிர்வாகிகள். அணைத்து அணிகளின் நிர்வாகிகள். உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள். இருந்தனர்.

## பிரதமர் மோடி பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, செப். 18 –

பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவு வருமாறு:

பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்.

தாங்கள் நீண்ட ஆயுளுடனும், நல்ல உடல்நலத்துடனும் திகழ வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## காஞ்சிபுரம் - மதுரமங்கலம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில்

# பணியில் இல்லாத மருத்துவர்மீது துறைரீதியான விசாரணை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் உத்தரவு!

சென்னை, செப்.18-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுப்பிரமணியன் நேற்று (17-9-2023) காஞ்சிபுரம் மதுரமங்கலம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது மருத்துவர் பணியில் இல்லை ஆனால் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டுள்ளார்.

அமைச்சர் அம்மருத்துவரை அலைபேசியில் அழைத்து கேட்டதற்கு ஆயுஷ் நிகழ்ச்சி மாற்றுப் பணியில் இருந்ததாக கூறினார்.


மதுரமங்கலம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவித்த தாய்மார் ஒருவரும் மற்றும் பிரசவத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஒருவரும் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் மருத்துவர் பணியில் இல்லாமல் கூறும் காரணம் முன்னுக்குப் பின் முரணாக உள்ள காரணத்தினால்,அவர் மீது துறை ரீதியான விசாரணை மேற் கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சர் மா.சுப்பிரமணியன் காஞ்சிபுரம் மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குனருக்கு உத்தரவிட்டார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, நேற்று முன்தினம் (16.09.2023) சனிக்கிழமை, திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் கற்க கல்வி அறக்கட்டளை இணைந்து கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் தந்தை பெரியாரின் வெண்கல சிலை திறப்பு விழா மற்றும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கும் விழா நடைபெற்றது. இதில், திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்துகொண்டு, தந்தை பெரியாரின் வெண்கலச் சிலையைத் திறந்து வைத்து, அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, திரைப்பட நடிகர் சத்தியராஜ், மாமன்ற உறுப்பினர்கள் ரத்னா லோகேஷ்வரன், கனிமொழி தனசேகரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# திராவிட மாடல் அரசு 35

**'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**






## இரண்டே ஆண்டுகளில் ஆயிரம் குடமுழுக்கு!

நம் கழக அரசு மகத்தான சாதனை ஒன்றை ஆர்ப்பாட்டமில்லாமல் படைத்திருக்கிறது. ஆம்... ஆயிரம் கோயில்களில் குடமுழுக்கு நடத்தி முடித்திருக்கிறது.

நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான **'திராவிட மாடல் அரசு'** பொறுப்பேற்ற பிறகு, தமிழர்களின் கலை, பண்பாடு மற்றும் கலாசாரத்தைப் பறைசாற்றும் பெட்டகங்களான திருக்கோயில்களைப் புனரமைத்துப் பாதுகாத்திடும் வகையில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்குகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில், ஆயிரமாவது குடமுழுக்காக சென்னை, மேற்கு மாம்பலம், அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில் குடமுழுக்கு கடந்த 10-ஆம் தேதி வெகு விமரிசையாக நடைபெற்றிருக்கிறது.



### நூற்றாண்டு கோயில்களுக்குக் குடமுழுக்கு

இந்து சமய அறநிலையத்துறை, தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள தொன்மையான திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்கு நடத்துதல், திருக்குளங்கள், திருத்தேர்கள் மற்றும் நந்தவனங்களைச் சீரமைத்தல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துகளை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல், திருக்கோயில்களின் வருவாய் இனங்களை முறைப்படுத்தி வசூலித்தல் போன்ற பல்வேறு பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

திருக்கோயில்களில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆகம விதிப்படி குட முழுக்கு நடத்தப்பட வேண்டும். அதன்படி, குடமுழுக்குகள் நடைபெறாத திருக்கோயில்களைக் கண்டறிந்து திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்தும் பணிகளை முன் எப்போதும் இல்லாத அளவுக்குக் கடந்த 26 மாதங்களில், அதாவது 2021 - ஆம் ஆண்டு மே மாதம் 'திராவிட மாடல் அரசு' அமைந்தது முதல், இந்து சமய அறநிலையத் துறை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு அருள்மிகு ஆதி கேசவப் பெருமாள் திருக்கோயில் 400 ஆண்டுகளுக்குப் பிறகும், காஞ்சிபுரம் மாவட்டம், சாத்தனஞ்சேரி, அருள்மிகு கரியமாணிக்க வரதராஜ பெருமாள் திருக்கோயில் சுமார் 300 ஆண்டுகளுக்குப் பிறகும், இராணிப் பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், தக்கோலம், அருள்மிகு கங்காதீஸ்வரர் திருக்கோயில் சுமார் 150 ஆண்டுகளுக்குப் பிறகும், திருநெல்வேலி மாவட்டம், அரிகேசவநல்லூர், அருள்மிகு பெரியநாயகி சமேத அரியநாத சுவாமி திருக்கோயில் 123 ஆண்டுகளுக்குப் பிறகும், வேலூர் மாவட்டம், வெட்டுவானம், அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில் 110 ஆண்டுகளுக்குப் பிறகும், ஐந்து திருக்கோயில்கள் 100 ஆண்டுகளுக்குப் பிறகும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளன.

- 6 திருக்கோயில்கள் 70 ஆண்டுகளுக்குப் பிறகும்,
- 15 திருக்கோயில்கள் 50 ஆண்டுகளுக்குப் பிறகும்,
- 15 திருக்கோயில்கள் 30 ஆண்டுகளுக்குப் பிறகும் குடமுழுக்கைக் கண்டுள்ளன.
- 2021 டிசம்பர் 8 முதல் 2023 செப்டம்பர் 10 வரை 1,030 கோயில்களில் குடமுழுக்கு நடை பெற்றுள்ளது.

### திருப்பணிகளுக்குத் தாராள நிதி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆயிரம் ஆண்டுகள் முற்பட்ட தொன்மையான திருக்கோயில்களைப் புனரமைத்து திருப்பணி மேற்கொள்ள 2022 - 2023 ஆம் நிதியாண்டில் ரூ.100 கோடியும், 2023 - 24 ஆம் நிதியாண்டில் ரூ.100 கோடியும் அரசு மானியமாக வழங்கியுள்ளார்கள்.

அதன்படி 2022 - 2023 ஆம் நிதியாண்டில் ரூ.140 கோடி மதிப்பீட்டில் 113 தொன்மையான திருக்கோயில்களும், 2023 - 24 ஆம் நிதியாண்டில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் 84 திருக்கோயில்களும் அரசு மானியம், திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்கள் பங்களிப்புடன் புனரமைத்துப் பாதுகாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஜெயலலிதா அம்மையாரின் ஆட்சி காலங்களில், அவரது விருப்பம், ராசி, நட்சத்திரத்துக்கு ஏற்ப கணித்து ஒரே நாளில் 10 கோயில்கள். 20 கோயில்களுக்குச் சேர்த்து குடமுழுக்கு நடத்துவர். இப்போது அந்த நடைமுறை இல்லை. அந்தந்த கோயில்களுக்கு ஏற்ப குடமுழுக்கு முடிவு செய்யப்படுகிறது.

மேலும் 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட சுமார் 30-க்கும் மேற்பட்ட திருக்கோயில்களிலும், தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த 27 திருக்கோயில்களில் 23 திருக்கோயில்களுக்கும் இரண்டு ஆண்டுகளில் குடமுழுக்கு நடத்திட அனுமதி அளிக்கப்பட்டு திருப்பணிகள் நிறைவுற்று, குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளன.

### கிராமப்புறக் கோயில்களுக்கும் கவனம்

கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் பட்டியலின மக்கள் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ள ஆண்டுதோறும் தலா 1,000 கோயில்கள் என்ற எண்ணிக்கை 1,250 ஆகவும், நிதியுதவி தலா ரூ.1 லட்சம் என்பது ரூ.2 லட்சமாகவும் உயர்த்தப்பட்டு இதுவரை 2,500 கிராமப்புற திருக்கோயில்களுக்கும் 2,500 பட்டியலின மக்கள் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கும் ரூ.100 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

2023 - 2024 ஆம் நிதியாண்டில் திருப்பணி மேற்கொள்வதற்கு 1,250 கிராமப்புற மற்றும் 1,250 பட்டியலின மக்கள் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களைக் கண்டறியும் பணி நடைபெற்று வருகின்றது.

மாநில அளவிலான வல்லுநர் குழுவால் 7,142 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளன. அதில் 2,235 திருக்கோயில்களில் ரூ.1,120 கோடி மதிப்பீட்டிலான 5,855 திட்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நமக்குக் கடவுள் பிடிக்குமா என்பதை விடக் கடவுளுக்குப் பிடிக்கும் விதத்தில் நாம் நடந்துகொள்கிறோமா என்பதுதான் முக்கியம். கோயிலைக் கட்டிய மகாராணியையே கோயிலுக்குள் விடாத சனாதனத்துக்கு வக்காலத்து வாங்குவோர் மத்தியில் கோயில்களுக்கு இப்படி எல்லாம் தமிழ்நாட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுதான் எல்லோருக்கும் எல்லாம் என்கிற **திராவிட மாடல் அரசு.**

**...சாதனை தொடரும்**

## ஃபிடில் வாசிக்கும் அறிவுச் சமூகம்!

இந்து மதம் என்பதற்கும் இந்துத்துவா என்பதற்கும் இருக்கும் வித்தியாசம் மிகப் பெரியது. தெரிந்தோ தெரியாமலோ பல படித்தவர்களே (academically) இதைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதுகூட இல்லை. அவர்களைப் பொறுத்தவரை பா.ஜ.க.வை ஆதரிப்பதும், தி.மு.க.வை எதிர்ப்பதும்தான் இந்து மதம் என்று அடம் பிடிக்கிறார்கள்.

எளிதாகச் சொல்ல வேண்டும் என்றால்,

'மகாத்மா காந்தி ஒரு தீவிர இந்து மதப் பற்றாளர்

நாதுராம் கோட்சே தீவிர இந்துத்துவப் பற்றாளர்'

அறிவுக்குத் துளி சம்பந்தமும் இல்லாத, எந்த வரலாற்று ஆய்வுகளோ, சான்றுகளோ இல்லாத வியாசர், ராமர், அனுமார் கதைகளை உண்மை என்று கொண்டாடுகிறார்கள். வரலாற்றுப் பின்னணியோடு இந்தக் கதைகளை உடைக்க முயற்சித்த அம்பேத்கர், பெரியாரை எல்லாம் பொய்யர்கள் என்று வெறுக்கிறார்கள். ஏன், அவர்கள் இந்த நிலை எடுக்க வேண்டியிருந்தது என்ற சமூகக் காரணங்களைச் சுலபமாக மறந்துவிடுகிறார்கள்.

இதையெல்லாம் கடந்து இந்துத்துவம் கடந்த ஒன்பது ஆண்டுகளில் நாட்டு மக்களுக்கு என்ன செய்திருக்கிறது என்று ஆராய்ந்தால், எப்போதும் இல்லாத அளவுக்கு ஊழல் தலைவிரித்து ஆடிக் கொண்டிருக்கிறது. 140 கோடி மக்களையும் சுரண்டி சில பேர்களை மட்டும் உலகப் பணக்காரர்களாக்கி இருக்கிறது. சாதி வெறியும், மத வெறியும் படித்தவர்களையும் முட்டாளாக்கிக் கொண்டிருக்கிறது. பெரும்பான்மை அறிவுச் சமூகமோ எப்போதும்போல ஃபிடில் வாசித்துக் கொண்டிருக்கிறது.

துயரம்தான்!

**-சுவாமிநாதன் ராஜாமணி முகநூல் பதிவு.**

## ஃப்ளாஷ்பேக்



### நுழையாத கணையாழி!


இராமச்சந்திரன்

1991-ஆம் ஆண்டு ஈரோட்டில் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம், அன்றைய மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. அதிக நிதி வசூல் செய்த வட்டக் கழகச் செயலாளர்களுக்குக் கணையாழி அணிவிக்கும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணத்தால், தலைவர் கலைஞர் அவர்கள் எனக்கு கணையாழி அணிவித்தார். விரலில் நுழையாத காரணத்தால் "என்னய்யா போக மாட்டேங்குது" என்று கேட்டார். 23 வயது இளைஞனாக இருந்த நான் ஒரு பவுனாக இருந்திருந்தால் போயிருக்கும் என்றேன். தலைவர் கலைஞர் சட்டென்று 'அதை உங்க கணேசமூர்த்தியிடம் கேளுய்யா' என்றது சுற்றி இருப்பவர்களைச் சிரிப்பலையில் ஆழ்த்தியது. எத்தனை கடினமான சூழலையும் இலகுவாக்கத் தெரிந்தவர் தலைவர் கலைஞர்.

**-இராமு (எ) பொ.இராமச்சந்திரன், பகுதிக் கழகச் செயலாளர், ஈரோடு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண் டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கலப்புத் திருமண உதவிகள்!

**1975-ஆம் ஆண்டு கலப்புத் திருமணங்களை ஊக்கப்படுத்தும் வகையிலான திட்டங்களைக் கொண்டு வந்தார் கலைஞர். கலப்புத் திருமணம் செய்பவர்களுக்குக் குடும்ப நிதியாக ஏழாயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது. மணமக்கள் இரண்டு வேறு சாதியினராக இருந்தால் மட்டும் போதாது, இருவரில் ஒருவர் ஆதிக்கச் சாதி எனக் கருதப்படுகிறவராகவும், இன்னொருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பு எனக் கருதப்படுகிறவராகவும் இருந்து, அவர்கள் அந்தச் சாதிக் கொடுமைகளில் இருந்து விடுபட்டு, சமத்துவ நிலையில் மணம் புரிபவர்களாகவும் இருக்கவேண்டும் என்ற விதிகளை உருவாக்கினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 244




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131


கலைஞர் கருணாநிதி பொன் விழா வளைவு
18.09.2023 – மாலை 5 மணி
சைதாப்பேட்டை –பஜார் சாலை
ARASU ARTS
முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு வளைவு திறப்பு விழா
விழாவிற்கு வருகை தரும்
கழக இளைஞரணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
திரு. மா.சுப்பிரமணியன் அவர்களையும்
திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ■ துணை மேயர் மு.மகேஷ்குமார்
பகுதி செயலாளர்கள்
எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. ■ இரா.துரைராஜ் எம்.சி.
ஆகியோரை வருக.வருக.. என அன்புடன் வரவேற்கும்
வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் M.A.,L.L.B.
தலைமை பொதுக்குழு உறுப்பினர் – 140வது வார்டு மாமன்ற உறுப்பினர்



சைதையின் அடையாளம்..!
டாக்டர் கலைஞர் பொன்விழா வளைவு
100 1924 - 2023 நூற்றாண்டிற்கான புது பொலிவுடன்...
மாண்புமிகு மா.சுப்பிரமணியன் B.A., LL.B.,
சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
அவர்களின் முன்னிலையில் திறந்து வைக்க வருகை தரும்...
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
தமிழச்சி தங்கபாண்டியன்
மு.மகேஷ்குமார்
எம்.கிருஷ்ணமூர்த்தி
இரா.துரைராஜ்
சைதை மா.அன்பரசன்
வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன்
எஸ்.பி.கோதண்டம்
எம்.நாகா
அன்புடன் அழைத்து மகிழும்
ஆர்.எல்.செல்வம்
ஆர்.எல்.காந்தன்
தீ.ராஜ்குமார் ✧ தி.எழிலரசன் ✧ இரா.சுதாகர் ✧ ச.அஜித்
நாள்: 18.09.2023 திங்கட்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி




டாக்டர் கலைஞர் பொன்விழா வளைவு
100 நூற்றாண்டிற்கான புதுப்பொலிவுடன்
நாள்: 18.09.2023 திங்கட்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
சென்னை தெற்கு மாவட்ட செயலாளர்
மா.சுப்பிரமணியன் B.A., LL.B.,
அவர்களின் முன்னிலையில்
திறந்து வைக்க வருகைதரும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி
செயலாளர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே
வருக! வருக!!
தமிழச்சி தங்கபாண்டியன் MP
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
மு.மகேஷ்குமார் MC
துணை மேயர்
பெருநகர சென்னை மாநகராட்சி
AMV பிரபாகரராஜா MLA
சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
இரா.துரைராஜ் MC
சைதை கிழக்கு பகுதி கழக செயலாளர்
13 வது மண்டலக்குழுத் தலைவர்
எம்.கிருஷ்ணமூர்த்தி MC
சைதை மேற்கு பகுதி கழக செயலாளர்
10 வது மண்டலக்குழுத் தலைவர்
மாவட்ட துணை அமைப்பாளர்கள்
எம்.விநாயகமூர்த்தி ச.சங்கர்கணேஷ்
ஆர்.கிருஷ்ணகுமார் ஜெ.இ.பாண்டியன்
கா.வீ.தியாகராஜன் செ.ரவி
சைதையின் அடையாளம்!
RAM DESIGNS @9884593766
அன்புடன் வரவேற்கும்: கோட்டூர் S.பிரகாஷ் B.E., M.B.A., LL.B.,
மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்
சென்னை தெற்கு மாவட்டம் தி.மு.க.இளைஞர் அணி



நாள்: 18.09.2023 திங்கட்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி
சைதையின் அடையாளம்..!
டாக்டர் கலைஞர் பொன்விழா வளைவு
கலைஞர் 100 1924 - 2023 நூற்றாண்டிற்கான புது பொலிவுடன்...
மாண்புமிகு
மா.சுப்பிரமணியன் B.A.,LL.B.,
சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
அவர்களின் முன்னிலையில் திறந்து வைக்க வருகை தரும்...
முதல் தலைமுறை பட்டதாரியை ஊக்கப் படுத்த
வருகை தரும்...
திராவிட தலைமுறையே!
அவர்களே வருக! வருக!!
எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி.
சைதை மேற்கு பகுதி தி.மு.க செயலாளர்
10வது மண்டலக்குழுத் தலைவர் - பெருநகர சென்னை மாநகராட்சி
இரா.துரைராஜ் எம்.சி.
சைதை கிழக்கு பகுதி தி.மு.க செயலாளர்
13 வது மண்டலக் குழுத் தலைவர் - பெருநகர சென்னை மாநகராட்சி
Santhosh Design 99401 80492
அன்புடன்... ஆசிரியர்: விஸ்வனூர் வே.தளபதி
மனிதமே முதன்மை!
முற்றம்
பல்சுவை இதழ்




சைதையின் அடையாளம்..!
டாக்டர் கலைஞர் பொன்விழா வளைவு
கலைஞர் 100 1924 - 2023 நூற்றாண்டிற்கான புது பொலிவுடன்...
மாண்புமிகு மா.சுப்பிரமணியன் B.A.,LL.B.,
சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
அவர்களின் முன்னிலையில் திறந்து வைக்க வருகை தரும்...
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
அவர்களே வருக! வருக!!
முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
மு.மகேஷ்குமார்
துணை மேயர் - பெருநகர சென்னை மாநகராட்சி
எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி.
சைதை மேற்கு பகுதி செயலாளர்
10வது மண்டலக்குழுத் தலைவர் - பெருநகர சென்னை மாநகராட்சி
இரா.துரைராஜ் எம்.சி.
சைதை கிழக்கு பகுதி செயலாளர்
13 வது மண்டலக் குழுத் தலைவர் - - பெருநகர சென்னை மாநகராட்சி
சைதை மா.அன்பரசன்
தலைமை பொதுக்குழு உறுப்பினர்
வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன்
தலைமை பொதுக்குழு உறுப்பினர்
தா.மோகன்குமார்
168 வது வார்டு மாமன்ற உறுப்பினர்
சைதை மேற்கு - கிழக்கு பகுதி வட்டச் செயலாளர்கள்
எம்.நாகா ✧ எஸ்.பி.கோதண்டம் ✧ சை.மு.சேகர் ✧ ந.தமிழரசு ✧ அட்கோ கமலநாதன் ✧ நா.ராதாகிருஷ்ணன்
சைதை மு.இராஜா ✧ எல்.ஆரோக்கியராஜ் ✧ க.மணி ✧ கோட்டூர் கோ.சண்முகம் ✧ எஸ்.ஆர்.செந்தில் ✧ நேருநகர் எஸ்.பாட்சா
Santhosh Design 99401 80492
நாள்: 18.09.2023
திங்கட்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி
அன்புடன் வரவேற்கும்.... எம்.எஸ்.ஹரிபாபு BE.,
மாவட்ட அமைப்பாளர்
சென்னை தெற்கு மாவட்ட
தி.மு.க கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை


கலைஞர்
100
1924 - 2023
கலைஞர் மகளிர் உரிமைத் தொகை
ரூ.1000 வழங்கிய
கழக தலைவர்-மாண்புமிகு
தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களுக்கு
நெஞ்சார்ந்த
நன்றி! நன்றி!!
நன்றி!!!
MKSTUDIO
Cell : 9500758141
இங்ஙனம்.
மாண்புமிகு. அர.சக்கரபாணி
உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்
தே.மதியழகன்,MLA
மாவட்ட கழக செயலாளர்
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க


கலைஞர்
100
1924 - 2023
கலைஞர் மகளிர் உரிமைத் தொகை
ரூ.1000 வழங்கிய
கழக தலைவர்-மாண்புமிகு
தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களுக்கு
நெஞ்சார்ந்த நன்றி!
நன்றி!! நன்றி!!!
மாண்புமிகு அர.சக்கரபாணி
உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்
திரு. Y.பிரகாஷ் MLA.,
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர்
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க